

# இரவீந்திரநாத தாகுர் எண்ணக் களஞ்சியம்

தமிழாக்கம்

புலவர் த. கோவேந்தன், டி.லிட்.

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# இரவீந்திரநாத் தாகுர்
# எண்ணக் களஞ்சியம்

தமிழாக்கம்

புலவர் த. கோவேந்தன், டி. லிட்.


**சேது அலமி பிரசுரம்**

8, முத்துகிருஷ்ணன் தெரு, பாண்டி பஜார்
தி. நகர் :: சென்னை—600 017.

# நூல் விவரம்


- நூல் பெயர் : இரவீந்திரநாத தாகுர் எண்ணக் களஞ்சியம்
- ஆசிரியர் : இரவீந்திரநாத தாகுர்
- தமிழாக்கம் : புலவர் த. கோவேந்தன், டி.லிட்.
- உரிமை : பதிவு
- மொழி : தமிழ்
- பொருள் : பல்பொருட் சிந்தனை
- நூல் அளவு : கிரவுன் 1 × 8
- தாள் : 11.6 கி.கி வெள்ளைத்தாள்
- எழுத்தளவு : 10 புள்ளி
- பக்கங்கள் : 208
- முதற் பதிப்பு : நவம்பர், 2001

- வெளியீடு : சேதுஅலமி பிரசுரம்
8, முத்துகிருஷ்ணன் தெரு,
பாண்டிபஜார், தி. நகர்,
சென்னை – 600 017.

விலை : ரூ. 50–00

- ஒளியச்சு : பி.ஜி.பி. பெரிஃபெரல் சர்வீசஸ்
சென்னை – 600 041.
- அச்சிட்டோர் : மணி ஆப்செட்,
சென்னை – 600 005.

# இரவீந்திரநாத தாகுர்

உலகப் பெருங்கவிஞர்களில் இந்திய நாட்டுக்குப் பெருமை சேர்ப்பவர் இரவீந்திரநாத தாகுர் - இளங்கோ - சீத்தலைச் சாத்தனார் - கொங்குவேளிர் - திரிகூடராசப்ப கவிராயர் ஆகியோரின் ஓங்கிய கருத்து - மொழிவளம் - சிந்தனைப் போக்கு அனைத்திலும் மேலாய் ஒளிப்பவர் இவர்.

மனித இனத்திற்குச் சுவைபயக்கும் அனைத்து இலக்கியத் துறையிலும் சிறந்து விளங்கினாலும் பாடலின் திறத்தாலே வையத்தைப் பாலித்த - பாலிக்கும் உயர் இடம் பெற்றிருப்பவர்.

பல்லாயிரக் கணக்கான மக்களின் வெளியிட முடியாத உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் புத்தம் புதிய உவமைகளாலும் உருவகங்களாலும் கருத்தூற்றை மலையூற்றாய்த் தருபவர். மாந்த இனத்தின் இயற்கை அழகுயிர்ப்பையும் இனிய துன்பங்களையும் எல்லா வகை இலக்கியங்களிலும் வியப்புற வெளிப்படுத்துகிறவர்.

இயற்கை - காதல் - வாழ்க்கை ஆகிய முக்கோணத்தில் மனித நல நாட்டத்தையே மன வெழுச்சியில் வான் மழையை - நிலச் செழிப்பை - தீச்சுடரை - நாற்றிசைக் காற்றினை மொழியில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று விழைந்து தருபவர்.

தெள்ளிய நடையும் சீரிய பொருளும் வீறிய சிந்தனையையும் எவரும் வாழ்வியக்கத்தில் பெற்று மகிழச் செய்யும் அறிவின் ஒளியும் புதுப்புது சொல்லாட்சியும் சொற் செட்டும் கூரிய சீரிய சிந்தனைத் திட்டமும் ஒளிரச் செய்பவர்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களையும், இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட இன்னிசையின் பண் சுமந்த பாடல்களையும் தீட்டியுள்ளவர். உள்ளத்தில் ஆழ்ந்த படிப்பறிவையும் பட்டறிவையும் சிறுகதை, புதினம், நாடகங்கள் எனப்பன்முக இலக்கியமாகத் தந்துள்ளவர்.

உலக முழுதும் சுற்றிச் சுற்றி சொற்பொழிவுகள் ஆற்றி ‘சாந்தினிகேதன்’ பல்கலைக்கழகம் அமைத்தவர். உலக மக்கள் உணர்வுக்கும் உணர்ச்சிக்கும் ஊட்டமளிக்கும் அவர் மொழியோவியங்கள் சொற் சிற்பங்களும் என்றும் அழியாதவை. அவற்றை நுகர்க.

**- தி. ஸ்ரீனிவாசராஜகோபாலன்**

# இரவீந்திரநாத தாகுர்
# நூல் சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அஞ் | - | அஞ்சலகம் |
| ஆ | - | ஆளுமை |
| இ.அ | - | இருள்மனை அரசன் |
| எதிர் | - | எதிர்ப்படுதல் |
| எ.சு | - | எழுச்சியின் சுழற்சி |
| க.பா | - | கபீரின் பாடல்கள் |
| க.வே | - | கல்லின் வேட்கை |
| க.கொ | - | கனி கொய்தல் |
| கா.ப | - | காதற் பரிசு |
| கீ | - | கீதாஞ்சலி |
| கோ | - | கோரா |
| சா | - | சாதனா |
| சித் | - | சித்திரா |
| தோ | - | தோட்டக்காரன் |
| நா | - | நாடோடி |
| நினை | - | நினைவலைகள் |
| நி.எ | - | நினைவின் எச்சங்கள் |

| | | |
|---|---|---|
| ப.ப | - | பட்டிப் பறவைகள் |
| படை | - | படைப் பொருமை |
| மின் | - | மின் மினிகள் |
| வ.பி | - | வளர்பிறை |
| வீ வெ | - | வீடும் வெளியும் |

# நாடு விழித்தெழுக!

எங்கு மனம் அச்சமற்று விளங்குகிறதோ, எங்கே தலை பெருமிதத்துடன் நிமிர்கிறதோ, எங்கு அறிவு தன்னுரிமையுடன் பொலிகிறதோ, எங்கு குறுகிய சாதி மதப் பிரிவு பிளவுகளால் உலகம் சிதையாமல் உருப்பெற் றிருக்கிறதோ, எங்கு உண்மையின் ஆழத்தினின்று சொற்கள் உதயமாகின்றனவோ, எங்கே தளரா முயற்சி முழுநிறைவை நோக்கிக் கைகளைப் பரப்பு கின்றதோ, எங்கு பகுத்தறிவு என்னும் தெளிந்த ஆறு மாண்டொழிந்த பழக்கங் களான திகைப்பூட்டும் பாலை மணலில் பாயாது மீள்கிறதோ, எங்கே விரிந்த எண்ணத்திலும் செயலிலும் எனது உள்ளத்தை நினது அருள் இழுத்துச் செல்லுகிறதோ, அந்த உரிமைப் பொன்னுலகில் எந்தாய் எனது நாடு விழித் தெழுவதாக.

–கீ

# இரவீந்தரநாத தாகூர் எண்ணக் களஞ்சியம்

தன் காதலன் முன்பாக விரிந்து பரந்த தனது முகத்திரையை விலக்கிக் கொள்கிறது உலகம். அது அழிவற்ற ஒரு முத்தம் போல, ஒரு பாட்டைப் போன்று சிறியதாக ஆகிவிடுகிறது. - ப.ப.

* * * *

ஒளியின் குழந்தைகளே மாந்தர்கள். தங்களைத் தாங்களே நன்கு அறியும் பொழுது, தாங்கள் அழியாநிலை பெற்றவர்கள் என்பதை அறிந்து கொள்கிறார்கள். - ஆ

* * * *

அமைதியாகிய கடலின் மேற்பரப்பில் மிதந்து கொண்டிருக்கும் மாறி மாறி எழும் நுரைபோன்றது உலகம். - மி.மி

* * * *

முடிவற்ற உலகங்களின் கடற்கரையிலே குழந்தைகள் கூடுகின்றன. - வ.பி

* * * *

கானகத்தில் அலைந்து திரியும் பறவையாகிற எனது நெஞ்சம் விண்ணாகிய உன் கண்களைக் கண்டு விட்டது. தனித்து நிற்கிற அந்த விண்ணை நோக்கி நான் மேலும் மேலும் உயரே செல்வேனாக. - தோட்

* * * *

அளவற்றது தனது எல்லை என்பதை என்று மாந்தன் உணர்கிறானோ, என்று அவன் தெய்வீக நிலையை அடைகிறானோ, அந்த இறை உணர்வே அவனுள் உறைகிற படைப்பாளி. - ஆ

* * * *

ஓசை களைப்புற்றிருக்கும் அந்தக் கங்குலில் கடலின் முணு முணுப்பு விண்ணை நிறைக்கிறது. அன்பு வழிபாடாக உருவெடுப்பதும் அந்த நேரத்தில் தான். - எ

* * * *

எல்லையற்ற வானகம் மேலே அசைவற்று இருக்கிறது. முடிவற்ற உலகங்களின் கடற்கரையிலே கூச்சலிட்டுக் கொண்டும் மகிழ்ச்சிக் கூத்தாடிக் கொண்டும் குழந்தைகள் கூடுகின்றன. -வ.பி

* * * *

என் நெஞ்சத்தை நீ வருடி விடுகிறாய், அதன் ஆழ் பொருளை உணர்த்திட என் தனிமைக்கு நிழலளிக்கிறது இன்புற்றிருக்கும் விண்ணகம். - ஆ

* * * *

முழுமையான வைகறைப் பொழுது அருகில் நெருங்கி வருகிறது. அந்த நேரத்தில் இதர உயிர்களுடன் உனது உயிர் ஒன்றிவிடுகிறது. முடிவில் உன் குறிக்கோளை யும் நீ புரிந்து கொள்கிறாய். -க.கொ

* * * *

இருள் படர்ந்திருக்கும் சந்துகளிலும் நம்பிக்கை ஒளியை உறுதி செய்வது இறைவனால் மட்டுமே இயலும். -நி

* * * *

சிரிப்புடன் பொங்கி எழுகிறது கடல். மென்மையான ஒளியுடன் முறுவலிக்கிறது கடற்கரை. சேயின் தொட்டிலை ஆட்டும் தாய்போல இருக்கும் அலைகள் குழந்தையின் செவிகளில் விழும்படிப் பொருளற்ற தாலாட்டைப் பாடுகின்றன. குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடுகிறது கடல்; வெளிறிய முறுவல் பூக்கிறது கடற்கரை! -வ.பி

* * * *

கருப்பையிலிருந்து வெளியேறிய பின்னர்தான் குழந்தை தாய் முகம் காண்கிறது. உன்னிடமிருந்து நான் பிரியும்போதுதான் உன் முகத்தை நான் எளிதில் காண முடியும். -த.கெ

* * * *

மனத்தின் கிளர்ச்சியற்ற இருண்ட குகைகளில், பகலில் பயணிகள் விட்டுச் சென்ற சிதறல்களைக் கொண்டு

மனக் கனவுகள் தங்களின் கூடுகளைக் கட்டிக் கொள் கின்றன. -மின்

*　*　*　*

என்னை நெருங்கி நெருங்கி அவன் வருவதை நான் உணர்கிறேன்; என் நெஞ்சம் மகிழ்ச்சியினால் துள்ளுகிறது. -அஞ்

*　*　*　*

காதல் பரிசு நாணமடைகிறது, தன் பெயரை அது சொல் வதேயில்லை, புழுதியுனூடே மகிழ்ச்சி அதிர்வைப் பரப்பிய வாறே நிழலின் குறுக்கும் நெடுக்குமாகப் பறந்து திரிகிறது.- கா.ப.

*　*　*　*

பாதையே இல்லா வானத்திலே சூறைக்காற்று அலைந்து திரிகிறது; சுவடு தெரியாதக் கடலிலே கப்பல்கள் மோதியுடைகின்றன. காலன் உலா வருகிறான்; குழந்தைகள் விளையாடுகின்றன. - வ.பி

*　*　*　*

பசும்புல் தரையிலிருந்து கிளர்த்தெழும் மலர் கணனுக்கு எத்தனை அருகில் உள்ளதோ, அதைப் போன்றே அவள் என் நெஞ்சத்தின் அருகில் இருக்கிறாள். -கா.ப

*　*　*　*

காணிக்கைகள் கொண்டு இறைவனை நெருங்கும்

பொழுது, உண்மையிலேயே நாம் அவனைச் சந்திக்கிறோம். வரங்களை வேண்டிச் செல்லும் பொழுது, அவ்வாறில்லை.

- எ.எ

* * * *

குழந்தாய், அரசன் உன்னை நேசிக்கிறான். உன்னைக் காண அவனே வந்து கொண்டிருக்கிறான்.

-அறவே

* * * *

இந்தப் புல், இப் புழுதி, அந்த விண்மீன்கள், ஞாயிறு, திங்கள் இவற்றின் மறைவில் நிற்கும் நீ ஓவியமா? வெறும் ஓவியமா?

-நூ.பா

* * * *

அவ்வப்பொழுது உனது உயர்ந்த கேட்போர் அவையிலிருந்து கீழிறங்கி வா. இன்ப துன்பங்களுக்கிடையே வாழ்ந்து பார். என் நெஞ்சத்தைத் தொடுமாறு இசை பொழிவாய்.

-படை

* * * *

என் தலைவா,தந்திகள் மீட்டப்படும்போது அதிகமாக வலி ஏற்படுகிறது.

இசைக்கத் தொடங்கு; என் வலியை மறந்திருப்பேனாக. கருணையற்ற இந்த நாள்களில் உன் உள்ளத்தில் நுகர்ந்ததை நான் அதில் உணர்வேனாக.

- க. கொ

* * * *

பாப்பாவுக்குத் தெரிந்த அறிவுச் சொற்கள் எத்தனை யோ! எனினும் அவற்றின் பொருளை அறியக் கூடியவர் இவ்வுலகில் மிகச் சிலர் தான்! - வ்.பி

* * * *

காலைப் பொழுதில் ஒளியாகிய தன் உள்ளத்தை உலகம் திறந்து வைத்துள்ளது.

வெளியே புறப்பட்டு, வருவாய் என் உள்ளமே. அன்புடன் அதைச் சந்திப்பாயாக. -ப. ப

* * * *

மனித உலகில் சிறப்பானவை யாவற்றையும் இறை வனிடத்தில் மனிதன் வைத்துள்ள நம்பிக்கை எழுப்பியுள்ளது. - படை

* * * *

திடீரென எவ்வாறு என் நெஞ்சம் தன் வாயில்களைத் திறந்து வைத்துள்ளது? எனக்குப் புரியவில்லை. -நினை

* * * *

அன்பிற்குரியவளே, உன்னை நான் விரும்புகிறேன். என் அன்பே என்னை மன்னித்து விடு. வழிதவறிய பறவை யின் நிலையில், நான் இருக்கிறேன். - தோட்

* * * *

நீரோடையின் முணுமுணுப்பைப் போன்று, என் அன்புக்குரியவளுடன் எனது பாடல்கள் ஒன்றிப் போயுள்ளன. - கா.ப.

* * * *

என் தலைவனே, உனது பேச்சு எளிமையானது, ஆனால் உன்னை பற்றிப் பேசுகிறவர்களின் பேச்சு அப்படி யில்லை. - க.கா

*     *     *     *

என் குழந்தையின் தனி உலகத்துக்கு நடுவில், அமைதி நிலவும் ஒரு சிறுமூலை கிடைத்தால் கூடப் போதும்; அவ்வளவு ஆர்வம் எனக்கு! - வ.பி

*     *     *     *

சுமையாயிருக்குமாகில் கொடையாளிகளின் பட்டிய லிலிருந்து. என் பெயரை நீக்கி விடுவாய். ஆனால் என் பாடலையன்று. - மின்

*     *     *     *

களைத்துள்ள உறுப்புகளுக்குத் தூக்கம் போன்று அவள் எனக்கு இனியவள். -கா.ப

*     *     *     *

என் நண்பனே, எனது அன்பு என்றுமே உனக்கு சுமையாயிருந்து விடக்கூடாது. அது பலனளிப்பது என்று புரிந்து கொள். - மின்

*     *     *     *

மனிதன் குழந்தையாகவே பிறக்கிறான். வளர்ச்சியின் ஆற்றலே அவனது ஆற்றல். -ப.ப

என் அன்பே, தோட்டத்தில் என் கூட உலாவிட வா.

உன் கண்ணில் படுவதற்காகத் துடித்துக் கொண்டிருக்கும் ஒளி வீசும் மலர்களைக் கடந்து செல்வாய். -கா.ப.

* * * *

இருளின் நுழைவாயில் முன்னர் பகல் தன் யாழினை மீட்டுகிறது. மறைவதாயிருந்தாலும் முதலில் தோன்று வதைக் கண்டே பகல் மனநிறைவு அடைகிறது. -மின்

* * * *

ஒவ்வொரு விதையிலும் உயிர்த்தன்மை இருப்பது போல, இறைவன் என்னுள் இருக்கிறான், உன்னிடமும் இருக்கிறான். -க.பா

* * * *

அவள் மட்டும் என்னுடையவளாய் இருந்து விட்டால், இவ் உலகின் மிகச் சிறிய மூலையிலும் கூட நான் மனநிறைவுடன் இருப்பேன். -கா. ப

* * * *

என் விருப்புகள் பித்தானவை.

இறைவா, உனது பாடல்கள் இசைக்கப்படும் பொழுது, அவை உரக்கக் கத்தி ஆர்ப்பாட்டம் செய்கின்றன. உனது பாடங்களைக் கேட்க மட்டும் என்னை அனுமதிப்பாயாக. - ப.ப.

* * * *

பலர் பேருலகமாகக் காண்பதை என்னிடமுள்ள இந்த ஒன்றே நன்கு அறிந்து வைத்துள்ளது. - படை

* * * *

என் அன்புக்குரியவன் எனது நெஞ்சத்திலேயே வாழ்கிறான். அதனால் தான் அவனை நான் எங்கும் காண்கிறேன். - கி.ஆ

* * * *

கடலருகில் தோட்டத்தில், நெருங்கி வரும் கோடைக் காலத்தில் அன்பு மலருமாக. - கா.பா

* * * *

பேரண்டத்தின் அடி ஆழத்திலிருந்து கிளம்பிடும் எதிரொலி நம்மிடம் அன்பு செலுத்துபவனின் முகத்திலிருந்து நமது நெஞ்சத்தில் எதிரொலிக்கிறது. - நினை

* * * *

மிகச் சிறந்ததை நான் தேர்ந்தெடுக்க இயலாது. மிகச் சிறந்தது எதுவோ அது என்னைத் தேர்ந்தெடுக்கிறது. - ப.ப.

* * * *

தன்னைக் கடந்த வாழ்க்கையில்தான் மனிதன் உண்மையில் வாழ்கிறான். அறிந்திறாத ஆண்டைக்காக அவன் உழைக்கிறான், உலகில் பிறந்திராதவர்களுக்காக சேமித்து வைக்கிறான். - எ.எ.

* * * *

எவனொருவனின் பேச்சு தூய்மையாயிருக்கிறதோ, எவனொருவன் செருக்கையும், தற்பெருமையையும் விட்டொழித்திருக்கிறானோ அத்தகையவன் உண்மையான பெயரடைகிறான். - கா.ப.

* * * *

# எங்கே கடவுள்?

வழிபாடு, தொழுதல், வேண்டுதல், பூசனை அனைத்தையும் விட்டொழி; கோயிலுள்ளே கதவடைத்து யாரைத் தேடி நீ அலைகிறாய்? இருளில் புகுந்து மனத்துள்ளே யாரைக் குறித்து வழிபடுகிறாய்? கண்ணைத் திறந்து நன்றாகப் பார். கடவுள் உன் இல்லத்தில் இல்லை. உழவர் உழன்று பயனைக் காணும் வயல் வெளியில் வாழ்கிறார் அவர். உடல் வருந்தக் கல்லை உடைத்து சாலை அமைப்போரிடம் அவரைப் பார். வெயில் மழையிலும் அந்த ஏழை எளியவருடன் புழுதியில் அவர் பணி செய்வதைக் காண்!

உனது துவராடையை களைந்து எழுந்து வா! அவரைப் போல் நீயும் புழுதியில் உழலடா! வீடு, வீடு எங்குளது விடுதலை. எது வீடு? கடவுளே தன் படைப்பில் கட்டுண்டு இருப்பதைப்பார்? தியானத்தைக் கட்டி வை; பூக்குடலையைப் புறம்தள்வது! கிழிந்த கந்தலாகட்டும் உன் ஆடை! தூசி படிந்து அது அழுக்கு ஏறட்டும். தொழில் புரியும் அவருடனே நீயே ஒன்றியே உழைத்திடுவாய்; நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டச் சொட்ட பாடுபடு. -கீ

நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பதே ஒரு நிலைத்த மருட்கை வியப்புதான். வாழ்க்கை என்பது அது தான். -ப.ப.

* * * *

பெண்ணே, இறைவனது படைப்பு மட்டுமல்ல நீ. மனிதர்களின் படைப்பும் தான் நீ. தங்கள் தங்கள் உள்ளங்களிலிருந்து இயற் பண்புகள் என்றென்றும் உனக்கு வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள். நீ ஒரு பாதி பெண், மறுபாதி கனவு. - தோட்

* * * *

தனக்குத் தெரிந்ததையெல்லாம் கைகழுவி விட்டு, தெரியாத ஒன்றைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறது காதல். - ப.ப

* * * *

அங்கே கூர்மதி தன்னுடைய முறைமைகளைக் காற்றாடிகளாக்கிப் பறக்க விடுகின்றது. மெய்மை உண்மை நிகழ்சிகளின் தளைகளை அறுத்து விடுகின்றது. - .ப.ப.

* * * *

உறங்கிக் கொண்டிருக்கும் பறவைகளைக் கூடு எவ்வாறு தாங்கி நிற்கின்றதோ, அதே போன்று அமைதி உனது குரலைத் தாங்கி நிற்கிறது. - ப.ப

* * * *

இளமை கொண்ட மருட்கையுடன், நீ ஒரு நாள் என் வாழ்வில் புகுந்து கொண்டாய். - கா.ப.

* * * *

நீ விரும்புவதற்காக என்று உன் நெஞ்சத்திலிருந்து ஓர் உருவத்தை என் வாழ்க்கையோடு பிணைக்கச் சொல்லி இருந்தேன் நான். ஒரு நாள் உன்னிடம் விரைவு உண்மை, அழகு, காட்சிக்கினிமை அத்தனையும் அள்ளி வந்தாய் நீ.
- க.பொ

* * * *

உனது சிறப்புகளுக்காக நான் உன்னை பாராட்ட முற்பட்டபோது, மலர்ந்தொளிரும் மரம் போல் நீ அதிர்ந்து நின்றாய். - மின்

* * * *

படைப்புத் தொழிலில் தன்னையே காண்கிறான் இறைவன். -ப.ப

* * * *

காதல் சுவையில் உன் தகுதிக்கேற்ப, தீர்க்க முடியாத அளவிற்கு உனக்குக் கடன் பட்டிருக்கிறேன். -மின்

* * * *

என்னிடம் கூற முடியாதவை யாவற்றையும்

உன்னுடைய செம்மலர்கள் தங்களுடைய தகிக்கும் அமைதியில் கூறிவிடுகின்றன. - கா.ப.

* * * *

"நாள்கள் ஓடுகின்றன; ஆனால் நான் உனக்காக என்றும் காத்திருப்பேன்," என்றது காதல். - க.கொ

* * * *

சிறிய இலைகளின் மனம் மயக்கும் அசைவில் காற்றின் கண்ணுக்குப் புலப்படாத கூடத்தை நான் காண்கிறேன் அவற்றின் மங்கிய ஒளிவீச்சில் விண்ணின் கமுக்கம் உள்ள துடிப்புகளைக் காண்கிறேன். - மின்

* * * *

உலகனைத்தையும் தொட்டுத் தொடரும் அளவு ஒன்றே. முற்றிலுமாக இதை உணர்பவர்கள் வெகு சிலரே. - க.பா

* * * *

காதலின் மொழியை அதன் மெட்டுக்கேற்ப பாட முடியும் என்று எண்ணினேன், ஆனால் அந்தப் பாட்டு என் நெஞ்சில் ஒலிக்கிறது; கண்கள் பேசவில்லையே. - கா.ப.

* * * *

நண்பனே மெட்டு என்பதே இல்லாமலிருந்தால் உன்னால் அவற்றை இனம் காண இயலுமா கூறிடு. -த.ஓ

* * * *

இந்த மண்ணில் மலர்ந்த முதல் மலர் பிறக்காத பாட்டிற்குள்ளிருக்கும் அழைப்பிதழ். - மின்

* * * *

கதவைத் திறந்திடு, காத்திருக்கிறேன் நான். இன்றைக்கான பணி முடிந்துவிட்டது. மாலை விண்மீன் தோன்றத் தொடங்கிவிட்டது. - இ.அ

* * * *

என் காதலியே எனது பணிவன்பைச் செலுத்த உன்னிடம் இன்று தான் வந்திருக்கிறேனென்றால், என்னை மன்னித்து விடு. - கா.ப.

* * * *

எங்கிருந்தோ புறப்பட்டுக் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேர்கிற நீரோடை; உண்மை, நல்லவை இவற்றின் முகவர். எல்லையற்ற பரப்பிற்குத் திரும்பிச் செல்கிற அதன் எதிரொலிதான் அழகும், மகிழ்ச்சியும். - நினை

* * * *

என் இதயமே, விரைந்திடு இன்றைய நாள் மறைவதற்குள் காதலிலேயே திளைத்திடு. - பா.சு

* * * *

உனது மூச்சு இன்பம், துன்பம் இரண்டிலும் மாறி மாறி என்னை முக்கியெடுக்கிறது. நாள் முழுவதும் நான் இசையையே கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்றால்,

நான் சிறிதும் கலங்க மாட்டேன். காரணம் இசையின்மேல் எனக்கு அத்தனை காதல். - தா.ஒ

* * * *

அடிமை மனப்பான்மையுள்ள தூரிகை, குறுகிய சித்திரத் திரையின் அளவுக்கே உண்மையைக் குறைத்துக் காட்டுகிறது. · மி.மி

* * * *

உண்மையையும் அழகையும் வாழ்க்கை இணக்கத்தில் காண்கிறது. இதை நான் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. - ப.இ

* * * *

உலகியல் நோக்கில் செல்வத்தை வைத்து மனிதன் எடை போடப்படுகிறான். தகுதியோ அன்பின் அடிப்படையில் எடைபோடப்படுகிறது. - ப.ப

* * * *

நல்லது செய்கிறவன் கோவிலின் நுழை வாயிலை அடைகிறான்; அன்பு செலுத்துகிறவன் கருவறையையே அடைகிறான். - மின்

* * * *

கொடுப்பவனின் மனத்தைச் சார்ந்திருப்பது அன்பு. ஏழையிலும் ஏழையும் கூட, இதில் வள்ளலாயிருக்கமுடியும். · தா.ஒ

ஒருவனுக்கு மட்டுமே வழங்குவதற்காக அளிக்கப் பட்டதில்லை, இந்த எனது நெஞ்சம். பலருக்கும் வாரி வழங்குவதற்காகவே ஏற்பட்டது அது. - தோட்

* * * *

உலகின் கடற்கரையில் எனது நெஞ்சத் துடிப்புகள் அலை மோதுகின்றன. அங்கே 'உன்னை நான் விரும்புகிறேன்' என்கிற சொற்களைக் கண்ணீரால் எழுதப் பட்டுக் கையெழுத்திடப்படுகிறது. - ப.ப

* * * *

மாலைப் பொழுதின் அரையிருள் நேரத்தில், அதி காலைப் பறவை, அமைதியாகிற எனது கூட்டிற்கு வந்து சேர்கிறது. - ப.ப

* * * *

அன்பாகிய பேரரசில் நமது ஆன்மா இடம் பெற்றுள் ளது என்பதை எவனொருவன் தன் வாழ்க்கை மூலம் மெய்பிக்கிறானோ, அவன்தான் நமக்கு உதவி செய்கிறான். - எ.எ

* * * *

காது கொடுத்து கேட்கும் மேலுலகிடம் பேசுவதற்கு நிலம் எடுத்துக் கொள்ளும் எண்ணற்ற முயற்சிகளே மரங்கள். - மின்

* * * *

இந்த பாழ்நிலப் பகுதியில் எனக்கு வழிகாட்ட உனது காலடியோசையையே நான் நம்பியுள்ளேன். - ப.சு

* * * *

என்னிடம் உள்ளவற்றையெல்லாம் நான் ஈடு வைப்பேன். என்னிடமுள்ள கடைசிக் காசைத் தோற்கும் போது நான் என்னையே ஈடுவைப்பேன். எனது படுதோல்விக்குப்பின் நான் வென்றுள்ளதாக எண்ணுவேன். - க.கொ

* * * *

மலை உச்சியில் படர்ந்திருக்கும் பனிப் பாறையை ஞாயிற்றின் முத்தம் கரைப்பது போல், உனது விழிகள் என் நெஞ்சத்தை உருக்குகின்றன. - தா.ஓ

* * * *

சித்திரை மாதத்தின் மகிழ்வான இரவில் அறிநதிராத அன்பிற்காகக் காத்திருப்பது எவ்வளவு இருண்மை படர்ந்ததோ, அது போன்றே அவன் கருநிறமுடையவன். - கா.ப

* * * *

நமது மகிழ்ச்சியான நாள்கள் யாவையும் பணச்செலவிற்கு வழி வகுத்தவை. - எ.எ

* * * *

நிலத்தாயே, உன்னிடத்திற்கு நான் வேற்றாளாக வந்தேன். உன் வீட்டில் ஒரு விருந்தாளியாக வாழ்ந்தேன். உன் வீட்டை விட்டு நண்பனாக வெளியேறுகிறேன். - .ப.ப

* * * *

விதையொன்றின் நெஞ்சத்தில் காத்திருக்கும் நம்பிக்கை ஓர் அற்புதத்தை வாக்களிக்கிறது. ஆனால் உடனே அந்த வாக்கை அது மெய்ப்பிக்க முடியாது. - மின்

* * * *

கடல் தன் மகிழ்ச்சியை தம்பட்டமடித்துக் கொண்டிருக்கிறது. மலர்கள் உன்னை முத்தமிடத் துடித்துக் கொண்டிருக்கின்றன. என் குழந்தாய், தாய் மண்ணின் கைகளில் உன்னிடம் விண்ணகமே பிறப்பெடுக்கிறது. - கா.ப.

* * * *

கும்மிருட்டு. எனது அமைதியில் நீ ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறாய்.

காதலின் துயரமே, கண்விழித்திடு. ஏனெனில் வாயிலைத் திறந்திடும் வழியறியேன் நான், வெளியே காத்திருக்கிறேன்.

விழித்தெழு, காதலே, விழித்தெழுவாய். எனது வெற்றுக் குவளையை நிறைத்திடு. இசையின் மூச்சும் காற்றினால் இரவின் அமைதியை அசைத்திடு. - க. கோ

* * * *

கன்று காலிகள் தங்கள் கொட்டிலுக்குத் திரும்புகின்றன. பறவைகள் தங்கள் கூட்டிற்குத் திரும்புகின்றன. உன் கதவைத் திறந்துவிடு. நான் காத்துக் கொண்டிருக்கிறேன். - இ. அ

* * * *

ஓ, என் நெஞ்சமே, காதலி எங்கு வசிக்கிறாளோ, அந்த நாட்டுக்கு நாம் சென்றிடுவோம். - க.பா

* * * *

உனது நிழல் மாடி முகப்பைப் கடந்து செல்லும் வரை நான் காத்திருந்து கவனிப்பேன். நிறை மனத்தோடு திரும்பிடுவேன். - க.கொ.

* * * *

ஓ உலகமே, எனது இறப்பிற்குப்பின், உனது அமைதியில் எனக்காக "நான் விரும்பியிருக்கிறேன்" என்கிற சொல்லை நினைவில் இறுத்திக் கொள். - ப.ப.

முழு முகக்கண்ணாடியில், அழகி தன் முகத்தைப் பார்க்கும்போது, அழகே உண்மையின் புன்முறுவலாகக் காட்சியளிக்கிறது. -மி.மி

* * * *

என் அன்பே, வாழ்க்கை தோன்றுவதற்கு முன்னரே, எளிய கொந்தளிப்புடன் கூடிய உன் இரத்தத்துடன் இனிய கனவுகளாகிற ஏதாவதொரு அருவியின் அடியில் நீ நின்றிருந்தாய் - கா.ப

* * * *

கடலில் கலக்கும் ஓர் ஆறு போல், ஓய்வு நேரத்தின் ஆழத்தில் உழைப்பு தனது நிறைவைக் காண்கிறது. - மின்

* * * *

என் நெஞ்சத்தை இழந்துவிடும் அளவிற்கு அவள் நாவிலிருந்து இத்தகைய இசையை ஏன் நான் பறித்துக் கொள்ள வேண்டும்? - மின்

* * * *

அவன் நல்லவன், கெட்டிக்காரன் என்பதற்காக நான் அவனை விரும்பவில்லை. அவன் என் குழந்தை என்பதற் காகத்தான் நான் அவனை விரும்புகிறேன். - வ.பி

* * * *

தடைகள் யாவற்றையும் மீறி பாட்டிசைத்தவாறே ஆறு விரைவாகச் செல்கிறது.

ஆனால் மலையோ இருந்த இடத்தில் நின்று அவளை நினைவுபடுத்திக் கொள்கிறது; அன்பு மூலம் அவளைத் தொடர்கிறது. - வ.பி

* * * *

அன்பே, என்னை நீ விரும்புவதனால் எனது மகிழ்ச் சியை மன்னித்துவிடு. எனது செருக்கை மிதித்திடு; - தோட்

* * * *

தேடுதல்களைப் போன்று, மரங்கள் விண்ணக மண்ணகத்தை கண்ணோட்டமிடுவதற்காக குதிகால்களில் நிற்கின்றன. - மின்

* * * *

அன்பின்றி உண்மை கைம் பொண்ணாகிறது.

- த.ஓ

*    *    *    *

கண்ணீர்த் துளி அல்லது புன்னகைப்போன்று, உள் மனத்தில் நிகழ்ந்து கொண்டிருப்பதன் வெளிச்சித்திரம் தான் பாட்டு.

- நினை

*    *    *    *

தன்னிச்சை இல்லாமலேயே நினைவு கொள்ளாமல் தவித்துக் கொண்டிருக்கும் மனித ஆற்றலை வழிநடத்தி மனிதனுக்குத் தூண்டுதலாயிருப்பவள் தான் பெண். -ப.ஓ

*    *    *    *

தன்னிடம் கைநீட்டி இறைவன் வரும்பொழுது, மனிதன் தன் செல்வச் செழிப்பை உணர்கிறான். - மின்

*    *    *    *

ஆழம் காணமுடியாத இன்ப ஊற்றிலிருந்து எண்ணற்ற சிரிப்புச் சிதறல்கள் உலகம் முழுவதும் தெறித்துக் கிடக்கின்றன.

- நினை

*    *    *    *

தன் முகத்திரையை நீக்கியவாறு, ஓசையின்றி அன்பு நடைபோட்டு, நிழல் பணிவுடன் ஒளியைத் தொடர்கிறது.

- ப.ப

*    *    *    *

கண்கள் பார்ப்பதென்னவோ மண்ணையும், தும்பு தூசையும்தான்; ஆனால் உணர்வது நெஞ்சத்தின் மூலமே. மாசற்ற மகிழ்ச்சியடைகிறது அதில். - த.ஓ

* * * *

இரவாகிய ஆழமான புதிரிலிருந்து இன்னும் ஆழமான பகலாகிய புதிருக்குள் புகுவது தான் பிறப்பு. - மின்

* * * *

பாடல் கனிகளால் என் நெஞ்சத்தை நிரப்பிடும் வகையில் உனது அமைதியின் மையத்திற்கு என்னை இட்டுச் சென்றிடு. - ப.ப

* * * *

உரிமையுடன் செயல்பட, வெளி உலகின் மென்மை யான் அழுத்தமன்று நாம் வேண்டுவது. உலகின் சுமையை எளிதாக மட்டுமல்ல மகிழ்ச்சியுடன் தாங்குவதற்கான உரமளிக்கும் அன்பையே நாம் வேண்டுவது. - எ.எ

நிலைத்திருக்கும் அன்பு மொழியைப் பாடிக் கொண் டிருக்கின்றன விண்மீன்கள். - க.கொ

* * * *

முடிவற்ற வைகறையின் வளையத்தில் புதிய இலை களில் புதியதாகப் பிறப்பெடுக்கிறது அதோ செங்கதிர். - மி.ன்

* * * *

நான் உன் கைகளைப் பற்றிக் கொள்கிறேன். உனது கரிய விழிகளில் புகுந்து கொள்கிறது என் நெஞ்சம். - மின்

* * * *

தேவன் தன்னுலகில் இயங்கிக்கொண்டிருக்கிறார். ஆனால் தேவியோ நமது அடி ஆழ இருண்மையில் கண் துயில் கொண்டிருக்கிறாள். - எ.எ.

* * * *

அடக்கிவைக்கப்பட்ட அன்பின் ஆழமான துயரமாக மலர்கின்றன இளவேனிற் காய் மலர்கள். - கா.ப.

* * * *

என்னுடைய பலமற்ற தோணியைக் கொண்டு ஆசைக் கடலைக் கடக்க நான் தவித்துத் திணறுகிறேன். என் முயற்சியும் விளையாட்டுத்தான் என்பதை மட்டும். ஐயோ, நான் மறந்தே விடுகிறேன்.

* * * *

நீ எனது நெஞ்சத்தின் மையத்தில் இருந்தாய். ஆகையினால், என் நெஞ்சம் சுற்றித் திரிந்தபோது, அவள் உன்னைக் காணவேயில்லை, எனது அன்புகளிலிருந்தும், நம்பிக்கைகளிலிருந்தும் கடைசி வரை உன்னை நீயே மறைத்துக் கொண்டாய். ஏனெனில் நீ எப்பொழுதும் அவற்றிலிருந்தாய். - க.கொ

* * * *

நான் உழைக்கும்போது இறைவன் என்னை மதிக்கிறான். நான் பாடும்பொழுது அவன் என்னை விரும்புகிறான்.
- மின்

* * * *

வாழ்க்கை நமக்கு அளிக்கப்படுகிறது. மற்றவருக்கு வழங்கியே நாம் அதை அடைகின்றோம். - ப.ப

* * * *

கட்டுப்படுத்தும் அதே சமயம் அன்பு, விடுதலையும் அளிக்கிறது, ஏனெனில் ஒன்று சேர்ப்பது தான் அன்பு.
-எ.எ

* * * *

மலரும் ஒவ்வொரு செம்மலரும் என்றும் இள வேனிலை அளித்திருக்கும் செம்மலரிடமிருந்து எனக்குக் கிடைக்கும் வாழ்த்துகள். - மின்

* * * *

உண்மைக்கு அப்பாற்பட்டு எவனொருவனுடைய புகழ்பளிச்சிடாமலிருக்கிறதோஅவனே பெருமைக்குரியவன்.
- ப.ப

* * * *

அன்பு செலுத்துவதனால் நாம் அடையும் மகிழ்ச்சியே இறுதியானது. ஏனெனில் அதுவே (அன்பு செலுத்துவதே) இறுதியான உண்மை. - ப.ஒ

* * * *

உனது கரிய விழிகளில் மழையின் வருகை தனது இசையைக் காண்கிறது. - கா.ப

* * * *

பனித்துளி இலை நுனியில் அசைந்தாடுவதுபோல், காலத்தின் விளிம்புகளில் உனது வாழ்க்கை எளிதாய் கூத்தாடட்டும். - தோட்

* * * *

எனது காதலியிடமிருந்து எனக்குக் கடிதமொன்று வந்துள்ளது. அதில் வெளியில் சொல்ல முடியாத ஒரு தகவல் உள்ளது. இதோ, இறப்பச்சம் என்னை விட்டு அகன்று விட்டது. - க.பா

* * * *

நிலவு உன் நெஞ்சத்தில் மறைந்திருக்கும்பொழுது, உதடுகளாகிற சாளரத்தை ஊடுருவி நுழையும் நிலவொளியைப் போன்றது உனது புன்னகை. - கா.ப

* * * *

காதல் விளக்கை நெஞ்சத்தில் தாங்கியிருக்கும் பொழுது, அதன் ஒளி உன் மேல் விழுகிறது. நிழலில் நான் பின் தங்கிவிடுகிறேன். - க.கொ

* * * *

இரவின் இருட்டு பகலுடன் இணக்கம் காண்கிறது. மூடுபனி படர்ந்த காலைப்பொழுது முரண்படுகிறது. - மின்

* * * *

# எதிர்ப்படல்

உலகமே, என் நெஞ்சு உன்னை அன்பால் முத்தமிடாதபொழுது, எனது ஒளியின் பெருமை முழு வதையும் நான் அறிய இயலாது போயிற்று; நீண்ட இரவு முழுதும் வானம் விளக்கை ஏந்தியவண்ணம் என்னைப் பாதுகாத்து வந்தது. தன் அன்புப் பாடலோடு என் நெஞ்சு உன்னை நெருங்கியது, கமுக்க உரைகளை நாம் பரிமாறிக் கொண்டோம் என் நெஞ்சம் உன் கழுத்தில் மாலையிட்டது. விண்மீன்களோடு நீ மதித்து வைத்துக் கொள்ளும்படியாக, அது ஏதோ ஒன்றை உனக்குத் தந்திருக்கிறது என்பதை நான் அறிவேன். -எ

அடக்கத்தில் நாம் உயர்ந்திருக்கும்போது, உயர்ந்த வர்கள் என்ற நிலையைக் கிட்டத்தட்ட எட்டி விடுகிறோம்.

- ப.ப

* * * *

காலையும் மாலையும் உன்னிடம் எத்தனையோ பாடல்கள் பாடியிருக்கிறேன். எனது கடைசிப் பாடலை, நீ செல்லுகையில் உன் குரலில் தேக்கிக் கொண்டாய். - கா.ப

* * * *

எனது பெயரை நான் மறந்து விடுகிறேன். பனிப் படலம் கரையும் பொழுது காலைக் கதிரவன் தெளிவுற்று இருப்பதைப் போன்று, உன் பெயரின் இனிமை என் நெஞ்சத்தில் நிறைந்து விடுகிறது. - ப.ப

* * * *

எனது இளமை வடியும்போது, எல்லாப் பொருள் களின் இசையையும் நான் கேட்க முடிகிறது. வானகம் விண்மீன்களாகிய தன் நெஞ்சத்தை என் முன்னே திறந்து வைக்கிறது. -கா.ப

* * * *

தன் இயல்புக்கேற்ப, உலகம் அழகு மயமானது, மகிழ்ச்சி மயமானது. - நினை

* * * *

அமைதி கொண்டிருக்கும் இரவு, அன்னையின் அழகையும், பகல் குழந்தையின் அழகையும் தன்னிடத்து கொண்டுள்ளது. - ப.ப

* * * *

தன் அன்புக் காதலியின் முகத்தை புதிய முகத்திரை களில் அவள் கண்டிருக்கிறாள். - கா.ப

* * * *

இடம் விட்டு இடம் பெயரும் பாடல்கள் என் நெஞ்சத்திலிருந்து பறந்து செல்கின்றன. தங்கள் உறை விடத்தை உன் அன்புக் குரலில் தேடுகின்றன. - மின்

* * * *

வருங்காலத்தில் வேனிற்காலம் காதலர் தோட்டத் திற்கு வந்து சேரும். - த.ஒ.

* * * *

உன்னருகே அமைதியாக அமர்ந்திருக்க எனக்கு விருப்பம்தான். ஆனால் அதற்கான துணிச்சல் என்னிட மில்லை. எங்கே எனது உள்ளம் உதடுகளுக்கே வந்து விடுமோ என்ற அச்சம் தான் காரணம். - தோட்

* * * *

அமைதியாக அமர்ந்திருந்து உனது ஒலியற்ற உள்ளுயிரிலிருந்து பிறக்கிற சொற்களைக் கேட்பேனாக. -எ

மனிதனைச் சுற்றியிருக்கிற உறுதி என்கிற சிறிய தீவைச் சூழ்ந்துள்ள இடையூறு ஐயப்பாடு, மறுப்பு என்கிற கடல், அவளை அறிந்திராதவற்றைத் துணிவுடன் எதிர் கொள்ள அறை கூவல் விடுக்கிறது. - மின்

* * * *

உனது ஒளியைப் பொழிந்து கொண்டு இந்த நொடிப்பொழுதை உன் மடியின் குறுக்கே நன்கு பரப்பிக் கொள்வாய். - எ

* * * *

எல்லையற்றது என்கிற புல்லாங்குழல் இடைவெளி இல்லாமல் ஊதப்படுகிறது. அதலிருந்து பிறக்கும் ஒலியிசை காதல். - க.பா

* * * *

காலம் காலமாக மனிதகுலம் ஒரே படைப்பில் தான் தன்னை ஈடுபடுத்தி வந்துள்ளது. ஆன்மிக வாழ்வு என்பதே அது. -படை

* * * *

என் நெஞ்சத்தைக் கமுக்கக் காதலில் அவனுக்கு அளித்து விட்டேன். நம்பிக்கையெல்லாம் வீண்போய்விடும் என்ற எண்ணத்தில் தான் நான் நாள்களைக் கடத்தி வருகிறேன். -இரு.அ

* * * *

தவறு தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாது. நேர்மையினால் அது முடியும். - ப.ப

* * * *

அதோ பார், என் மன்னியே, அடிவானத்தின் கிழக்கில் பகல் மலர்கிறது. - இரு.அ

உனக்காக நான் பாடிய பாடல்களுக்காகப் பரி சொன்றும்* கேட்கப் போவதில்லை நான். அவை இரவு முழுவதும் வாழ்ந்திருந்தால் போதும், அதிலேயே எனக்கு மன நிறைவு.

- நா

*      *      *      *

சீற்ற மின்னல் தன்னுடைய கூரிய நகங்களினால் வானத்தைக் கீறிக் கிழிக்கின்றது.

-ப.ப

*      *      *      *

மெய்யறிவு பெற்றுக் குழந்தைப் பருவத்தை மனிதன் திரும்பப் பெறுவதற்காக இறைவன் காத்திருக்கிறான்.

- ப.ப

*      *      *      *

நட்புரிமையில் கனவுகளும் நனவுகளும் கை கோர்த்துக் கொள்ளுகிற அந்தப் பகுதியை அவள் அடைந்து விட்டாள்.

- மு.மு

*      *      *      *

என்னுள்ளத்தில் வாழ்பவன் மட்டுமே நான் பதித்த உண்மையான வழியே என்னிடம் வர முடியும்.

- மு.மு

*      *      *      *

முழுமையான நோக்கைப் பெறத் தானாகவே நமக்கு உதவிட முன்வரும் உயிர்க்கருவியே நம்பிக்கை என்பது. ஆனால், நாம் காண்பது என்னவோ துண்டு துக்கடாக்களை மட்டிலுமே.

-எ.எ

*      *      *      *

பனித்துளி, தன்னுள் மிளிர்கின்ற ஒளிப்பொரி யினின்றே சூரியனை மனங்குளிர அறிந்து கொள்கிறது.-மி.மி

* * * *

அன்புப் பெருக்கில் விளையும் செல்வம்தான் தூய்மை. - ப.ப.

* * * *

உனது மூச்சுக் காற்றின் மூலம் மகிழ்ச்சி, துயரம் என்கிற பண்புகளாக நான் வெளிப்படுகிறேன். - படை

* * * *

இடையூறு எதிர்ப்படும் பணிகளுக்கு என்னை அனுப்பி என்னைத் திடப்படுத்து. -நா

* * * *

மனிதனுடைய சிந்தனைகளைப் பேச்சாக உருப் பெறச் செய்வது இறையின் அமைதி. - ப.ப

* * * *

கரைக்குக் கரை நீ தொடரும் வாழ்க்கைப் பயணத் தில் என்னை நீ மீண்டும் மீண்டும் சந்திப்பாய். - கா.ப

* * * *

அழகு உண்மையின் புன்னகை. தனது அசல் முகத்தை குறையற்ற கண்ணாடியில் அவள் பார்க்கிறாள். - மின்

* * * *

பெரிய அரசுகளின் மேல் இறைவன் வெறுப்படைகிறான். ஆனால் ஒரு பொழுதும் சின்னஞ் சிறிய மலர்கள் மேல் ·அன்று. -ப.ப..

* * * *

துன்பமளிப்பது நீ எனக்குச் செய்யும் மரியாதை.

- நா

* * * *

உனது அன்பு உருவெடுத்துள்ளது போன்று இந்த உலகத்தை நான் கருதுகிறேன். அப்பொழுது எனது அன்பும் அதற்குத் துணைநிற்கும். - ப.ப

* * * *

செருக்கு அவனது வெறுப்புகளைக் கற்களினடியில் புதைத்து விடுகிறது. அன்பு தனது அடிபணிதலை மலர்களின் வாயிலாகத் தெரிவிக்கிறது. - மின்

* * * *

மனிதனின் செயல்களினால் இறைவன் மனந் தளர்வதில்லை என்கிற உண்மையை ஒவ்வொரு குழந்தையும் தெரிந்து வைத்திருக்கிறது. - ப.ப

* * * *

இனி என்றுமே நீ என் பாடல்களுக்கு முன்னே நிற்க மாட்டாய்; அவற்றில் ஒன்றாக இருப்பாய். - கா.ப

* * * *

என் அன்பே, உனது கமுக்கத்தை உனக்குள்ளேயே வைத்துக் கொள்ளாதே. மாறாக எனக்குச் சொல்லிவிடு, எனக்கு மட்டுமே. -நினை

* * * *

மழையின் மங்குல், வானத்திலே ஒரு கோடியிலிருந்து மறுகோடிவரைப் பரவி, இன்று பகல் முழுவதையுமே மூடிக் கொண்டிருக்கிறது.

* * * *

வானம் தன் ஒளியை நமது நெஞ்சங்களில் பாய்ச்சுகிறது. -எ.சு

* * * *

எங்களது மலர்களை எடுத்துச் செல்ல நாங்கள் விரைகிறோம். காரணம் கடந்து செல்லும் காற்று அவற்றைக் கவர்ந்து சென்று விடலாமே. -தோட்

* * * *

கண்டறிந்து விடவேண்டுமென்கிற அடக்க முடியாத ஆர்வம் கொண்டுள்ள முகில்போல், குன்று உயரே உயரே இருக்கும் வானத்தை எட்டிவிடத் துடிக்கிறது. - மின்

* * * *

தனது ஆர்வத்தில் எட்டக் கூடியதை முத்தமிடுகிறது கடவுள். மனிதனோ எட்ட முடியாததை எட்டி முத்தமிடுகிறான். -ப.ப

* * * *

நான் ஆசைப்படுவதை அடைந்திட இந்தப் பேரண்டம் முழுவதுமே எனக்கு உதவிக் கொண்டிருக்கிறது.
-எ.எ

* * * *

காதல் என்பது ஒரு விளங்காத புதிர். ஏனெனில் விளக்கத்திற்கு அப்பாற்பட்டது அது. - மின்

* * * *

எனது வாழ்க்கை பயனற்றது என்கிற கொடிய வறுமையினால் கந்தல் கந்தலாகக் கிழி படாமலிருக்கட்டும்.
-எ

* * * *

இறைவன் பொழியும் மழை நீர்போல், ஒரு தகப்பனின் அன்பு தீர்ப்பு வழங்குவதில்லை, மாறாக வற்றாத ஊற்றிலிருந்து பாய்ச்சப்படுகிறது. - நா

* * * *

விண்மீன்கள் ஒளிவீசும் தன் கோவிலில் குடி கொண்டுள்ள இறைவன் காத்திருப்பது தனக்கு விளக்கெடுத்துவரும் மனிதனுக்காகவே. - மின்

* * * *

காதல் எப்பொழுதுமே ஈகம் செய்வதற்கு அணியமாக உள்ளது என்பது நடைமுறை உண்மை. ஆனால் அதை உண்மை என்று நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. -ப.ப

* * * *

ஒரு மூலையில் அமர்ந்து, சிந்தனை செய்து, நீங்கள் எல்லோரும்தான் எனது உலகம் என்று பாடல்கள் புனை வது எத்தனை நலமான நுகர்வு. -தோட்

* * * *

தெற்கு வாயில் திறந்தே உள்ளது. என் இன்னிள வேனிலே அதன் வழி உள்ளே நுழைந்திடு.

மழலைபேசும் இலைகளாக, தங்களை ஈத்துவக்கும் கொள்ளும் மலர்களாக உள்ளே வந்திடு. - இ.அ

* * * *

நல்லது செய்ய விரும்புகிறவன் வாயில் கதவைக் தட்டுகிறான். அன்பு செலுத்துகிறவனுக்கு வாயில் கதவு திறந்தே இருக்கிறது. - ப.ப

என் தலைவனுடைய குழலோசை பொருள்கள் யாவற்றிலும் எங்கும் ஒலிக்கிறது. - நா

* * * *

வெளியிடப்படும் போது கூடக் காதல் ஒரு கமுக்க மாகவே இருந்து வருகிறது. ஏனெனில், காதலனுக்கு மட்டுமே தான், தான் காதலிக்கப்படுவது தெரியும். - மின்

* * * *

இருக்கிறாய் ஓ, கனியே, என்னிடமிருந்து எவ்வளவு தொலைவில் நீ?'

நான் 'ஓ, மலரே, உன் நெஞ்சத்தில் மறைந் திருக்கிறேன். - ப.ப

* * * *

உன் கண்களைத் திறந்து பார், இசையின் மூச்சுக் காற்றுத் தன் மூலம் வெளியேறுவதைப் புல்லாங்குழல் உணர்வதைப்போல் நீ இவ்வுலகை உணர்ந்திடுவாய். - எ.எ

* * * *

நமது ஆளுகையிலிருந்து அழகு வெளியேறுவதை நுட்பம் வரை நம்மால் அதைக் காணமுடியாது. -வீ.வெ

* * * *

முன்னர் நான் பறித்து வைத்திருந்த மலர்களை வாடாமல் வதங்காமல் தன் கூடையில் வைத்து மாலை மயங்கும் நேரத்தில் என்னிடம் எடுத்து வருகிறான் இறைவன். -ப.ப

அன்றாடக் கூலியின் மூலம் எனது பணிக்குப் பலன் கிடைத்துவிடுகிறது.

அன்பின் மூலம் எனது முழு மதிப்பு கிட்டும்வரை நான் காத்திருப்பேன். - மின்

* * * *

தாமரை இலையின் அடிப்பாகத்தில் அரும்பியிருக்கும் பெரிய பனித்துளி நீ, அதன் மேற்பகுதியில் துளிர்ந்திருக்கும் சிறிய பனித்துளி நான்,' என்றது பனித்துளி ஏரியிடம். - ப.ப

* * * *

கிடைக்காதவற்றைத் தேடியலைவது தான் மாந்தனிடம் உள்ள பெரிய துடிப்பு. அதுவே அவனிடமிருந்து உன்னதமான படைப்புகளை வெளிக் கொணர்கிறது. - எ.எ

நீ ஒருவனே விருந்தாளியாக விளங்கப்போகிற விழாக் கூடமே சிறப்பானது.

ஆகவே தான் உனக்கு விடுக்கப்படும் அழைப்பிதழ் விண்ணிலிருந்து விண்ணுக்கு எழுதப்படுகிறது. -படை

* * * *

ஒரு கணத்தில் ஓசை நிலையான இசையை ஏளனம் செய்கிறது. -ப.ப

* * * *

காதல் பெருக்கில் உன்னையே நீ என்னிடம் ஒப்படைக்கிறாய். பின்னர் என்னிடம் உன் இன்னமைதி அத்தனையையும் உணர்கிறாய். -கீ

* * * *

என்னால் கடவுளை நேசிக்கமுடிகிறது. ஏனெனில் மறுப்புக்கான உரிமையை அவன் எனக்கு அளிக்கிறான். - மின்

* * * *

என் வாழ்க்கையின் தந்திகள் யாவும் மீட்டப்படும் போது, என் தலைவனே, நீ என்னைத் தொடும் ஒவ்வொரு முறையும் அன்பின் இசை வெளிப்படுகிறது. - ப.ப

* * * *

விடுதலையே கடவுள், ஏனெனில் ஒளியும் அவனே. -எ.எ

* * * *

எனது பாடல்களை உனது ஊமை நெஞ்சத்தில் பொழிகிறேன்; அதே போன்று, எனது அன்பையும் உனது அன்பில் பொழிகிறேன். - தோ

* * * *

உன் கண்கள் கண்ட விருந்தாளியை உன் இல்லத் திற்குக் கொண்டு வராதே. உனது நெஞ்சத்தின் அழைப்பின் பேரில் அவன் உன் இல்லம் வரட்டும். -படை

* * * *

மண், தண்ணீர் இவற்றின் நெஞ்சத்திலிருந்து பீறிடும் குரல் "நான் காதலிக்கிறேன், நான் காதலிக்கிறேன்" என்பதே. - செம்

* * * *

அமைதியாக இரு என் நெஞ்சமே, இந்த ஓங்கி உயர்ந்த மரங்கள் வேண்டுதல்கள் தாம். - ப.ப

* * * *

மொட்டுக்களை மலரச் செய்வது உன் வேலை யில்லை. மொட்டை உலுக்கிடு, உதிர்த்திடு. ஆனால் அதை மலரச் செய்வது உன் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. -க.கொ

* * * *

என் மரத்தின் நிழல் வழிப்போக்கர்களுக்காக அதன் கனியோ, நான் காத்துக் கொண்டிருக்கும் அந்த ஒருவருக்காக. - மின்

* * * *

எனக்கு அன்பு மறுக்கப்பட்டால், காலைப்பொழுது ஏன் தன் நெஞ்ச வேட்கைகளைப் பாடல்கள் மூலம் வெளிப் படுத்த வேண்டும்? -எ

* * * *

விண்ணெங்கும் பரவி நிற்கும் ஒளி தனது எல்லை யைப் புல்லில் படிந்திருக்கும் பனித்துளியில் காண்கிறது. - மின்

* * * *

என் நண்பனே, உன்னை நான் நெடுங்காலமாகத் தேடி அலைந்து கொண்டிருக்கிறேன். - படை

* * * *

துயரம் நிறைந்த என் வாழ்வில் அழகையும் ஒழுங்கு முறையையும் கொண்டு வா. - கா.ப

* * * *

வழி விடு, மொட்டே, வழிவிடு, உன் நெஞ்சத்தைக் கீறி வழிவிடு. -படை

* * * *

கனவுகளின் மூலம் மண்ணகம் விண்ணுலகம் படைத்திட காலம் காலமாக வானகம் தன்னை வெறுமையாக வைத்திருக்கிறது. - மின்

* * * *

நான் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் என் தலைவியின் வீட்டில் உள்ளது. -நா

*    *    *    *

எனது வாழ்வு மொட்டாய் அரும்பியிருந்த காலமொன்றும் இருந்தது. அதன் மணமெல்லாம் ஒரு பக்கத்தில் சேர்த்து வைக்கப்பட்டிருந்தது. - தோ

உலகம் என் கண்முன் ஒரு சித்திரக் குவியலாகவே காட்சியளிக்கிறது; எனது ஆன்மா, இசையால், மனம் உருகவே பதிலளிக்கிறது. -மி.மி

*    *    *    *

மனித நெஞ்சம் ஒரு விரிந்த பாழ்நிலம். கிளைகளுடன் கூட்டுச் சேர்ந்து ஒரு குழந்தையை ஆட்டுவதைப் போல இருளைத் தொட்டியிலிட்டு ஆட்டுகிறது. - நினை

*    *    *    *

பொன்மாலைப் படுஞாயிறு இசைக்கும் இசையிலும் ஒதுக்க முடியாத இருட்டுக்கு அது அளிக்கும் புகழ்ப் பாடல்களிலும் இரவின் முகவுரை தொடங்குகிறது. -ப.ப

*    *    *    *

உண்மையை அடைவதற்கு எதுவும் அதிக விலையில்லை என்பது அன்பின் வலுவான முடிவு. - எ.எ

*    *    *    *

இந்தப் பகல் ஒளியில் என் நெஞ்சம் என்ன விரும்புகிறது என்பதே எனக்குத் தெரியவில்லை. -நினை

* * * *

இந்த உலகத்தை விரும்புவது எவ்வளவு உண்மையோ, அதை விட்டுச் செல்வதும் அதே அளவு உண்மையாக இருக்கவேண்டுமென்றால், அப்பொழுது வாழ்க்கையில் கூடுவதற்கும், பிரிவதற்கும் ஒரு பொருள் இருக்கவேண்டும்.
-க.கொ

* * * *

பனிக்கட்டியைத் தேக்கிவைப்பது குன்றத்தின் தலைச்சுமை; பனி உருகி நீரோட்டங்களாகப் பெருக்கெடுக்கும் போது உலகம்முழுவதும் அதைத்தாங்கியாக வேண்டும்.
- மின்

என் மனத்திற்கு இனியவனை, எங்குச் சென்று காண்பேன்?

என்னிடமிருந்து அவன் பிரிந்து சென்று விட்டான். இடத்திற்கிடம் கூற்றரிந்து அவனைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். -படை

* * * *

தவறுகள் யாவற்றிற்கும் நீ கதவை அடைத்து விட்டால், உண்மை என்றுமே அடைபட்டுவிடும். -ப.ப

* * * *

# காதற் பாடல்

நிலப்பூ நிலத்துக்கு எவ்வளவு அண்மையிலிருக்கிறதோ அதுபோல அவள் என் மனதுக்கு அண்மையிலுள்ளாள்; ஒய்ந்த உறுப்புகளுக்கு உறக்கம் இன்பம் தருவதுபோல் அப்படி அவள் எனக்கு இன்பம் தருகிறாள். மாரிக்காலத்தில் கட்டற்ற வெள்ளம் பாயும் ஆறுபோல நான் அவளிடம் கொண்ட காதல், என் வாழ்க்கை ஆறாகக் கரையுரண்டோடுகிறது. அலைகளின் ஓசையாலும் நீரோட்டத்தின் சலசலப்பாலும், ஆறு பாடிக்கொண்டு வருவதுபோல எனது காதல் பாடல் எனது காதலியின் உயிரிலே கலந்து பெருக் கெடுத்தோடுகிறது.

-கா.ப

என் குழந்தாய், உனது இனிய உடம்பில் உறக்கம் நிறைவு காண்கிறது. - கா.ப

* * * *

மரம் தன் இலைகளை உதிர்ப்பது போல், நிலத்தில் நான் சொற்களை உதிர்க்கிறேன். வெளிவராத என் எண்ணங்கள் உனது அமைதியில் மலரட்டும். - மின்

* * * *

எவற்றையெல்லாம் நான் விட்டுச் செல்ல வேண்டுமோ, அவற்றையெல்லாம் நான் விட்டுவிடுகிறேன். எவற்றையெல்லாம் ஏற்க வேண்டுமோ, அவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்கிறேன். உன்னுடன் சேர்ந்து நடை போட மட்டும் என்னை அனுமதித்திடு. -படை

* * * *

அருகே என்கிற தடைக் கல்லின் ஊடே புகுந்தாவது உன் அன்பு என்னைக் காணட்டும். - மின்

* * * *

முள்களினூடே சிறிய மலரொன்று காணக் கிடைத்தது. உலகின் நம்பிக்கை மடிந்து விடவில்லை, என்று நான் உரக்கக் கூறிவிட்டேன். - நா

* * * *

கடலலைகளின் மேல் இரவில் மின்னுகிற வெளிச்சம்தான் நமது பெயர்கள். பின்னர் தன் கையெழுத்தை

விட்டுச் செல்லாமலேயே அந்த வெளிச்சம் மறைந்து விடுகிறது. -ப.ப

* * * *

படைப்பில் செலவிடும் உழைப்பு, அதில் திளைத்து மகிழ்வதற்கே. - மின்

* * * *

“நிலவின்மூலம் உனது காதல் கடிதங்களை எனக்கு அனுப்புகிறாய்,” என்றது இரவு. கதிரவனிடம் ‘எனது விடைகளைக் கண்ணீர்த் துளிகளாகப் புல்வெளி மீது படர விடுகிறேன். -ப.ப

* * * *

என் தலைவனே, உண்மையின் மீது எனக்குள் நம்பிக்கை அப்பழுக்கில்லாமை பற்றிய எனது தொலைப் பார்வை இவை படைப்புத் தொழிலில் உனக்கு உதவிடட்டும். - மின்

* * * *

தான் இயங்கும்போது ஓய்வும் உழைப்பே.
கடலின் அமைதி அவற்றில் இயங்குகிறது. -ப.ப

* * * *

நம்பிக்கைதான் ஒளியை உணரும் பறவை; பகல் இன்னும் இருளாயிருக்கும் நிலையில் இது இசை எழுப்புகிறது. -மின்

* * * *

வாழ்க்கை என்னும் ஊற்று, நீரை வாரி வடிக்கிறது; சிரிப்பிலும், கண்ணீரிலும் நுரைத்து நிற்கிறது. -நினை

* * * *

செம்மலரைப் பார்க்க அவனுக்குக் கண்கள் உள்ளன. ஆனால் அவன் முட்களை மட்டுமே பார்க்கட்டும். - ப.ப

* * * *

தனியாக வாழும் தன்னுரிமையை என்றுமே நாம் கோர முடியாவிட்டால், நாம் ஒரு நாளும் ஒருவர் மற்ற வருக்காக வாழமுடியாது. -எ.எ

* * * *

பகல் பொழுதின் சேவையில் எனது அன்பு தன் ஆற்றலைப் பெறட்டும்; இரவின் அணைப்பில் தன் அமைதியை அடையட்டும். - மின்

* * * *

காதலிக்கும்போது, இலை பூவாக மலர்கிறது.
தொழும்போது, மலர் கனியாக மாறுகிறது. - ப.ப

உனது அழைப்பை ஏற்று உனது பேரரசில் நான் நடமாடவேண்டும். - எ

* * * *

கிளைகள் கனி அளிக்கின்றனவே என்பதற்காக நிலத்தினடியில் படர்ந்திருக்கின்ற வேர்கள் பலன் கேட்கிற தில்லை. -ப.ப

* * * *

நிலாவே வந்து விடு, கீழே இறங்கிவிடு. என் கண்மணியின் நெற்றியில் முத்தம் பதித்திடு. -கா.ப

* * * *

வாழ்க்கையில் என் சாதனைகள் அளித்துள்ள மகிழ்ச்சிகள் யாவற்றையும், விருந்தின் முடிவில் அன்புடன் உனக்கு ஈத்துவக்கிறேன். - மின்

* * * *

தான் ஓர் ஆற்றல் என்பதன் மூலம் மாந்தன் வெளிப் படுகிறதில்லை. தான் ஓர் உயிர் என்பதிலேயே வெளிப் படுகிறான். -படை

* * * *

கவர்ச்சியின் ஈர்ப்பு, வெறுப்பின் அவலம் என்கிற எதிர் மாறான ஆற்றல்களின் பிணைப்பே படைப்பு. -படை

* * * *

கவிதையைப் போன்றது, சமயமும் வெறும் எண்ணமும் மட்டுமில்லை. எண்ணத்தின் வெளிப்பாடு அது.

-எ.எ

* * * *

உன் கண்ணசைப்பினால் கவிஞர்களின் இசைக் கருவியிலிருந்து எழும் பாடல்கள் யாவற்றையும் கவர்ந்திட லாம். - தோ

* * * *

ஓ, நண்பனே, உன் உடல் இறைவனின் இசைக் கருவி அதன் தந்திகளை முறுக்கி அதனிடமிருந்து தனது இன்னிசையை எடுத்துக் கொள்கிறான். -க.ப

* * * *

விதையின் தளையிலிருந்து விடுபட்டு முன்பின் தெரியாத இடத்தினூடே வீரச்செயல்களைத் தேடிச் செல்லும் சிறகு படைத்த உயிர்தான் மரம். - மின்

* * * *

கடலைக் கடப்பது போன்றது. இந்த மனித வாழ்க்கை; அங்கு நாம் யாவரும் குறுகலான கப்பலில் சந்தித்துக் கொள்கிறோம். - ப.ப

* * * *

நம்மை முன்னோக்கி அழைத்துச் செல்வதற்காகவே இறைவன் நம்மை தவிர்க்கிறான். தன் நெஞ்சத்தில் நெருக்கமாக வைத்துக் கொள்வதற்காகவே, தன்னைத் தானே ஆன்மாவில் அர்ப்பணித்துக் கொள்கிறான். - மின்)

* * * *

அதிகாரப் பேரரசில் அடக்கி நொறுக்கியே நாம் முன்னேறுகிறோம். ஆனால் அன்புப் பேரரசில் ஆசையை வெறுத்து ஒதுக்கியே நாம் முன்னேறுகிறோம். -எ.எ

* * * *

என்னைச் சுற்றிலும் நான் பார்க்கும் அமைதியான வானும், பாய்ந்து செல்லும் நீரும் என் இதயத்தை மகிழ்ச்சியால் நிரப்புகின்றன. ஒரு குழந்தையின் முகத்தில் தவழும் புன்னகை போல மகிழ்ச்சி எங்கும் பரவி நிற்கிறது என்பதை உணர்கிறேன். -கா.ப

# அரும்பொருள்

பகலின் விளிம்பை இரவு எந்த இடத்தில்
தொடுகிறதோ,
வெளிச்சம் இருளை எந்த இடத்தின் முகப்பில்
தொடுகிறதோ,
கரைகளின் முத்தத்தை ஒரு கரையிலிருந்து மறு
கரைக்கு அலைகள் எந்த இடத்தில் எடுத்துச்
செல்கின்றனவோ,
அந்த இடத்தில் என்னை நான் கூடுகிறேன்.
ஆழம் காணமுடியாத கடலின் நெஞ்சத்திலிருந்து
பொன்னொத்த குரலொன்று என்னை அழைக்கிறது.
மாலை நேரத்துக் கண்ணீருக்கிடையே உன்முகம்
காண முயல்கிறேன்.
உன்னை பார்த்துவிட்டேன் என்பது கூட கண்களால்
உறுதியாகச் சொல்லமுடியவில்லை. -எ

அன்பின் ஒளியே உலகின் திரண்ட செல்வம், அந்த உலகின் வாயிற் கதவை எனக்காகத் திறந்து வைக்கிறது. ஞாயிற்றின் வெளிச்சம். - மின்

* * * *

விண்மீன்களை எட்டிப் பிடிக்கத் தங்கள் கைகளை உயர்த்தும் குழந்தைகளின் ஆர்வத்தைப் போன்றன குன்றுகள். - ப.ப

* * * *

தனி மனிதன் மூலமாக உலகின் உணர்வுகளை வெளிப்படுத்துவதே கலை. -எ.எ

* * * *

தங்கள் தங்கள் முயற்சிகளில் தோல்வியுற்ற உலகங்களை முன் நிறுத்தும் எனது உலகத்தை நான் தாங்கி நிற்கிறேன். - ப.ப

* * * *

(எனது வாழ்க்கையும்)நாணல் செடிபோன்று, நம்பிக்கை, வெற்றி, தோல்வி என இடைவெளி காட்டி மிளிரும் பல வண்ணங்கள் கொண்டுள்ளது. - மின்

* * * *

மாந்தர்கள் கல் நெஞ்சம் படைத்தவர்கள். ஆனால் மாந்தன் கருணை உள்ளம் படைத்தவன். -ப.ப

* * * *

என்னைத் தன் பணியாளனாகப் பார்ப்பதில்லை இறைவன். யாவருக்கும் பணிபுரியும் தன்னையே என்னில் காண்கிறான் அவன். - மின்

* * * *

என் கனவுகள் யாவற்றிலும் அசைந்தாடும் அவளுடைய கூந்தலின் நறுமணத்தையே உணர்கிறேன். -கா.ப

* * * *

வாழ்க்கைப் பாதையில் நடைபோட நமக்குத் துணை புரிவது தன்னுணர்வு என்கிற ஒளியே. - எ.எ

* * * *

அறிவைத் தேடி அலைபவர்களும் உள்ளனர்; செல்வத்தைத் தேடி அலைபவர்களும் உள்ளனர். நான் பாட விரும்புகிறேன். ஆகவே உன் துணையை நாடுகிறேன்.-மின்

* * * *

தனக்கே உரிய மலர்களை மனிதனின் கைகளிலிருந்தே பரிசாகப் பெறவே இறைவன் காத்திருக்கிறான். -ப.ப

ஏரிக்கரையிலே வரிசையாக நிற்கும் தென்னை மரங்கள், தலைவிரித்தாடி இருண்ட வானை மோதி அறைகின்றன. மழையில் நனைந்து அலங்கோலமாய் இருக்கும் சிறகுகளுடன், காகங்கள் புளிய மரக் கிளைகளிலே மௌனமாக வீற்றிருக்கின்றன. ஆற்றின் கீழைக் கரையிலே இருள் இருண்டு வருகின்றன. -ப.ப

* * * *

இடையிடையே இன்னல்களைச் சந்தித்து நம்பிக் கையைப் புதுப்பித்து முன்னேறும் மாந்தனின் வரலாறே அவனது உலகம். -படை

* * * *

மற்றவர்களின் நுகத்தடிக்கு எனது நெஞ்சம் வளைந்து கொடுக்காமலிருக்கட்டும். -எ

* * * *

அனைத்துமே உண்மைதான்.உண்மையின் வெளிப் பாடுதான் பேரழகு. - எ.எ

நீயும் நானும் இரு கரைகள். நமக்கிடையே விரிந்து கிடப்பது பேராழி. எழும்பி நின்று அதைக் கடக்க விரும்பு கிறேன் நான். - மின்

* * * *

நம் நெஞ்சங்களில் ஒளியைப் பொழுகிறது வானம். - எ.சு

* * * *

உன் முகத்தின் ஈர்ப்பாற்றல் அத்தனையும் தானாகவே கிட்டியதில்லை என்பதை நான் அறிவேன். நினைவிற்கு எட்டாத ஒரு கூடலின் பின் என் கண்களில் தேங்கியிருந்த கட்டுக்கடங்கா உணர்ச்சி ஒளியை நீ கவர்ந்து கொண்டிருக்கிறாய். - நா

* * * *

உணர்வு நிலையின் விடுதலையே உள்ளொளி வாழ்வு.
- எ.எ

* * * *

நமக்கு நாமே எல்லாமாயிருக்கும் நிலையில், உலகம் நமக்கு அத்தனைச் சிறப்பாகப் படுவதில்லை. - எ.எ

* * * *

ஒருவருமறியாமல் இரவு மலர்களை இதழ் விரிக்கச் செய்கிறது; நன்றியை விடை பெற்றுக் கொள்ள அனுமதிக் கிறது.
-ப.ப

* * * *

தனது வரையறைகளை உண்மை விரும்புகிறது. ஏனெனில், அங்கே அது அழகினைச் சந்திக்கிறது. - மி.ன

* * * *

இளந்தென்றலில்தான் இறைவனது பெரும் பேராற்றல் காணப்படுகிறது; புயல்காற்றில் காணப்படு வதில்லை.
- ப.ப

* * * *

நான் விடைபெற வேண்டிய நாளில்தான் செங்கதிர் முகில்களிலிருந்து வெளிவருகிறான். இறைவன் கடலைப் போன்று வானம் நிலத்தின் மேல் தன் பார்வையைப் பதிக்கிறது.
- எ

* * * *

கண்களுக்குக் இமைகள் போல், உழைப்பிற்கு ஓய்வு உரிமையாகிறது. - ப.ப

* * * *

அழிவின்மையாகிய நீரூற்றின் களியாட்டமே வாழ்வு. - எ.எ

* * * *

என் நெஞ்சம் வருத்தத்தில் உள்ளது; காரணம் அழைப்பு எங்கிருந்து வருகிறது என்பது அதற்குத் தெரியாததே. - எ

* * * *

தனது சொற்களினாலேயே சிந்தனை உயிர் வாழுகிறது, வளரவும் செய்கிறது. - ப.ப

* * * *

அகவையும் இறப்பும் என்பதெல்லாமல் உண்மையானால், குழந்தை மனிதனின் நெஞ்சத்திற்கு அத்தனை மகிழ்ச்சி கொணர முடியுமா? - எ.எ)

* * * *

உனது அமைதியான உருவத்தைப் பார்க்கிறேன். என்னை சுவைத்துக் கொண்டிருக்கும் உன் விழிகளின்மேல் திடீரென்று என் பார்வை விழுகிறது. - எ

* * * *

சாலையின் எல்லையிலிருக்கும் ஆலயத்திற்கில்லை

எனது காணிக்கைகள். ஒவ்வொரு திருப்பத்திலும் என்னைத் திகைப்பிலாழ்த்தும் சாலையோர குட்டிக்கோவில்களுக்கே எனது காணிக்கை. -மின்

*   *   *   *

என்னைத் துன்புறுத்துவது எது? வெளியில் வர முயலும் என் ஆன்மாவா? இல்லை, வெளி உலகிலிருந்து என் நெஞ்சுக்குள் புகுவதற்காகக் கதவைத் தட்டும் ஆன்மாவா? - ப.ப

*   *   *   *

அறிவு, உணர்வு இவற்றின் மூலம் பக்குவப் படுத்தப் பட்ட குழந்தையின் குணம் கொண்டது மெய்யறிவு. - எ.எ

*   *   *   *

எனது உடம்பை வளர்ப்பதற்காக உலகனைத்தி லிருந்தும் மகிழ்ச்சி வெள்ளம் ஓடி வருகிறது. -க.கொ

*   *   *   *

விண்மீன்கள் யாவையும் என்னில் ஒளிவீசுகின்றன என்பதை நானறிவேன். வெள்ளம் போல் என் வாழ்வில் பீறிடுகிறது உலகம். - க.கொ

*   *   *   *

ஓ, படகோட்டியே, அது தான் திருப்புமிடத்தில் அமர்ந்து கொள். காரணம், எனது படகு விடுதலை பெறத் துடிக்கிறது. -எ

*   *   *   *

கப்பலில் இருக்கும் நீர் பளபளக்கிறது. கடலில் உள்ள நீர் கருமை படர்ந்திருக்கிறது.சின்னஞ் சிறிய உண்மைச் சொற்கள் தெளிவாக உள்ளன. பேருண்மையில் அமைதியே குடி கொண்டுள்ளது. - ப.ப

* * * *

வலியாகிற நெருப்பை அணைப்பதன் மூலம் மனிதன் நலம் பெறுகிறான். நெருப்பின் மேல் ஆட்சி செய்தவன் மூலம், அவன் அறிவொளியை ஏற்றி வைக்கிறான். - எ.எ

* * * *

என் அன்பிற்குரியவர்களுக்கென நான் விட்டுச் செல்வது சிறிய பொருள்களையே. பெரிய பொருள்கள் யாவருக்கும் உரியவை. - ப.ப

* * * *

இருட்டில் குமைந்து கொண்டிருக்கும் என் கொண்டல்களே, ஒன்றை நீங்கள் மறந்து விடுகிறீர்கள். செஞ்சுடரை மறைத்தது நீங்கள் தானே. -மின்

* * * *

பெண்ணே, நிலத்தைக் கடல் சூழ்ந்துள்ளது போல், ஆழமான உன் கண்ணீரின் வாயிலாக உலகின் நெஞ்சத்தை நீ சூழ்ந்திருக்கிறாய். -ப.ப

* * * *

மாந்தனின் வாயில் ஒவ்வொரு குழந்தையும் தனது குரலை மாறி மாறி எழுப்புகிறது. நிலைத்திருப்பது காலைப்பொழுதின் செய்தி அந்தக் குரலைப் பழுதில்லா மலேயே விட்டு வைத்துள்ளது. - எ.எ

* * * *

எல்லைக் கோட்டைத் தொட்டதுடன் முடிவடைவ தில்லை உண்மையான குறிக்கோள், எல்லையற்ற ஒரு நிறைவான நிலையைத்தான் குறிப்பிடுகிறது அது. -மின்

* * * *

தனது அழகான நிழலின் மேலேயே மரம் தன் அன்புப் பார்வையைச் செலுத்துகிறது. ஆனால் அதன் பொருளை மரம் என்றுமே புரிந்து கொள்ள முடியாது. - மின்

நமது கடவுளுக்கு மரியாதை செலுத்தும் ஆற்றல் பெற்றிருப்பதே வாழ்வில் நமக்குக் கிடைத்துள்ள வாய்ப்பு. - எ.எ

* * * *

ஓ, பெண்ணே, வாழ்வின் இசை உன் சிரிப்பில் புதைந்துள்ளது. - ப.ப

* * * *

உயர்ந்த மாந்தர்களைக் காணும் இடமெங்கும் தானும் உயர்ந்தவனே என்பதை அறிந்து கொள்கிறான் மாந்தன். - எ.எ

* * * *

# பாடும் பணி

உன்னைப் பாடும் பணியையே பணியாகப் பெறும் பேறு பெற்றேன். எனது பாக்களில் நினது இளவேனிற்கால மலர்களின் தோற்றம் பொலிந்தது. நினது ஓசையிடும் இலைகளுக்கு, அவை தாளங்கொட்டின. நினது இரவின் அமைதியிலும் காலைப்பொழுதின் இன்னமை தியிலும் நான் பாடினேன். கோடையின் முதல் மழையின் மணம் எனது பாடல்களில் சுழன்றோடுகிறது. பயிரின் பயன்கொளும் இலையுதிர்கால ஆரவாரம், என் பாக்களில் ஒலிக்கிறது. எனது தலைவனே, நீ எனது உள்ளத்தில் கோயில் கொள்ள வரும் நாளில், எனது பாடல்கள் தடைப்படாது, உன்னை ஆவலோடு வரவேற்குமாக! - க.கொ

செங்கதிர் ஒளிபோன்று என் அன்பு உன்னை சூழ்ந்திருக்கட்டும். அதே சமயம் ஒளிமயமான விடுதலையை உனக்கு அளிக்கட்டும். - மின்

* * * *

ஒளியை வாரி வழங்கும் விண்மீன்களைக் காட்டிலும் மாந்தன் தனக்கு அளிக்கும் அகல் விளக்கின் ஒளியையே இறைவன் அதிகமாக விரும்புகிறான். - ப.ப

* * * *

உனது நினைவைக் கோருவதற்கு எனது காணிக்கைகள் தயக்கம் காட்டுகின்றன. அதன் காரணமாகவே நீ அவற்றை நினைவு கூறலாம். - மின்

* * * *

"என் மேல் படிந்திருந்த பனித்துளியை இழந்து விட்டேனே"; என்றதாம் மலர், தன் விண்மீன்கள் யாவற்றையும் பறி கொடுத்திருந்த காலை வானிடம். - ப.ப

* * * *

வேனில் மாதத்தில் நீ அளித்த பாடல்களாகிய விருந்தில் என் இடத்தை நான் கண்டு கொண்டேன். - எ

* * * *

என்னிடம் உன் பாடல்களை நீ பாடிய நாள்களும் உண்டு. அவற்றை நான் கேட்டு மகிழ்ந்து என் நெஞ்சத்தைப் பறி கொடுத்ததும் என் நினைவில் உள்ளது. -நா

* * * *

மிகச் சிறந்தது எதுவும் தனியாக வருவதில்லை.

பலவற்றோடு கூட்டுச் சேர்ந்து கொண்டுதான் அது வருகிறது. -ப.ப

* * * *

அரவமற்றிருந்து அமைதியாகிற என் உள்ளுயிர் உன் சொற்களைக் கேட்கட்டும். - எ

* * * *

புகழ் என்னை நாணச் செய்கிறது. ஏனெனில் கமுக்கமாக அதற்கு நான் ஏங்குகிறேன். - ப.ப

* * * *

சிரித்தவாறே பாய்ந்து வரும் நீரோடையிலிருந்து பிறக்கும் மகிழ்ச்சியில் தன் தவிப்பைக் காண்கின்றன கூழாங்கற்கள். அதே போன்று, விண்ணிலிருந்து மகிழ்ச்சி கொண்டுவரும் இன்னிசைப் பாடல்களில் தன் துயரத்தைக் காண்கிறது வலி. - எ.எ

* * * *

இளந்தென்றலாக மாறி உன்னைத் தழுவி விளையாடுவேன்; நீ குளிக்கும் நீரில் சிறு அலைகளாகத் துள்ளி வருவேன்; தவழ்ந்து வந்து உன்னை மீண்டும் மீண்டும் முத்தமிடுவேன். -வ.பி

* * * *

கோயிலின் துயரச் சூழலிலிருந்து விடுபட்டுக்

குழந்தைகள் அமர்வதற்காகப் புழுதியை நோக்கி விரைகின்றன. -வ.பி

அவை விளையாடுவதை இறைவன் கூர்ந்து கவனிக்கிறான்; பூசாரியை மறந்து விடுகிறான். -வ.பி

* * * *

பழத்தின் பணி விலைமதிக்க முடியாதது, மலரின் பணி இனிமையாதது. பணிவான பந்தியின் நிழலிலிருக்கும் இலைகளின் பணி போன்றதாக எனது பணியிருக்கட்டும். - ப.ப

* * * *

இறைவன் நண்பர்களைத் தேடுகிறான்; அன்பைக் கோருகிறான். - மின்

* * * *

இழந்த அன்பின் மூலம் வாழ்க்கை மேலும் வளம் பெறுகிறது. - ப.ப

* * * *

குன்றினடியில் தாழ்ந்திருக்கிறது தடாகம். வளைந்து கொடுக்காத அடிவாரத்திற்கு அன்பின் கண்ணீர் வேண்டுகோள் - மின்

* * * *

இறைவா, உன்னைத் தவிர அனைத்தையும் பெற்றி

ருப்பவர்கள், உன்னைத் தவிர வேறெதுவும் இல்லாதவர்களைக் கேலி செய்கின்றனர். - ப.ப

* * * *

நீ இல்லாமல் அனாதைபோல் நான் கழித்த நாள்கள் யாவும் மறக்கப்படட்டும். –எ

* * * *

தனது அருவியின் வழியே தொலைவிலுள்ள கடலைக் குன்று தொடுவது போல, எனது பாடல்கள் மூலம் இறைவனை நான் தொடுகிறேன். - மின்

* * * *

சங்கிலியைத் தளர்த்து, நங்கூரத்தைத் தூக்கி எறி; விண்மீன் ஒளியில் நாங்கள் கப்பலை நடத்துவோம். - எ

* * * *

வாழ்க்கையில் விளையாட்டு விரைவானது. வாழ்க்கையின் விளையாட்டுப் பொருள்கள் ஒவ்வொன்றாய்க் கீழே விழுகின்றதை மறக்கவும் படுகின்றன. - மின்

* * * *

இது காலைப் பொழுது என்று கூறி, அதற்கு நேற்று என்ற பெயரிட்டு ஒன்றுமில்லாமல் செய்திடாதே. பெயர் வைக்கப்படாத புதிதாய் பிறந்த குழந்தையாக அதை முதன் முதலாகப் பார்த்து விடு. -ப.ப

* * * *

இழந்தது ஆற்றலை அன்று, வாடியது வாழ்க்கையில்லை. இவைதாம் அமைதி எனப்படுவது. இழந்ததும், தேய்ந்து போனதும் அவற்றின் முழுமையே. - எ.எ

* * * *

என்னைப் பார்த்து நானே சிரித்துக் கொள்ளும்போது, என்னை அழுத்திடும் பாரம் மென்மையாகிறது. - மின்

* * * *

முகில்கள், காடு இவற்றின் இசையோடு கூட, உலகின் நெஞ்சத்தில் எனது பாடல்கள் அவற்றிற்குரிய இடத்தைப் பெறுகின்றன. -தோ

* * * *

உலகம் உறங்கும் நேரத்தில் நான் உன் வாசலை அடைகிறேன். விண்மீன்கள் பேச்சற்று இருக்கின்றன. பாட நான் அஞ்சுகிறேன். - தோ

* * * *

உன் மூலமாக நான் விடுமுறை பெற்றுக் கொள்ள வேண்டும். காரணம், உன் கண்களின் நடனத்தில் நான் ஒளியைக் காண்பதே. -நா

* * * *

அன்பு என்கிற உறவினர் மூலம் நமக்குப் பல தொடர்புகள் ஏற்படுகின்றன. வாழ்க்கையை நாம் சுவைப்பதே இதன் காரணம். -படை

* * * *

தாமரை இலை தண்ணீரிலேயே வாழ்வது போல, நீயே என் தலைவன், நான் உனது தொண்டன். -க.பா

* * * *

தவறுகள் என்கிற வாய்க்கால் வழியாக உண்மை என்கிற நீரோடை பாய்ந்து செல்கிறது. - ப.ப

* * * *

உள்ளுயிரின் விடுதலையைப் பற்றி உணர்ச்சியுடன் பாடுகிறவர்களின் எண்ணிக்கை கொஞ்சமில்லை. ஆயினும் அவர்களுடைய பெயர்கள் வரலாற்றில் இடம் பெறப் போவதில்லை. - எ.எ

* * * *

இவற்றினூடே ஒளிவிடும் மின்மினிப் பூச்சிகள் விண்மீன்களைத் திகைக்க வைக்கின்றன. -மின்

* * * *

பகற் பொழுதில் பல்வேறு பயணங்கள் தொடங்கி மாலைப் பொழுதின் தனிமை வரை நீ என்னை அழைத்துச் சென்றிருக்கிறாய்.

இரவின் அமைதி மூலம் அதன் பொருளை அறிந்து கொள்ள முற்படுகிறேன். -ப.ப

* * * *

அமைதியை இரப்பவன் உண்மையிலேயே யாராக இருக்க முடியும்? ஈகம் செய்யத் அணியமாயிருப்பவர்களால் தான் அது முடியும். எ.எ

* * * *

பனி மூட்டத்தினால் தோல்வி கண்டாற்போல் தோற்றமளித்தாலும் மலை நிலை குலைந்து விடுவதில்லை.

- நா

*   *   *   *

இறைவா, நான் ஏன் உன்னைச் புகலடைந்திருக் கிறேன். தெரியுமா? உயர்ந்த ஆற்றலின் வழியில் வழி நடத்தப்படுவதற்காகவே.

-க.கொ

*   *   *   *

"உன்னை நான் என்றும் மறவேன்," என்று செம்மலர் செங்கதிரிடம் சொல்லிக் கொண்டிருந்த அதே வேளையில், அதன் இதழ்கள் மண்ணில் உதிர்ந்து விழுந்தன.

- மின்

*   *   *   *

திரண்ட மழைக் கொண்டல்கள் வானத்திலே முழங்கும்போது, கோடை மழை சுமந்து வரும் கீழைக்காற்றுப், புதர் நிலத்தின் மேல் பதறி வந்து. மூங்கில் காட்டிலே ஊதி முழங்குகின்றது!

என்னை, ஏற்றருள்வாய், இறைவா, இக் கணம் மட்டுமா, என் நெஞ்சத்தின் இருண்ட கமுக்கங்களிலிருந்து உன் முகத்தைத் திருப்பிக் கொள்ளாதே.

- எ

*   *   *   *

"செங்கதிர்த் தேவே, உன் புகழை எப்படிப் பாடுவேன், உன்னை எப்படி வழிபடுவேன்?" என்றது அந்தச் சின்னஞ் சிறு மலர். 'உன் தூய்மையின் வழியே செங்கதிரின் விசை.

- ப.ப

*   *   *   *

அமைதியின் மனங்கொண்ட மாந்தர்கள், இயற் பொருளில் ஒருக்காலும் அழியாமையைத் தேட மாட்டார்கள்.
- எ.எ

* * * *

தனது சிறிய வட்டத்திற்குள்தான் பனித்துளி பரிதியை அறிய முடியும்.
-மின்

* * * *

எனது பிரிவின் பொழுது காற்று இசையின் முணு முணுப்புடன் கலந்து விடுகிறது.
- எ

* * * *

சித்திரங்களின் வாயிலாக உலகம் என்னுடன் பேசு கிறது, எனது உயிர் இசைவழியாக விடையளிக்கிறது -மின்

* * * *

உலகைக் காதலிக்கும்பொழுது, நாம் அதில் வாழுகிறோம்.
-ப.ப

* * * *

வாழ்க்கை வளர்ச்சி பெறும்போது, ஒவ்வொரு கட்டமும் முழுமை பெறுகிறது; மலரும் கனியும் போல.- எ.எ

* * * *

ஞாயிற்றின் நினைவாக, தனது எண்ணற்ற விண் மீன்களை வானம் எண்ணிக் கொண்டிருக்கிறது - மின்

* * * *

இறந்தவர்கள் தங்கள் புகழில் வாழட்டும். உயிரோடிருப்பவர்கள் அன்பின் அழியாமையில் வாழட்டும். -ப.ப

* * * *

அன்பின் அடிப்படையில் துறக்கத்தை எழுப்புவது உயிரின் பணி. - எ.எ

* * * *

இரவின் இருட்டு வலியைப்போல், ஊமையானது. பகலின் இருட்டு, ஒளியற்றதைப்போல், அமைதியானது. - மின்

* * * *

உனது உண்மையின் பொருளை ஆழ்ந்து எண்ணி ஆராய்ந்துள்ளவர்கள் சிலர் உள்ளனர்; அவர்கள் உணர்ந்தவர்கள்.

உனது இசையின் சிறப்பைச் சுவைக்க முயன்றுள்ளேள்; நான் அதில் மகிழ்ச்சியடைகிறேன். - மின்

* * * *

பல பொருள்களை அடையப் பல வழிகளைக் கையாளாமல் இருப்பேனாக. -எ

* * * *

சில வண்டுகள் எழுப்பும் கீச்சிடும் ஒலி-ஓசையின் அந்தி ஒளி அது தான். என் மனத்தின் அமைதி நிரம்புவதாக நான் எண்ணுகிறேன். -ப.ப

* * * *

தாமரை தன் அழகை விண்ணுலகத்திற்கு அளிக்கிறது; புல் தனது பனியை மண்ணுலகத்திற்கு வழங்குகிறது. - மின்

* * * *

காலமாகிற கடலில் கிடைக்கும் ஒரு மணி நேர மகிழ்ச்சிக்காக என் நெஞ்சம் பரிதவிக்கிறது. -ப.ப

* * * *

நாம் புண்படுத்தப்பட்டோம் என்கிற உண்மையை நாம் ஒதுக்கி வைத்து விடலாம். ஆனால் நாம் துணிவுள்ளவர்களாக இருந்திருக்கிறோம் என்கிற உண்மைக்குச் சிறப்பான இடமுண்டு. -எ.எ

* * * *

இரவு கும்மிருட்டாயிருக்கிறது, என் இறைவா, வழிப் போக்கனுக்குக் கண் தெரியவில்லை. அவனுக்குக் கை கொடுத்திடுவாய். -எ

* * * *

நிலத்திலிருந்து திரும்பிய காலை ஒளியின் எதிரொலிதான் பறவையின் பாட்டு. -ப.ப

* * * *

என் இறைவா, என் நிழல்களிலிருந்தே என்னைக் காப்பாற்றிடு. இனி வரும், நாள்களில் எதிர்ப்படும் குழப்பங்கள், தடுமாற்றங்களிலிருந்தும் என்னைக் காத்திடு. -எ

* * * *

உலகம் தன்னை அறிந்து கொள்வதே நமது உணர்வு நிலையில்தான். -எ.எ

*     *     *     *

உன் அன்பை அளித்துள்ளாய் நீ எனக்கு . அதன் மூலம் உலகை உன் பரிசுகளால் நிரப்பி விட்டாய். - எ

*     *     *     *

ஒளியினால் முத்தமிடப் படும்போது கருமுகில்கள் விண்ணகத்தின் மலர்களாகின்றன. - ப.ப

*     *     *     *

ஒரு முறையேனும், உன் கனிந்த பார்வையை என் மீது திருப்புவாயாக, இறப்பை மீறி என் வாழ்வு இனிமை யாகிவிடும். - தோ

*     *     *     *

அமைதியான இரவின் மூலம், காலைப் பொழுதின் சோம்பித் திரியும் நம்பிக்கைகள் என் நெஞ்சக் கதவைத் தட்டுவதை நான் கேட்க முடிகின்றன. - மின்

*     *     *     *

விளக்கின் அமைதிபோல, இரவின் ஒலியின்மை பால்வீதி ஒளியில், வெளிப்படுகிறது. - ப.ப

*     *     *     *

மனமுவந்து நீ அளிப்பதை நான் ஏற்றுக் கொள் கிறேன். இதற்குமேல் நான் வேண்டுவது யாதென்று மில்லை. - தோ

*   *   *   *

பழமையின் நிலையான செல்வத்தைக் கூடவே கொண்டு வருகிறது எனது புதிய நேயம். - மின்

*   *   *   *

பருதி ஒளியைப் பருகிக் கொண்டு குன்றுகளாகிற இதழ்களைக் கொண்ட ஒரு மலர் போன்ற தோற்றமளிக்க வில்லையா இந்த மலை? - ப.ப

*   *   *   *

எனது வெற்றியில் மட்டுமே உனது அருளைக் காணும் கோழையாக நான் இருந்து விடக்கூடாது, எனது தோல்வியில் கை தூக்கி விட முன்வரும் உனது கையின் பிடி துணையைக் காண்பேனாகுக. - க.கொ

*   *   *   *

என் ஆன்மாவிலிருந்து இருள்மேகம் விலகும் போது, என் புன்னகையில் இசை பிறக்கிறது. -எ

*   *   *   *

என் நெஞ்சமே, காற்றும் நீரும் படகு நகரத் துணை புரிகின்றன. அது போன்றே, உலகின் சுழற்சியில் உனது அழகை காண்பாயாக. - ப.ப

*   *   *   *

என் தெய்வமே, நீ என்னைக் காப்பாற்றும் பொழுது, உலகங்களின் நடையில் அடி வைப்புகள் மென்லென உள்ளன. - எ

* * * *

வழி முறைகளிலிருந்து மகிழ்ச்சிக்கு, அறத்திலிருந்து அன்புக்குத் திரும்பும்பொழுது, முடிவுள்ளது என்று முடிச்சை அவிழ்த்து முடிவற்றது, என்கிற நிலைக்குத் திரும்பும்போது நமக்கு விதிக்கப்பட்ட கடமையை நிறைவேற்றி முடிக்கிறோம். - சா

* * * *

துயரத்தைக் கொணர்ந்தாலும் காதலை நம்பு. உன் நெஞ்சக் கதவை அடைத்திடாதே. - தோ

* * * *

ஓ, வானமே, எனக்கு உரித்தான பலகணியிடத்து உன்னுடன் என் மனம் இணைகிறது; உனக்கே உரிய பேரரசின் வெட்ட வெளியில்லை. - மின்

* * * *

என்னைச் சலனப்படுத்தும் அளவிற்கு அன்பிற்கு முழு உரிமை அளிக்கப்படுவதையே நான் விடுமுறையென்று கருதுகிறேன். - நா

* * * *

உணர்வு நிலையின் முழுமையே அன்பு. - சா

* * * *

முடிவற்ற உள்ளுயிரே முடிவான உண்மை என்பதை நாம் எப்பொழுது உணர்கிறோமோ, அதனுடன் நாம் இணையும்பொழுது நம் உள்ளுயிரின் மகிழ்ச்சியை நாம் புரிந்து கொள்கிறோம். - படை

* * * *

விண்மீன்கள் தோன்றுவதற்கு முன்னர் நிலவிடும் இருட்டுப்போல், தனது கடைசி இசை பிறக்கக் காத்திருக்கிறது, என் வாழ்க்கையின் வெற்று வேய்க்குழல். - மின்

* * * *

மாந்தனை நாம் விரும்பினாலன்றி, மாந்தனை நாம் என்றுமே நன்கு புரிந்து கொள்ள முடியாது. - சா

* * * *

எல்லாப் பொருள்களும் உயிர். நாம் சார்ந்த கண்ணோட்டத்தில் தன் போன்றே இருக்கிறது என்பதை உணரும் பொழுதுதான், உலகம் பற்றிய நம் உணர்தல் முழுமை பெறுகிறது. - படை

* * * *

உனது உலகிற்கு என்னை இட்டுச் செல். என்னிடம் இருப்பவை யாவற்றையும் மகிழ்சியுடன் துறப்பதற்கான உரிமையை அளித்திடு. - ப.ப

* * * *

ஓ அரும்பே, வழிவிடு, வழி விடு, உன் நெஞ்சத்தைக் கீறிக் கொண்டு வழிவிடு. நெஞ்சத்தை விண்டு காட்ட வேண்டும் என்கிற விரைவு உணர்ச்சி உன்னிடம் புகுந்து விட்டது. இனி என்றுமே நீ அரும்பாக இருக்க முடியாதோ? - நா

* * * *

மண்ணோடு பிணைப்புண்டுள்ள மரத்திற்கு அதனிடமிருந்து பிரிந்திருப்பது விடுதலையாகாது. - மின்

* * * *

பாடங்களின் கோர்வையை அலைகளாகக் கொண்ட என் நெஞ்சம் செங்கதிர் பரந்திருக்கும் பகலாகிற பசுமை உலகை அணைத்திடத் துடிக்கிறது. - ப.ப

* * * *

அழிவில்லாத மேலுலகில் எல்லாம் நடந்து முடிந்து விட்டது. ஆனால் மண்ணில் பூத்திருக்கும் மலர்களின் மாயத் தோற்றம் இறப்பு என்கிற நிலை மூலம் என்றும் போலிவுடன் இருக்கிறது. -தோ

* * * *

மாறி மாறி சேர்ந்து கொண்டும் பிரிந்து கொண்டுள்ளவையும், வாழ்க்கையுடன் பின்னப்பட்டுள்ளவையுமான நூலிழைகளால் தான் வாழ்க்கை என்கிற சித்திரத் திரைத் துகில் நெய்யப்படுகிறது. - மின்

* * * *

நண்பனே, ஒன்றாகவே நாம் இருவரும் இங்கே வந்தோம். இப்பொழுது எதிரும் புதிருமாய் செல்ல வேண்டிய நேரம். உனக்கு வாழ்த்து கூறி விடைபெறுகிறேன்.

உனது பாதை பரந்தது. உன்னெதிரே நேராய் தெரிகிறது. ஆனால் எனக்கோ, தெரியாத பாதைகளிலிருந்து அழைப்பு வருகிறது.

காற்றையும் முகிலையும் நான் பின் தொடர்வேன். குன்றுகளுக்குப் பின் தோன்றும் பகலுக்கு இட்டுச் செல்லும் விண்மீன்களைத் தொடர்ந்து செல்வேன். நான் காதலிக் கிறேன் என்கிற பாடலாகிய ஒரே இழையை மாலையாகத் தொடுத்து இணைந்து நடந்து செல்லும் காதலர்களைப் பின் தொடர்வேன்.

நாள்தோறும் உன் தலையை நிமிர்த்துகையில், ஒரு கடைக் கண் பார்வையின், கையசைப்பில், அலைகளின் மூலம் கடல் பேசுவதைப் போல், உன் காதல் பேசுகிறது. -நா

சாலையோர புல் விண்மீனை விரும்புகின்றது, உனது கனவுகள் மலர்களாக வெளிப்படுகின்றன. - ப.ப

* * * *

அரும்பை முகிழ்க்க வைக்கிறவன் அதை வெகு எளிதாகவே செய்து விடுகிறான். அதை ஒரு பார்வை பார்க்கிறான். அவ்வளவு தான். அதன் நரம்புகளில் உயிர்ப் பாற்றல் ஓடத் தொடங்கி விடுகிறது. - க.கொ

* * * *

மழையின் நிழலில் என் நெஞ்சம் அமர்ந்திருக்கிறது, உன் அன்பிற்காகக் காத்திருக்கிறது. - எ

* * * *

உன்னிடம் என்னை இழப்பதைக் காட்டிலும், கரை சேர்வது சிறப்பானதா? - நா

* * * *

வெளியெங்கும் ஒலித்திடும் உரத்த குரல்களுக் கிடையே தனித்திருக்கும் ஒரு மரத்தின் அமைதியான நெஞ்சத்தில் எனது உள்ளுயிர் இன்றிரவு தன்னை இழக் கிறது. - மின்

* * * *

என் நெஞ்சமே, உறுதி தளராமலிரு.
பொழுது விடியும். -எ

* * * *

விலை மதிப்பில்லாதது அறிவு. காரணம், முழுவது மாக நாம் அதை அடைய நேரம் கிடைப்பதில்லை. -தோ

* * * *

அமைதியாக நான் வழிபாடு செய்வதை உனக்கு நான் சொல்லும் நன்றி அழித்து விடக் கூடாது. -மின்

* * * *

இன்று பகலில் பாடவேண்டிவற்றை நான் பாடிவிட்டேன். மாலையில் புயல் வீசும் தெரு வழியாக உனது விளக்கை நான் எடுத்துச் செல்வேன். -ப.ப

* * * *

வாழ்வின் வேட்கைகள் குழந்தைகளின் உருவத்தில் வருகின்றன. -மின்

* * * *

வீட்டிற்கு வா என்று நான் உன்னை அழைக்க வில்லை.

கரை காண முடியாத தனிமையில் நான் வாடும் போது உடனிரு, என் அன்பே! -ப.ப

* * * *

வெளியில் சொல்லப்படாத அன்பு புனிதமானது. மனச் சோர்வின் இருண்மையில் மாணிக்கமாய் அது ஒளிர்கிறது. -தோ

* * * *

இளவேனிற் பருவம் ஒரேயடியாக மறைந்து விட்டதேயென்று வாடிப்போன மலர் பெருமூச்சு விடுகிறது.
-மின்

* * * *

இந்த மரத்தில் நடுங்கிக் கொண்டிருக்கும் இலைகள் சிறு குழந்தையின் விரல்கள் போன்று என் நெஞ்சத்தை வருடுகின்றன. -ப.ப

* * * *

வாழ்க்கை என்கிற என் தோட்டத்தில், என்றுமே சேர்க்கப்பட்டுச் சேமிக்கப்படுத்தப் படாத ஒளி, நிழல் போன்றே என் செல்வமும் இருந்திருக்கிறது. -மின்

* * * *

உனது இசைக்கலை, ஒரு போர்வாள் போல, அங்காடிச் சந்தடியில் அதனுடைய நெஞ்சத்தில் பாய்ச் சட்டும். -ப.ப

* * * *

ஆழ்ந்த அச்சத்தில் என்னைக் காப்பாற்றுமாறு நான் இரக்கக் கூடாது, எனது விடுதலையைப் பெற எனக்குப் பொறுமை இருக்கட்டும். -க.கொ

* * * *

என்றுமே எனதாயிருக்கிற பழம், நீ ஏற்றுக் கொண் டுள்ள பழம்தானே. -மின்

* * * *

மண்ணிலும் விண்ணிலும் இருள் மண்டி ஒளி மங்கி வருகிறது. எந்தத் திசையில் செல்கிறோம் என்று கூடச் சொல்ல முடியவில்லை. -வ.பி

* * * *

உனது மெல்லிய குறு குறு பேச்சின் உட்பொருளை மலர்களிலும், வெஞ்சுடர் வெளிச்சத்திலும் நான் காண்கிறேன். -ப.ப

* * * *

அடக்கத்தில்தான் இருக்கிறது அழகின் பேராற்றல் வேண்டும், அல்லது சிறு துளியும் கிடைக்கக் கூடாது. ஆகவே தான் அது எதையுமே கேட்பதில்லை. -எ.எ

* * * *

மேலுலகின் பகுதியை தன் உடன் பிறந்தோனாகக் காண்கிறது மல்லிகை. -மின்

* * * *

வாழ்க்கைக் களத்தில் துணைவர்களை நான் தேடிக்கொண்டிருக்கக்கூடாது. நான் நம்ப வேண்டியது எனக்குரிய வலிமையை மட்டுமே. -க.கொ

இலையுதிர் கால பனிப் போர்த்திய நிலத்தின் ஆர்வம் துலங்கும் முகம் என் நெஞ்சத்தின் பேராவலைக் கிளர்ந்தெழச் செய்கிறது. -எ

* * * *

கதிரவனின் ஒளி, விசும்பு, பசுமை நிறைந்த நிலம் இவற்றை நான் கண்டு இன்புற்றிருக்கிறேன்.

நள்ளிரவைக் கிழித்துக் கொண்டு வந்த ஆற்றின் பண்ணொலியைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். -எ

# கோடை காலம்

என் அன்பே, என் கண்களில் உன்னை மறைத்து வைத்துக்கொள்வேன்.

என் மகிழ்ச்சியில் ஒரு மாணிக்கம் போல் உன்னை இழையிட்டுக் கொண்டு என் மார்பில் உன்னை மாட்டி வைத்துக் கொள்வேன்.

நான் குழந்தையாகயிருந்த காலத்திலிருந்தே என் நெஞ்சத்தில் நீ குடி புகுந்துள்ளாய்.

என் இளமைக் காலத்திலிருந்தே, என் வாழ்க்கை முழுவதிலுமே, என் கனவுகளிலும் கூட, நீ என்னுடனேயே வாசம் செய்கிறாய் உறங்கும் பொழுதும் விழித்திருக்கும் பொகுதும் கூட.

-நா

குழந்தைப் பருவத்தில் இந்த வெண்ணிற மலர்களை, மணமுள்ள இந்த மல்லிகைகளை, என் கை நிறைய அள்ளிக் கொண்ட அந்த முதல் நாளை நான் மறக்கவில்லை என்றே தோன்றுகிறது. -வ.ம

* * * *

நான் மறைந்துபோன பின்பும் கூட, என்னைப் பற்றிய நினைவுகள் உனக்குத் தோன்றிக் கொண்டிருக்கட்டும், விண்மீன் அமைதியுடன் ஞாயிற்றின் மறைவு ஒன்று சேரும் போது ஒலியற்று ஒளிருவதைப்போல. -ப.ப.

* * * *

மறைவிற்குப் பின்னரும் வாழ்ந்து கொண்டிருப்பதே வாழ்வின் உண்மையானப் பொருள். தன்னிடமிருந்தே அது மேலும் மேலும் வளர்ச்சி பெற்றுக்கொண்டே இருக்கிறது. -எ.எ

* * * *

அமைதியான இருட்டின் பின்னே கண்ணுக்குத் தெரியாத விருந்தாளி நடை போடுகிறான்; என் நெஞ்சம் நடுக்கம் காண்கிறது. -எ

* * * *

ஓய்வாகிற மாலை விண்மீனை என் நெஞ்சத்தில் ஏற்றி வைத்திடு. அந்த நேரத்தில் இரவு என்னிடம் காதல் மொழி பேசட்டும். -ப.ப

* * * *

என் வலியைக் குறைத்திடு என்று உன்னிடம் இரந்திட மாட்டேன்; மாறாக என் நெஞ்சம் அதை வென்றிட அருள்புரி என்றுதான் வேண்டிடுவேன். -க.கொ

* * * *

விண்ணாகிற கோவிலில் கண்ணுக்குப் புலப்படாத கொடியை ஊன்றிடு.

அது ஒளி வீசத் தொடங்குமுன் உன் மனத்தை அமைதியில் ஆழ்த்திடு. -க.பா

* * * *

இன்றைய பணியை முடித்து விட்டேன். தாயே, உனது தோளில் என் முகத்தை மறைத்துவைத்துக் கொள்வாய். நான் கனவு காண வேண்டும். -ப.ப

* * * *

அவன் ஆட்சி செலுத்துகிற இடத்தில் இறைவனுக்கு நம் பத்தியைச் செலுத்த வேண்டும்.

அவன் அன்பு செலுத்துகிற இடத்தில் அவனைப் பார்த்து நாம் நகைப்போம். -எ.எ

* * * *

கட்டற்ற பறவையே, உனது குரல் நான் உறங்கும் கூட்டினை எட்டுகிறது. அயர்ந்திருக்கும் என் சிறகுகள் முகில்களின் மேல் படர்ந்திருக்கும் ஒளி நோக்கிப் பயணம் செய்வதாகக் கனவு காண்கின்றன. -மின்

* * * *

இடர்களிலிருந்து என்னைக் காக்குமாறு, உன்னை வேண்டிக் கொள்ளாமலிருப்பேனாக. மாறாக அச்சமில்லாமல் அவற்றை எதிர் கொள்ளும் ஆற்றலை அளிப்பாயாக. -க.கொ

* * * *

அதிகாலையில் என் வீட்டு வாயிலுக்கு வந்தாய், இசை பொழிந்தாய். -எ

* * * *

கண்களை நன்கு விழித்துப் பார்க்கிறேன், புன்னகை புரிகிறேன், எங்கும் அவன் அழகைக் காண்கிறேன். -க.பா

* * * *

அரை குறையாய் விழித்திருக்கிற குழந்தை தன் தாயை மங்கலான அதிகாலை வெளிச்சத்தில் பார்க்கிறது. அது போன்றே நான் உன்னைப் பார்த்திருக்கிறேன். அந்தக் குழந்தை புன்னகை பூக்கிறது, பின்னர் உறக்கத்தில் ஆழ்ந்து விடுகிறது. -க.பா

* * * *

இரண்டு உள்ளுயிர்களிடையே நிலவும் முடிவற்ற தூரத்தை இசை நிரப்பிவிடுகிறது. -க.பா

* * * *

அமைதியற்ற என் மனத்தை நான் சலனமின்றி செய்து விடுகிறேன், என் உள்ளம் ஒளி வீசுகிறது. -க.பா

* * * *

கூட்டத்தோடு கூட்டமாக நான் சாலையில் சென்று கொண்டிருந்தபோது, மாடியிலிருந்து நீ புன்னகைப்பதைக் கண்டேன். நான் பாடலானேன், இரைச்சலில் யாவற்றையும் மறந்து போனேன். -ப.ப

* * * *

அன்புடன் ஒன்றியிருக்கும்பொழுது, நமது மனவுறுதி முழுமை பெறுகிறது, ஏனெனில் அன்பே உண்மையான விடுதலையாகும். -எ.எ

* * * *

உன் அன்பு முகத்தில் நான் கண்விழிக்கும் பொழுது நலமான எனது இரவு முடிந்துபோகிறது.

புலர்காலை நெருப்பாகிற தன் உரைகல் மூலம் என் நெஞ்சத்தைத் தொடுகிறது. -எ

* * * *

அதனுடைய செல்லமாகிற சுமை உனக்கு அளிக்கப் படாததினால் என் நெஞ்சத்தை ஒரு கவலை வாட்டுகிறது. -க.கொ

* * * *

மண்ணில் கற்களை இழக்கிறபோது மடிந்து மக்கிப் போன இலைகள் வனத்தின் வாழ்க்கையில் பங்கெடுத்துக் கொள்கின்றன. -மின்

* * * *

ஆழம் கணக்கிடப்படாத கடல் போன்று அன்பின் வலி என் வாழ்வைச் சுற்றி இன்னிசை பொழிகிறது. மலர்ந்திருக்கும் சோலைகளில் பாட்டிசைக்குப் பறவைகள் போல் அன்பின் மகிழ்ச்சி இன்னிசை எழுப்புகிறது. -ப.ப

* * * *

இருட்டிலிருந்தும் ஒளியிலிருந்தும் வானம் தன் சொற்களைத் தேடுகின்றதே, அதே போல் தனது ஒலிகளிலிருந்தும் அமைதியிலிருந்தும் மனம் தன் சொற்களைத் தேடுகிறது. -மின்

* * * *

நீயே வானம், நீயே கூடு---- -கீ

* * * *

முழுமையான அமைதியில் நெஞ்சத்தை நிலைக்கச் செய்யும் அன்பை எனக்கு அனுப்பிவைத்திடுவாய். -க.கொ

* * * *

கண்ணுக்குப் புலப்படாத இருட்டு அவனது புல்லாங் குழலை இசைக்கிறது: ஒளியின் தாளம் விண்மீன்களாகவும், எண்ணங்களாகவும், கனவுகளாகவும் வடிவு எடுக்கின்றன. -மின்

* * * *

தங்களுடைய தீபங்களை அவை தாங்களே ஏற்றிக் கொள்கின்றன. தங்களுடைய ஆலயங்களில் தங்களுடைய மொழியிலேயே இசைக்கின்றன.

ஆனால் பறவைகளோ உனது பெயரை உனது காலை ஒளியில் பாடுகின்றன. காரணம் உனது பெயரே, மகிழ்ச்சி தான். -ப.ப

தலைவனை வரவேற்க முகத்திரையை விலக்கி இன்முகம் காட்டும் மணப்பெண்ணைப் போல, காட்டிலே செல்லும் சாலையின் திருப்பத்தில், இலையுதிர் காலத்து படிஞாயிற்றின் புதுமை என்னைத் தேடி வந்து எனக்குக் காட்சியளித்திருக்கிறது.

உயிர் மட்டுமே தொடக்கூடிய மலரை உடல் எவவாறு தொடமுடியும்? -தோ

* * * *

விண்ணுக்கு விண் நீரைப் பரவலாகப் பொழிந்து வரும் கோடைக் கொண்டலாக நீ என்னிடம் வருவாய். -எ

* * * *

நாம் மூச்சுவிடும், ஒவ்வொரு கணமும் இறைவனிடத்தில் நாம் உறைந்துள்ளோம் என்கிற உண்மையை நாம் உணர்வோமாக. -ஆ

* * * *

முடிவற்ற வாழ்க்கைக்கு இசைப் பாடும் தனது பொன்மயமான இசைக்கருவியை விண்மீன்களின் அமைதிக்கு உவந்தளிக்கிறது பகல் பொழுது. -மின்

* * * *

உனது ஒரு பகுதியை இறைவனுக்கும்,மற்றொரு பகுதியை வேறு யாருக்காவது அளித்தும் பிளவுபட்டிருப்பா யானால், எவையும் இடர்ப்பாடாய்ப் போய்விடும். -கோ

* * * *

உள்ளுயிர்ப்பு உலகில் எனக்கு நம்பிக்கை உள்ளது, ஆனால் அது உலகியலிலிருந்து விலகியுள்ளது என்கிற நோக்கில்லை. அதனுடைய சூழ்ந்த உண்மைத் தன்மை யினால்தான். -ஆ

* * * *

கொடிய புயல் காற்றுகள் வீசியடிக்கும் உலகம்தான் இசை உலகம். அதே சமயம் அழகாகிற இசையினால் கட்டுப்படுத்தப்பட்டது, அதன் கடுமை. -ப.ப

கடவுளையன்றி வேறு எவர் ஏழைகளைக் கருத்தில் கொள்கிறவர்? -த.ஓ

* * * *

வட்டமிட்டுச் சுழலும் நாட்டியத்தின் நெஞ்சத்தில் இடைப்பகுதி அசைவற்று அமைதியாக இருக்கிறது. -மின்

* * * *

என் நெஞ்சமே, அமைதியாக அமர்ந்திரு, உன் தூசியைக் கிளப்பாதே.

உன்னை அடைவதற்கான வழியை உலகம் தானே தெரிந்து கொள்ளட்டும். -ப.ப

* * * *

எதிர் காலப் பலன்களுக்காக இல்லாமல் இந்த நேரத்திற்கு மட்டுமே தங்கி நிற்கிற மலர்களின் இதழ்களை வேனிற்காலம் உதறி வீசுகிறது. -மின்

* * * *

பாம்பு சீறிச் சென்றிடுமுன் அம்பினிடம் வில் கிசுகிசுக்கிறது. உனது விடுதலையே எனது விடுதலையும் -ப.ப

* * * *

கனக்கற்ற பரிசுகளின் மூலம் தன்னையே தன்னிச்சையாக வழங்கி விடுகிறது அன்பு. -சா

* * * *

நிலத்தின் உறக்கமாகிற தளைகளிலிருந்து விடுபடும் மகிழ்ச்சி எண்ணற்ற இலைகளுள் பாய்கிறது; ஒரு நாள் மட்டும் காற்றில் கூத்திடுகிறது. -மின்

* * * *

உனது முத்தமாகிற தங்கப்பேழையே எனது நெஞ்சம் என்றது மறைந்திடும் கதிரவனில் வெளிப்படும் முகில் ஞாயிற்றினிடம். -ப.ப

* * * *

காதல் என்பது வெறும் உணர்வில்லை; அதுவே மெய்யெனும் படைப்பின் அடிப்படை. -சா

* * * *

வீடைப்பற்றி கவலை யாவற்றையும் அகற்றுகிறது பெண்ணின் புன்முறுவல்; அவளுடைய அன்பு இறைவனின் அருள்.
-எ

* * * *

தொடுவதின் மூலம் நீ இழக்கலாம்; விலகி நிற்பதன் மூலம் நீ அடையலாம்.
-ப.ப

* * * *

உன் குழலைக் கீழேவைத்திரு; என்னை அணைத்துக் கொள்ள உன் தோள்கள் கட்டற்றிருக்கட்டும்.
-நா

* * * *

தனித்தொரு சிரிப்புடன் சிறகுகளாகிற வியப்புகளில் எனது எண்ணங்கள் தீப்பொறிகள் போன்று கவர்ந்து செல்லட்டும்.
-மின்

* * * *

வெந்து கொண்டிருக்கும் மரக்கட்டை தீக்குழலில் தவித்தவாறே அலறுகிறது. இதுவே எனது மலர் மஞ்சம், எனது விடியல்.
-ப.ப

* * * *

ஆழங் காணமுடியாத இரவின் மேற்பரப்பில் மிதந்து கொண்டிருக்கும் வண்ண நீர்க்குமிழிகளே நாள்கள். -ப.ப

* * * *

# அன்பை அனுப்புவாய்

செங்கதிர் வெப்பத்தில் உறங்கிக் கொண் டிருக்கிற மரங்களினடியில் தேங்கிக் கிடக்கிற தண்ணீர் இருக்கு மிடத்தில் ஒதுங்கியிருக்கிற யாராவது ஒருவரிடம் காதோடு காதாகப் பேச வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது.

நீர் விடாய் கொண்டுள்ள நிலத்தை வாழ்த்து கிறதும், வீட்டிலுள்ள மண்பாண்டங்களை நிறைக்கிறதுமான மழை போன்று குளிர்ச்சியாக வும் தூய்மையுமாயிருக்கிற அன்பை எனக்கு அனுப்புவாய்.

-க.கொ

இரவில் உனது மழைப் பொழிவிற்காக நான் காத்திருக்கிறேன் அப்பொழுது திறந்த நெஞ்சத்துடன் அமைதியாக உன்னை வரவேற்பேன். -எ

* * * *

உனது அலைகளை நான் ஏற்றுக் கொள்ள முடியாது; என்கிறது கரை ஆற்றிடம்,

'உனது அடிச்சுவடுகளை என் நெஞ்சத்தில் தாங்கி யிருப்பேன்'. -ப.ப

* * * *

அன்பின் உயர்ந்த தீவிரத்தை எனக்கு அளித்திடு வாய். பேசுவதற்கான துணிவு, செய்வதற்கான துணிவு, உன் விருப்பப்படி தொல்லையைத் தாங்கிக் கொள்வதற்கு யாவற்றையும் ஒதுக்கித் தள்ளுவதற்கான அல்லது தனித்து நிற்பதற்கான துணிவு-இவை எனக்கு வேண்டுபவன. உன்னிடம் நான் வேண்டிக் கொள்வதும் இதுதான். -நா

* * * *

காலைப் பொழுதின் மூடிய கண்களிடம் மறையும் இரவின் ஒரு முத்தும் காண விண்மீனில் மின்னுகிறது.

-மின்

* * * *

இந்தச் சிறிய உலகின் இரைச்சல் கூட, இந்த நாள் எல்லா உலகங்களுடைய அமைதியையும் அமுக்கி விடுகிறது. -ப.பா

* * * *

தன்னிடமிருந்தே சட்டென வெளிப்படுகிற, மறு படியும் தோன்றாத ஓர் இசையோசையைக் கேட்டு நீரோடை சிலிர்த் தெழுவதைப் போல், எண்ணங்கள் பெருக்கெடுத்து வழியும் போது ஒரு மின்வெட்டுப் போல் என் மனம் துள்ளி எழுகிறது. -மின்

உனக்கு உண்மையான பணிவிடை செய்வதற்காக என் நெஞ்சத்தை எளிமையாகவும் தூய்மையாகவும் மனத்தை அமைதியாகவும் வைத்துக் கொள்வேன். -ஈ

* * * *

உன்னுடைய அரியணையை விட்டிறங்கி, என் குழலின் வாயிலின் முன் நிற்கிறாய். -கீ

* * * *

காதலே, உனது பாடங்களைக் கற்றுக்கொடு எளியவர்களுடைய ஆற்றலையும் , படையற்றவனுடைய படைகளையும் எனக்கு அளித்திடு. -கோ

* * * *

இரவின் மலர் போன்று உன் கைகளில் கடைசி தொடுதலும் மென்மையாயிருக்கட்டும். -தோ

* * * *

பகலின் எல்லையை இரவு தொடும் இடத்தில் உன்னை நான் எதிர்கொள்கிறேன். -எ

* * * *

இடைவிடாத படைப்புதான் உயிர், எல்லை காண முடியாத நிலைக்கு அது தன்னையும் மீறிய வளர்ச்சியை அடையும்போது உண்மையை உணர்த்துகிறது. -ஆ

குளத்தில் படிந்திருக்கும் நீல நிறம் போல, பெண்ணே உனது எளிமை உனது உண்மையின் ஆழத்தை வெளிப்படுத்துகிறது. -ப.ப

* * * *

என் நண்பனின் உதடுகளிலிந்து புன்னகையைப் புல்லாங்குழல் திகழவிடுகிறது; அதை என் வாழ்க்கை முழுவதுமாகப் பரப்பிவிடுகிறது. -க.கொ

வாழ்க்கை என்கிற தடமில்லா கடலிலூடே எங்களை வழி நடத்திச் செல்லும் வடமீன் ஒளி நீயே. -ஈ

* * * *

ஞாயிறு மேற்கில் மறையும் போது, காலை நேரமாகிய அவனது கிழக்கு அமைதியாக அவன் எதிரே நிற்கிறது. -ப.ப

* * * *

கனியாகப் பழுப்பதற்கு முன் எனது ஆசையாகிற மலர் மண்ணில் உதிர்வதில்லை. -சி

* * * *

வரலாற்றுப் புழுதியில் மறைந்து விடாமல் கணக்கிட முடியாத காலம் என்கிற கழுக்கத்தில் என்றும் வாழ்கிறது குழந்தை. -மின்

* * * *

எனது பரிசின் ஒரு பகுதி மட்டுமே இந்த உலகில் இருக்கிறது. மற்றப் பகுதிகள் என் கனவுகளில் உள்ளன. -எ

* * * *

அன்பு, நினைவில் உருகட்டும்; துன்பம் பாடல்களில் உருகட்டும். -தோ

* * * *

படைப்பின் படிக்கட்டுகளில் எழுகிற ஒரு மென்மை யான சிரிப்பு காலத்தினூடே விரைவாக அதை எடுத்துச் செல்கிறது. -மின்

* * * *

இரவின் கருமை ஒரு மூட்டைப் பொன்னிறமாகத் திடீரெனத் தோன்றுகிறது. -ப.ப

* * * *

தனித்தனிப் படைகள் நீண்டதொரு முடிவில்லா மையைப் கோருமானால், இசையாகிற உண்மை அழியா மையை இழக்க நேரிடலாம். -எ.எ.

* * * *

என் அன்பே, என்றாவது ஒரு நாள் நீ என் நெஞ் சத்தைக் கவர்ந்து விடுவாய். இது எனக்குத் தெரியும்.. -எ

* * * *

வாழ்க்கையின் வெறுமைக்கு வானவில்லின் வண்ணங்களை அள்ளித் தருவது நமது ஆசை. -ப.ப

* * * *

தன் உண்மை நிலையைப் பிறருக்குப் புலப் படுத்தவும், மரியாதை பெறவும் ஒரு வாழ்நாள் முழுவதும் தேவைப் படுகிறது. -சித்

* * * *

உன் கூரிய விழிகளை என் கனவுகளில் ஆழமாய்ப் பாய்ச்சுகிறாய். -எ

* * * *

என் கையில் யாரோ அன்பாகிற மலரைக் கமுக்கமாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். -எ

* * * *

நிரம்பி வழிந்தோடும் இறைவனுடைய இனிமையை அவளுக்கே எவள் எப்பொழுதும் திருப்பிக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறாளோ அவளே என்றும் இளமையுடனும் விளங்கும் அழகி. -க.கொ

* * * *

தனது விளையாட்டுப் பொருள்களாகிய பொருளில் லாத முகில்கள், அழிந்து போகக் கூடிய ஒளி. நிழல்களுக்குத் தெய்வீகக் குழந்தை. அதோ புன் முறுவலித்தவாறே நிற்கிறது. -மின்

* * * *

அன்பின் குறிக்கோள் துயரமோ, மகிழ்ச்சியோ அன்று அன்பு மட்டுமே. -நா

* * * *

கடலின் அருகிலுள்ள தோட்டத்திற்குள் புகுந்திடும் இலைகளே கோடை காலத்தின் வருகையை அறிவிக்கின்றன. -கா.ப

* * * *

என் நண்பனே, காலைப் பொழுதில் தனித்திருக்கும் குன்றின் பனியடர்ந்த மலைக்கோட்டையைப் போன்று கிழக்கிலிருந்து வெளிப்படும் கதிர் உதயத்தின் ஒளியாக கமழ்கிறது உனது பரந்துபட்ட நெஞ்சம். -ப.ப

* * * *

வாழ்க்கையின் சிறப்பே அதை உதறித் தள்ளுவதில் உனக்கு அது அளிக்கும் ஆற்றலில்தான் உள்ளது. ஏனெனில் நிலைப்பேற்றின் நுழைவாயில்தான் இறப்பு. -ஆ

* * * *

ஞாயிற்றிடம் தனக்குள்ள காதலை மழலை மொழியில் மல்லிகைக் கொடி தெரிவிப்பது அதனுடைய மலர்கள் மூலமாகவே. -மின்

* * * *

தங்கத் திரை நெய்யத் தறியில் ஓயாமலோடும் சின்னஞ்சிறு நூனாழிகளைப் போல், விண்மணியின் பொற் கதிர்கள் சிற்றலைகளின்மேல் நடனம் புரியும். -ப.ப.

* * * *

என் பிறவிகள் யாவற்றிலுமே ஒரேவொரு முறை தான் இப்படியொரு மாலைப் பொழுதை நுகர்த்திருக்கிறேன் என்று எனக்குத் தோன்றுகிறது. -ஈ

* * * *

நெருப்பிலிருந்து நெருப்பு பற்றிக்கொள்வதைப் போல, காதலிலிருந்து காதல் பற்றிக் கொள்கிறது. சரி, ஆனால் முதல் பொறி எங்கிருந்து தோன்றியது. -நா

* * * *

விட்டுக் கொடுத்து கொண்டிருப்பதே வாழ்க்கையின் உண்மை. இதன் முழுமையே வாழ்க்கையின் முழுமையும். -ஆ

* * * *

தனது ஒய்வைத் தன் இசையிலேயே காண்கிறது வாழ்வியக்கம். -ப.ப

* * * *

இறையன்பன் அளிக்கும் பரிசுகளினாலே நமது வாழ்க்கை நிரம்புகிறது. -ஆ

* * * *

தன் சிறப்பின் கொடுமுடியில் மாந்தன் இருக்கும் பொழுது, அவன் தன்னுணர்வு இல்லாமலிருக்கிறான்.

முகில்களின் எதிர்ப்பினூடே வண்ணக்கோலங் களாகிற தன் களஞ்சியத்தை வெளிச்சம் அடைகிறது. -மின்

* * * *

நமது வளமையிலிருந்து வாரி வாரி வழங்குவதன் மூலமே நம்மிடமுள்ளது எல்லையற்றது என்பதைப் புரிந்து கொள்கிறோம். -ஆ

* * * *

நான் என்றுமே தேவைப்படுகிறவன் என்பது நான் இன்னமும் இருக்கிறேன் என்பதிலேயே மெய்ப்பிக்கப் படுகிறது. -எ.எ.

* * * *

மழை ஓய்ந்தபின் நனைந்திருக்கும் மரம் பளபளப்பது போல் என் நெஞ்சம், கண்ணீர் சொரிந்துள்ள முந்தைய இரவை நோக்கி இன்று புன்கை புரிகிறது. -மின்

* * * *

எங்களை வாழவிடு. பாவலன் தனது பாடல்களின் மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்போது அடையும் மகிழ்ச்சியைப்போன்றதொரு மகிழ்ச்சியை வாழ்க்கையில் நாமும் பெறுவோமாக. -ஆ

* * * *

நெஞ்சத்தின் பார்வையில் தூரம் மலைப்பைத் தருகிறது. -ப.ப

* * * *

எனது வாழ்க்கையைப் பயனுள்ளதாகச் செய்த தற்காகப் பயன் மரங்களுக்கு நான் நன்றி தெரிவித் திருக்கிறேன். அதே நேரத்தில், மரங்களை என்றும் பசுமை மாறாமல் வைத்திருக் கிற புல்வெளியை நினைவில் நிறுத்திடத் தவறி விட்டேனே. -மின்

* * * *

தனக்கு இணையில்லை என்ற நிலையை ஒருவனது வெறுமை குறிக்கிறது. அதன் மறு பகுதி உண்மை நிலையை உணர்த்துகிறது. - ப.ப

* * * *

மனித சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளும் ஒருங்கிணைந்திருக்கின்றன என்பதுதான் இன்றைய மிகப் பெரிய உண்மை. நமது சிறந்த பண்பாட்டின் மூலம் இந்தச் சிக்கலைத் தீர்த்து நமது மாந்தத்தன்மையை மெய்ப்பித்துக் காட்டவேண்டும். -தே

* * * *

அனைத்திலும் நிறைந்திருக்கும் துயரத்தினூடே என்றும் நிலைத்திருக்கும் அன்னையின் மெல்லிய குரலைக் கேட்கிறேன். -ப.ப

* * * *

அன்பே, என்னை நீ காதலிக்க முடியாவிட்டால் குறையில்லை, எனது துன்பத்தை மன்னித்துவிடு. எட்டி

நின்று என்னை வெறுக்கும் வகையில் பார்க்காதே. நான் எனது மூலைக்கு ஒதுங்கி, இருட்டில் அமர்ந்திடுவேன். -தோ

* * * *

யாரோ ஒருவன் என் நெஞ்சத்தைத் திருடிவிட்டான்; வானின் பரந்த வெளியில் அதை உதிர்த்துவிட்டான். -எ

* * * *

இருட்டில் ஒரு குழந்தை நான். இருட்டின் மறைவில் கைகளைத் துழாவி உன்னைத் தேடுகிறேன், தாயே. -ப.ப

* * * *

நேயத்தில் விழித்தெழுவது என்பது இனிமை நிரம்பிய உலகத்தில் கண்விழிப்பதில்லை. சிறப்பின் மூலம் நிலைப் பேற்றையடைந்து துன்பத்தில் இன்பம் காணும் கடும் முயற்சியில் உலகங்கள் கண் விழிப்பதேயாகும் அது. -எ.எ

* * * *

என் உடன்பிறப்புகளே, உங்களது ஆற்றல் வாய்ந்த மாந்தர்களின் முன்பு எளிமையில் நின்றிட வெட்கப் படாதீர்கள். -தே

* * * *

உன் குழந்தைகளிடம் உன் பெருமையை வெளிப்படுத்தும் தந்தையே, உன்னை நான்; நாணுறச் செய்யக் கூடாது. -ப.ப

* * * *

மனத் துன்ப மதுவை உறிஞ்சி விட, மகிழ்ச்சியைப் பிழிந்து விடவில்லை நாங்கள். -தோ

* * * *

மீட்டப்படாத இசையின் பண்ணொலியை நீ கேட்டதில்லையா? -க.பா

* * * *

வேனிற் காலத்தில் மலர்கள் பூக்கும் என்பதை, ஐயப்படாமல், என் நெஞ்சத்தின் மாரிக்கால விண்ணின் மேல் தன் புன்முறுவலைச் சிந்துகிறது பருதி ஒளி. -ப.ப

* * * *

அடக்கத்தின் உறைவிடமாகவிருக்கட்டும் உனது மணிமுடி; உன் ஆன்மாவின் விடுதலையாக இருக்கட்டும் உனது விடுதலை. -தே

* * * *

நிறைவை அடைவதற்காக வறண்ட ஆண்டுகளின் பாலைவனப் பகுதிகளை நீ கடந்து செல்கிறாய். -ப.ப

* * * *

கட்டுப்பாடுதான் நல்லவர்களின் நுழைவாயில்.
-எ.எ

* * * *

வறுமையாகிற வெறுமையில் அன்றாடம் இறை

வனின் அரியணையை எழுப்பிடு. மலைபோன்றதெல்லாம் உயர்ந்ததுவுமில்லை, செருக்கு எனைறென்றும் நிலைத்திருப்பதுவுமில்லை என்பதையும் நீ உணர்ந்து கொள். -தே

* * * *

எனது பாடல்களினூடே உனது வழிகளின் அடையாளங்களை, சகடம் கட்டித் திரியும் நாடோடியே, நீ கண்டிடுவாய். -ப.ப

* * * *

கடும் நோவுற்றுக் கொண்டிருக்கும் இறைவனின் புதல்வியே, அமைதியின் உருவே, வருக வருக. -தே

* * * *

அழகு என்பது எங்கும் நிறைந்தது. ஆகவே ஒவ்வொன்றுமே நமக்கு மகிழ்ச்சி தரும் ஆற்றல் பெற்றது. -சா

* * * *

உலகின் நெஞ்சத்துடிப்பை போன்று, முழு நிலவே, இவ்வளவு பனைவோலைகளிடையே ஒரு சலசலப்பு தோன்றுகிறது; கடலில் கொந்தளிப்பு ஏற்படுகிறது. இனம் தெரியாத எந்த வானிலிருந்து உனது அமைதியிலே நேயத்தின் துன்புறுத்தும் கமுக்கத்தைப் பதுக்கி வைத்திருக்கிறாய்? -ப.ப

* * * *

அகம்பாவம், தனது கர்வக் குறிகளைக் கல்லிலே பொறிக்கின்றது; அன்போ, மனப்பூர்வமாக மலர்களையே தந்து சரணாகதியடைகிறது. -மி.மி

* * * *

கிழக்குத் திசையின் அமைதியான, பணிவான பொறுமையான இருட்டின் பின் காலைப்பொழுது விடியக் காத்திருக்கிறது. -தே

* * * *

என் வாழ்நாளில் எத்தனையோ இன்ப நாள்கள் வந்து போயிருக்கிறன்றன. மகிழ்ச்சி வாணர்களுடன் நான் எத்தனையோ இரவுகள் விழாக்கொண்டாடி மகிழ்ந் திருக்கிறேன்.

* * * *

நான் எங்குப் பிறக்கப்போகிறேனோ, ஒளி நிரம்பிய அந்தத் தீவை, விண்மீனை என் கண்முன் காண்கிறேன். ஓய்வுப் பொழுதின், விளைந்திடும் ஆழத்தில் என் வாழ்க்கை தன் பணியைத் தொடங்குகிறது. -ப.ப

* * * *

குருட்டுப் பாம்பு இருட்டுக் குழியில் இருக்கிறது. அது தன் தலையில் உள்ள மணி ஒளியையும் அறியாது, பரிதியின் ஒளியையும் அறியாது. -கீ

* * * *

முகத்திரை அணிந்த மணப்பெண்தான் இருட்டு போக்குக் காட்டும் ஒளி தன் நெஞ்சத்திற்குத் திரும்பிட அமைதியாகக் காத்திருக்கிறது அது. -மின்

* * * *

எந்த வாயில் வழியாகத் திரும்பிச்செல்ல வேண்டுமோ அதுவே அடைக்கப்பட்டிருக்கும்போது, மகிழ்ச்சி துன்பமாக மாறுகிறது. -சித்

* * * *

மேலுலகின் காற்று வீசிக்கொண்டிருக்கிறது, நங்கூரம் வெறியுடன் சேற்றினை அணைத்துக் கொள்கிறது. எனது படகு விலங்குடன் உராய்கிறது. -மின்

* * * *

எவனொருவன் இறைவனைக் கண்டும் தொட்டும் இருக்கிறனோ அவன் எல்லா அச்சத்திலிருந்தும் அவலத் தினிடமிருந்தும் விடுபடுகிறான். -க.பா

* * * *

இகழப்பட்ட மாந்தன் வெற்றிக்காக மாந்த வரலாறு பொறுமையாகக் காத்திருக்கிறது. -ப.ப

* * * *

புனிதமான செங்கதிர் இதயத்திற்காகப் படையல் பொருள்களைக் கொண்டு வா. -தே

* * * *

இரவின் அரவணைப்பில் கமுக்கமான ஒரு மகிழ்ச்சி இருக்கிறது.

என் நெஞ்சத்தை அதனால் நிரம்பிக்கொள் வேனாகட்டும்; நாள் முழுவதும் அதைச் சுமந்து செல்பவனாக இருப்பேனாகுக. -எ

* * * *

வாழ்க்கையின் சேமிப்புகள் மெய்யறிவு (அறிவம்) என்கிற நிலையில் ஒன்றுபடும் பொழுது அமைதி என்கிற பள்ளத்தாக்கு எதிர்ப்படுகிறது. பகல் தேய்ந்து மறையுமுன், என் வழிகாட்டியே என்னை அங்கே சேர்த்திடு. -ப.ப

* * * *

பனித்துளிகளின் ஏற்றத்தால் மலர் தலை சாய்ப்பது போல்,எனது நெஞ்சம் வழிகாட்டின் மேலீட்டினால் வளைந்து கொடுக்கிறது. -எ

* * * *

அறுவடைக்குப்பின் தனித்து நிற்கும் வயல்வெளி மீது படியும் காலைப் பொழுதின் பகுதிபோல எனது பார்வை எனது நெஞ்சத்தின் மேல் படிவதை இக் கணத்தில் நான் உணர்கிறேன். -ப.ப

* * * *

மறையப்போகும் ஞாயிறு தனது வெண்மை யாவற்றையும் வழங்கிடும். முகில் உதயமாகும் பெண்மையை ஒரு வறண்ட தன் சிரிப்புடன் தான் வரவேற்கிறது. -மின்

* * * *

# காதல் கண்கள்

உனது நெஞ்சில் உள்ள கமுக்கத்தை என்னிடமே சொல்லிவிடு தோழி!

நீ இவ்வளவு அருமையாகப் புன்முறுவல் பூத்து நிற்கின்றாய்.

உனது நெஞ்சக் கமுக்கத்தை, என்னிடமே சொல்லிவிடு, தயங்கவே தயங்காதே; என் நெஞ்சமே அதைக் கேட்கும், என் காது கேட்காது.

இரவு இருண்டு ஆழமாக இருக்கிறது; வீடு அமைதியாகவே இருக்கிறது; பறவைகளின் கூடுகளிலும் உறக்கம் மண்டிக்கிடக்கிறது.

உனது தயங்கும் கண்ணீர்த்துளிகளின் மூலமும், தயங்கும் புன்முறுவல்களின் மூலமும், இனிய நாணம் நிறைந்த துன்பத்தின் மூலமும், உனது நெஞ்சக் கமுக்கத்தை என்னிடம் பேசித்தீர்த்துவிடு. –எ

ஒரே வரலாறு தான் உள்ளது. மாந்தனுடைய வரலாறே அது. தேசிய வரலாறுகள் யாவும் பெரிய நூலின் பகுதிகளே. -தே

* * * *

கைகளோடு கைகள் இணைகின்றன; கண்கள் மேல் கண்கள் பதிகின்றன. நம் நெஞ்சங்களைப்பற்றிய பதிவு இங்குத்தான் தொடங்குகிறது. -தோ

* * * *

விண்ணைப் படைத்த இறைவன் தானே மண்ணையும் படைத்தான்? -க.கொ

* * * *

இரவில் பொழியும் மழைபோல், அவளுடைய ஆர்வம் ததும்பும் முகம் என் கனவுகளை வட்டமிடுகிறது. -ப.ப

* * * *

அடக்கம் உலகை ஆண்டிடும் என்கிற உண்மைக்கேற்ப அழகின் இசை நம் உள்ளத்தைத் தொடுகிறது. -சா

* * * *

ஒரு பொருளின் பல்வேறு அங்கங்களுக்கு ஒரு முழுமையின் சமநிலைமை அளிக்கும் இணக்கம்தான் உண்மை என்பது. -தே

* * * *

மாலைப் பொழுதாகிற கிண்ணம் அன்பினாலும் இசையினாலும் பொங்கி வழிகிறது. அந்நேரம் நான் யாருடனோ அமர்ந்திருந்தேன். அவனுடைய நினைவு முகத்தையும் விண்மீனில் காண்கிறேன். -ஈ.

* * * *

மண்ணில் கண்ணீர்த் துளிகளே அவளுடைய புன் முறுவல்களை மலர்ச்சியில் வைத்திருக்கின்றன. -ப.ப

* * * *

என் இறைவனை நான் காணும்போது தீமைகள் யாவும் என் நெஞ்சத்திலிருந்து அகன்று விடுகின்றன. -க.பா

* * * *

கண்ணுக்குப் புலப்படாத சில விரல்கள் பயனற்ற தென்றல் போல, நீர்க்குமிழிகளின் இசையை என் நெஞ் சத்தில் பரப்பி வழித்துக் கொண்டிருக்கின்றன. -ப.ப

* * * *

உண்மையின் எளிமையை எதிரொலிக்கும் உன்னை நான் தேடியலைகிறேன். -சித்

* * * *

காலம் காலமாக அவன் எனக்காகக் காத்திருக்கிறான். காரணம் என் அன்பிற்காக அவன் தன் நெஞ்சத்தைத் தொலைத்திருக்கிறான். -க.பா

* * * *

உன்னிடம் உலகம் எந்த மெல்லிய இனிய பேச்சுகளினால் அன்பு மொழிகள் பேசுகின்றதோ, அந்த மொழிகளை, என் நெஞ்சமே உன்னிப்பாய் கேள். -ப.ப

* * * *

கண்ணுக்குத் தெரியாததைக் கூட்டைக் காரிருளில் இசையின் தகவலைத் தன்னிடத்தில் கொண்டு ஒரு புதிராய் விலங்குகிற பறவையைப் போல அழகின் ஒவ்வொரு கணமும் என்னை அடையட்டும். -சித்

உலகில் வாழ்ந்திட நாம் பெற்றுள்ள உரிமையின் முழு விலையையும் நான் எரிந்த பின்னரே நாம் விடுதலை பெறுகிறாய். -மின்

* * * *

இரவின் இருட்டைப் போன்றதே படைப்பின் மறைபுதிரும்; எத்தனைப் பெருமை வாய்ந்தது அது. -ப.ப

* * * *

இலையுதிர் கால இரவின் எரிமீன்கள் போல, அக்கறையில்லாமல் நீ அளித்த வெகுமதிகள் எனது உள்ளத்தின் ஆழத்தில் தீப்பற்றி எரிகின்றன. -மின்

* * * *

நான் குழந்தையாயிருந்த காலத்திலிருந்து நீ என் நெஞ்சத்தில் வாழ்ந்து வந்திருக்கிறாய். -த.ஓ

* * * *

எண்ணியதை அடைந்திடுவேன் என்ற நம்பிக்கை யுடன் காத்திருந்து காத்திருந்து உன் வாழ்நாளைக் கழித்துவிடு. -சித்

* * * *

கண்டறியாத வழிகளில் பறந்து திரியும் இறங்கும் பறவைகள் போல என்னையும் உரிமையுடன் பறக்கவிடு. -எ

* * * *

கடவுளை நீ கண்டிருந்தால் உன்னை முழுமையாக அவனிடம் அளித்துவிடு. உன்னிடம் அவனைக் கொணர்ந் திடு. -க.பா

அழகே உண்மை உண்மையே அழகு என்பதை என்றும் உணர்ந்திருப்பதே நமது வாழ்வின் குறிக்கோள். -சா

* * * *

எல்லோருடனும் இணக்கம் கண்டிருப்பதே வாழ்க்கை என்பதை உணர்வதுதான் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய உயர்ந்த பாடம். -ஆ

* * * *

இந்த சின்னஞ்சிறு எண்ணங்கள் இலைகளின் கலகலப்புகள் அவை மகிழ்ச்சியாக முணுமுணுப்பது என் உள்ளத்தில் தான். -கா.ப

* * * *

விண்ணகத்தில் முழு நிறைவான அமைதி நிலவுகிறது உலக மனத்தையும் தன் அணைப்பில் இறுத்திக் கொள்வது போன்று தோன்றுகிறது. -ஈ

* * * *

பனித்துளி போல் நொய்தானது மகிழ்ந்து சிரித்துக் கொண்டிருக்கும் போதே அது மறைந்து விடுகிறது. ஆனால் துயரமோ உறுதியானது, நிலைத்திருப்பது.

துயரளிக்கும் நேயத்தை உன் கண்களில் உயிர்த் தெழட்டும். -தோ

* * * *

மற்றெல்லா நாள்களைக் காட்டிலும் இன்று எனக்கு மிகவும் உகந்த நாள். காரணம் இன்று என் அன்பிற்குரிய இறைவன் என் வீட்டில் ஒரு விருந்தாளி. -க.பா

* * * *

இந்த உலகில் நாம் பிறவியெடுத்திருப்பது அதைத் தெரிந்து கொள்வதற்காக மட்டுமல்ல, அதை ஏற்றுக் கொள்வதற்காகவே. -ஆ

தாமரை இலைமேல் தத்தளிக்கும் பனித்துளிபோல் சிறப்பான காலம் என்கிற நெஞ்சத்தின் மேல் என் வாழ்க்கை தத்தளிக்கிறது. -ஈ

* * * *

உலகத்தோடு தனக்குள்ள உறவு முறையைப் புரிந்து

கொள்ளாமலிருக்கும்போது, சுவர்களே அயன்மைப்பட்டுப் போகிற சிறையில்தான் மாந்தன் வாழ்கிறான். -சா

*    *    *    *

நேற்றைய அன்பினால் புறக்கணிக்கப்பட்ட கூட்டில் எனது இன்றைய அன்பிற்குப் புகலிடம் கிடைப்பதில்லை.

-மின்

*    *    *    *

காலத்தின் தொடக்கத்திலிருந்து முடிவுரை உனக்கும், எனக்குமிடையே காதல் உள்ளது. இந்த பழய காதலை யார்தான் அணைத்திட முடியும். -க.பா

*    *    *    *

ஊமைநிலத்தின் துடிப்புள்ள குரல் போல், பயன் மரங்கள் என் பலகணியை நெருங்கி வருகின்றன. -ப.ப

*    *    *    *

நிழல்களுக்கிடையே நடந்து செல்லும் காற்றின் கண்ணுக்குப் புலப்படாத உருவமொன்றை நீலவானில் உணர முடியாத தொடுதலை நிறுத்திவிட்டு,நீ எனக்குப் பிடி கொடாமல் மறைந்து விட்டாய். -மின்

*    *    *    *

தான் படைத்த காலை வேளைகளே இறைவனுக்குப் புதிய வியப்புகளாகப்படுகின்றன. -ப.ப

தோட்டத்தில் நாணி நிற்கின்ற நிழல்களே

அமைதியாகக் கதிரவனை விரும்பிகின்றன. மலர்கள் கமுக்கத்தை ஊகித்துக் கொள்கின்றன. புன்சிரிப்பைச் சிந்துகின்றன. இலைகள் மெல்லிய கேலிச் சொற்களை உதிர்க்கின்றன. -மின்

* * * *

மகிழ்ச்சிக் கொள், ஏனெனில் இரவின் தளைகள் நொறுங்கிப் போயின; கனவுகள் மறைந்து போயின. -எ

* * * *

தலையாய நிலையில் மாந்தன் அன்புடையவன் தான் நன்கு புரிந்து கொள்ளுதல் என்பதுதான் அன்றே மற்றொரு பெயர் அன்புறத்தில் தான் அவனுடைய விடுதலையே அடங்கியுள்ளது. -சா

* * * *

நம்பிக்கை என்பது முழுமையாகப் பக்குவப்படுத்தப் பட்ட நிலையில் பெண்மை வடிவில் நிலைத்துள்ளது. -ஈ

* * * *

உனது இறைவன் உன்னிடத்திலேயே உள்ளான். புறக்கண்கள் திறக்கப்பட வேண்டிய் தேவையென்ன?

-க.பா

* * * *

அருவி பாடுகிறது, "விடுதலையில் தான் என் இசை பிறக்கிறது" -ப.ப

என் நெஞ்சத்திலிருந்து வெளிப்படுகிறது, நடனமாடு கிறது.

பளிச்சிடும் களவு மின்னிய பறந்து திரிகிறது. -தோ

* * * *

உலக வாழ்க்கையின் போக்கில் இணைந்தவன் நான். -ஈ

* * * *

பெண்ணே, நீ வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருக் கும்போது, உனது அங்க அசைவுகள், கூழாங் கற்களிடையே குன்றின் நீரோடை செல்கையில் பிறக்கும் இன்னிசையை ஒத்திருக்கின்றன. -ப.ப

* * * *

ஒரேவொரு மலரை அளிக்க உன்னிடம் வந்தேன். ஆனால் தோட்டத்தையே உனக்கு அளிக்க வேண்டும். தோட்டமே உன்னுடையதுதான். -மின்

* * * *

எனது நெஞ்சத்தை எளிமையாகவும், தூய்மை யாகவும், மனத்தை அமைதியாகவும் வைத்துக்கொள்வேன். -ஈ

* * * *

கிழக்கிற்குக் கடைசி வணக்கம் செலுத்திவிட்டு ஞாயிறு மேற்குக் கடலைக் கடக்க முற்படுகிறான். -ப.ப

* * * *

மற்றவர்களுடன் தன்னை இணைத்துக் கொள்வதன் மூலமே நமது உள்ளுயிர் தன்னைப் பற்றிய உண்மையைக் கண்டு கொள்ள முடியும். -சா

* * * *

உனது வாக்கு இரவின் முகத்திரையைக் கிழித்து விட்டிருக்கிறது. இரவின் மொட்டுகள் திறக்கப்படுகின்றன. -எ

* * * *

மதம் உயிரற்று இறுகி முடங்கிப்போய், சுமைபோல அழுத்துகிறது. -கீ

* * * *

வாழ்க்கையின் நல் வாழ்த்துகள் கிழக்கிலிருந்து மேற்குக்குப் பரவுகின்றன. -எ

* * * *

துன்புறுத்தப்பட்ட நிலையில் எனது மீட்டப்படாதத் தந்திகள் இசையை இரஞ்சுகின்றன. -மின்

* * * *

துயரப்பாட்டை வழங்கிக் கொண்டு தயங்கி நிற்கும் நெஞ்சத்தின் தந்திகளைத் தாண்டிக் கொண்டு உலகம் ஓடிக் கொண்டிருக்கிறது. -ப.ப

* * * *

நமதாயிருக்கிற ஏதாவதொன்றைக் காண்பது எந்த ஒன்றையும் புரிந்து கொண்டதற்கு அடையாளம். -சா

* * * *

சிந்தனையிலாழ்ந்திருக்கும் முடிவற்ற காலத்தில் நெற்றியில் புலப்படும் தெய்வீகத் துயரச் சாயலின் தோற்றத்தை முகில் மூட்டம் கொண்ட வானம் இன்று கொண்டுள்ளது. -மின்

* * * *

உலகமளாவிய உள்ளுயிரின் வாழ்க்கையின் தாளத்துடன் கூடிய துடிப்பை எப்பொழுது மாந்தன் தனது உள்ளுயிரிலே உணர்கிறானோ, அப்பொழுதுதான் அவன் விடுதலை பெற்றவனாகிறான். -சா

* * * *

படி ஞாயிற்றின் ஒளி வீசப் பெற்று மண்ணகம் இரவில் பறிப்பதற்கேற்ற நிலையிலுள்ள பழுத்த பழம்போல் காணப்படுகிறது. -மின்

* * * *

செம்பொருள் தன்னை உலகிற்குத் தந்து கொண்டிருக்கிறது. என்னையே நான் கண்டு உணரும் கவிதை போல அதை நான் எனக்குரியதாக்கிக் கொள்கிறேன். -ஆ

* * * *

ஒளியில் நீராடியெழுந்த காலைப் பொழுதுபோல் வெண்ணிற ஆடை உடுத்தி மலர் கொய்யும் உன்னை நான் கண்டேன், நான் கூறினேன் "எனக்கு உதவிட் என்னை ஏற்பதின் மூலம் எனக்கு பெருமை அளி" -நா

* * * *

நமது வாழ்க்கையை அதன் மகிழ்ச்சிகளிலும், துயரங் களிலும், அதன் ஆக்கங்களிலும் தேக்கங்களிலும் அதன் எழுச்சியிலும், வீழ்ச்சியிலும் முழுமையாக விரும்புவதற்கான ஆற்றலை எங்களுக்கு அளி. -சா

* * * *

குழந்தாய், காற்றின் நீரின் மழலையையும், மலர் களின் அமைதியான கமுக்கங்களையும், முகில்களின் கனவு களையும், காலை வானத்தின் ஓசையற்ற வியப்பான பார்வை யையும் என் நெஞ்சத்திற்கு நீ கொண்டு வருகிறாய். -மின்

* * * *

குழந்தைகள் இறைவனால் விரும்பிப் படைக்கப் பட்டவர்கள். -ஆ

* * * *

நேயத்தில் வேறுபாடு என்கிற உணர்வு அற்றுப் போகிறது. தனக்கென விதித்திருந்த எல்லையைக் கடந்து எல்லையற்ற என்கிற நிலையை எட்டி முழுமை என்கிற தனது உயர்ந்த குறிக்கோளை மாந்த உயிர் அடைகிறது. -சா

* * * *

உனது சூழ்ச்சி நயத்தை, ஒதுக்கி வைத்திடு, அன்பு இதுபோன்றவற்றுக் கெல்லாம் அப்பாற்பட்டது, உண்மை யாக யார் அதனைத் தேடுகிறானோ,அவனுக்கு அது கிடைத்து விடுகிறது. -க.பா

* * * *

நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து அமைதியாக அவனது வாழ்த்துகள் அவள்பால் பாயும். -கோ

* * * *

மகிழ்ச்சிகளைப் பொறுத்தவரை அவை நமக்கு மட்டுமாகவே உண்மை. நன்மைகளைப் பொறுத்தவகையோ நமது கட்டுப்பாடுகள் தளர்ந்து விடுகின்றன; அவை யாவருக்கும் அரிதாகிவிடுகின்றன. -சா

* * * *

எனது காதுகளில் ஏதாவது கிசுகிசுத்துவிடு. அது நமது வாழ்க்கையை இன்ப ஊற்றில் ஆழ்த்தி இறப்பை வெள்ளத்தில் முழுகடித்து அழிந்தோடுகிறது. -ஈ

* * * *

கடற்பறவைகளும், கடலலைகளும் ஒன்று சேர் வதைப் போல், நாம் கூடுகிறோம், 'ஒருவரையொருவர் நெருங்குகிறோம்.

கடற் பறவைகள் பறந்து போய்விடுகின்றன. அவை விலகி விடுகின்றன, நாம் பிரிந்து சென்று விடுகிறோம். -ப.ப

* * * *

இலையுதிர்கால காலைப்பொழுதில் என் விருந்தாளி வீடு தேடி வந்திருக்கிறார்.பாட்டிசை, என் நெஞ்சமே. அவருக்கு நல்வரவு கூறு. -எ

* * * *

எனது பணி முடிந்து விட்டது. கடலிலிருந்து தரைக்கு இழுக்கப்பட்டுள்ள படகுபோன்றவன் நான். மாலைப் பொழுதில் அலையெழுப்பும் நாட்டில் இசையைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். -ப.ப

* * * *

மாந்தன் அடையும் உயர்ந்த பேறு அன்பு ஒன்றே, ஏனெனில் அதன் மூலம் அதிகமானதொரு ஆற்றல் தன்னிடம் உள்ளது என்பதையும், தான் அனைவரிடம் நெருக்கமுள்ளவன் என்பதையும் அவன் நன்குணர்கிறான். -சா

* * * *

எந்த ஒரு படகு எல்லா உலகங்களுக்கும் புகலிடமோ, அதைத் துண்டு துண்டாக்கிவிட்டுக் கடலைக் கடக்க முடியுமா? -கீ

* * * *

உன் இறைவன் அருகிலேயே இருக்கிறான். அப்படியும் அவனைக் காணப் பனை மரம் ஏறிக் கொண்டிருக்கிறாய். -க.பா

* * * *

இடர்படும் எளிய மக்களுடன்தான் எனது வாழ்க்கையும் பின்னிப் பிணைந்துள்ளது என்பதில் எனக்கு மகிழ்ச்சியே.
-க.கொ

* * * *

எல்லையற்றது என்பது எல்லைக்குட்பட்டது என்கிற உண்மை விண்மீன்களடங்கிய வானத்தின் முழுமையிலோ மலரின் அழகிலோ காணப்படுவதில்லை. மனிதனின் உள்ளுயிரில்தான் அது உள்ளது. -சா

* * * *

இனிமையானது ஆனால் முழுமையற்ற நெஞ்சத்தில் சிறைப்பட்டிருக்கும் மொட்டில் அழகு சிரிக்கிறது. -மின்

* * * *

குறையுள்ள ஒன்றின் அன்பைப் பெற, நிறையுள்ளது ஒன்று அழகை அணிகலனாக அணிந்துள்ளது. -ப.ப

* * * *

நீ தனியாக வாழ்ந்த போது, உன்னையே நீ புரிந்து கொள்ளவில்லை.
-க.கொ

* * * *

நான் வந்தேன், நீ எழுந்தாய் வானத்தில் ஒளி அரும்பியது.
-க.கொ

* * * *

கெட்டது ஒதுங்க வேண்டியதுதான் அதனிடத்தில் நல்லது தோன்றவேண்டும். -சா

* * * *

நாளைத் தொடங்கும் முன் உன்னைத் தொட்டுணர் வதாக உன்னிடம் வந்துள்ளேன். -எ

* * * *

கடவுளை எவன் கண்டிருக்கிறானோ, அவனுடைய பணியும், அவனுடைய ஓய்வும் இசையினால் நிரம்பியுள்ளது. அன்பின் ஒளியை அவன் எங்கும் தெளிக்கிறான். -க.பா

* * * *

மாந்த வரலாற்றில், இறைவனின் வாழ்விசை மாந்தனின் இசையை, ஒத்திசைவைத் தொடர்பு இருக் கின்றதை கேள்விப்பட பல வாய்ப்புகள் வந்துள்ளன. -ஆ

* * * *

இலையுதிர் கால வானத்திற்கு உள்ளார்வ வளத்தயும் மாந்தத் துடிப்பையும் அளிப்பது நமது பார்வையே. -நினை

* * * *

வானம் பொழிகிறது; என்னுள்ளம் இறைவனைக் காணத் துடிக்கிறது. உலகின் ஓசை நயம் எங்கு எழும்பித் தாழ்கிறதோ, அந்த இடத்தை என் நெஞ்சம் சென்றடைந் துள்ளது. -க.பா

* * * *

# இறைமொழி வேட்கை

என்னை ஏற்றுக் கொள்வாய் இறைவா, சற்று நேரத்திற்காகவாவது.

நீ இல்லாமல் அனாதையாய் கழிந்துவிட்ட அந்த நாள்கள் மறக்கப்படட்டும்.

இந்தச் சிறு கணத்தை உனது ஒளியினால் அரவணைத்து உனது மடியிற் இறுத்திப் பரப்பிடுவாயாக.

என்னைத் தன்பால் கவர்ந்திழுத்த ஆனால் எங்குமே இட்டுச் செல்லாத குரல்களைத் தேடி நான் அலைந்து திரிந்த துண்டு.

இனி அமைதியாயிருந்து பேசாமல் உன் ஆன்மாவில் உறையும் உன் மொழிகளைக் கேட்பேனாகுக. -எ

பாழ்நிலைத்து பறவையாகிற என் நெஞ்சம், உன் கண்களில்தன் விண்ணைக் காண்கிறது.

காலை நேரத்தின் தொட்டில் அவை; விண்மீன்களின் ஆட்சிப் பரப்பும் அவை.

அவற்றின் ஆழத்தில் எனது பாடல்கள் தொலைந்து போயின.

விண்ணின் மேல் அதன் ஆழ்ந்த தன்மையில் நான் உயரே பறக்கட்டும்.

முகில்களைக் கீறிக் கதிரவன் ஒளியில் என் இறக்கை களைப் பரப்பட்டும். -தோ

உயர்ந்தெழும்பும் அலைகளுக்கேற்பத்தான் கடல் இசை பாடுகிறதா? தாழ்ந்து தணியும் அலைகளுடன் அந்த இசை ஒன்று படுவதில்லையா? -க.கொ

* * * *

மலர்கள் மலர்வதற்கான விடுதலையைப் பெற்றதற் காகக் கானகத்தின் வேண்டுதலையைக் கேட்டிடுவாய். -மின்

* * * *

புலி வேட்கையால் தவிப்பவர்களுக்குச் சிறிதளவே போதுமென்றால் கூட எனது மகிழ்ச்சிப் பெருக்கில் என்னிட முள்ள நீரை எல்லாம் நான் வாரி வழங்குகிறேன்," என்று இசையருவி பொழிகிறது. -.ப.ப

* * * *

அமைதியில்லாத என் மனத்தைக் காரணம் காண முடியாத மகிழ்ச்சியால் சூழ்ந்து கொண்டது இலையுதிர் காலம். -நினை

* * * *

படைப்புலக வாழ்க்கையாகிற தன் தொழிலின் தொடக்கத்தில் இன்று மாந்தன் இருக்கிறான், தன்னிடமிருக் கும் நிறைசெல்வத்திலிருந்து அவன் வழங்கவேண்டும்.

-ஆ

* * * *

எல்லையில்லா மகிழ்ச்சிப் பெருக்கில் இந்த

மலர்களை மேலே உயர்த்தி விளையாடிடும் நீரூற்று எங்கே உள்ளது? -ப.ப

*  *  *  *

தனது தனிப்பட்டக் கருத்தை அனைவரும் ஏற்று மகிழ்ச்சியடையச் செய்கிற பாவலனே உண்மைப் பாவலன். -சா

*  *  *  *

இரவே, பகலாகிற வெறுமைக் கிண்ணியை நான் உன்னிடம் கொணர்கிறேன், புதியதொரு காலை விழாவிற்கு அடிகோலும் வகையில் எனது இருட்டினால் அதைத் தூய்மை செய்திடுவாய். -மின்

*  *  *  *

எனது நெஞ்சத்தின் தனிமையில் பனியையும் மழையையும் முகத்திரையாக அணிந்துள்ள கைம் பெண்ணின் பெருமூச்சை உணர்கிறேன். -ப.ப

*  *  *  *

உன் வாழ்வைக் கொண்டு அன்பு விளக்கை ஏற்றிச் செல். -மின்

*  *  *  *

மலையிலுள்ள தேவதாரு மரம் தன் இலைகளின் சல சலப்பின் ஓசையை அமைதி வழிப்பாட்டுப் பாடல்களாக மாற்ற ஈடுபடும் போராட்டங்களின் நிலையை இசைக்கிறது. -மின்

*  *  *  *

நேயத்தைப் போன்று, மூடுபனியும் குன்று களுடைய நெஞ்சங்களை வருடுகிறது; அழகின் சிரிப்பு களை வெளிக் கொணர்கிறது. -ப.ப

* * * *

வாழ்வது ஒரு பாவமானால், அதை மெய்ப்படுத்து வதற்கு அது காத்திருப்பதில்லை. -சா

* * * *

உன் நேயத்தின் பருதி ஒளி என் எண்ணங்களின் முகடுகளை முத்தமிடட்டும். -எ

* * * *

மாந்தனின் நிலையான வாழ்க்கையில் நான் வாழ விரும்புகிறேன். -நினை

* * * *

வாழ்க்கையின் முறையைக் கண்டறிந்து, அதன் வழிச் செல்வதன் மூலம் நாம் சிறப்புற முடியும். -சா

* * * *

வாழ்க்கையின் நிழல் படிந்த ஆழத்தில் சொற்களால் சொல்லமுடியாத நினைவுகளில் தனிமைக் கூடுகள் குடி கொண்டுள்ளன. -மின்

* * * *

பாவலனின் காற்று அவனது குரலைத் தேடிக் கடலின் மீதும், கானகத்தின் மேலேயும் வீசிச் செல்கிறது.-ப.ப

* * * *

தனது இசையை யாழ் எடுத்துச் செல்வதைப்போல், எனது வாழ்க்கையில் உனது காதலை நான் எடுத்துச் செல்வேன். -எ

* * * *

தனது அமைதியான புகழ்பாடும் பாடலைப் புல்லி இதழ்களாகப் பெயரிடப்படாத ஒளியிடையே வாழ்க்கை அனுப்பு கிறது. -மின்

* * * *

கேட்டுக் கொண்டிருக்கும் பைன் மரங்களுக்கு இடையே அமுக்கப்பட்ட கடலின் இரைச்சலைப்போல், என் நண்பனே, என் நெஞ்சத்தில் உன் குரல் அலைந்து அல்லாடுகிறது. -ப.ப

* * * *

பிறப்பையும் இறப்பையும் பற்றி எண்ணிப்பார். அவற்றுக்கிடையே பிரிவொன்றுமில்லை. கைகளில் வலது, இடது இரண்டும் ஒன்று தானே. -க.பா

* * * *

உன் கையை நான் இறுகப் பிடித்துக் கொள்கிறேன், எனது தனிமையில் உனது ஊடுணர்வு துணை நிற்கிறது. -எ

* * * *

தளைகள் யாவற்றையும் அன்பு உதறிடும்போது, வாய்மையின் நிலையை அது அடைகிறது. -க பா

* * * *

எளியவர்களாக நாம் இருக்கும்பொழுது, உலக நடைமுறைகளுக்கு நேரெதிராக நாம் இருக்கும்பொழுது, உலக ஆற்றல் நம்மை அமுக்கவே செய்யும்; நாம் புகழ் பெறும்போது, அனைவருடனும் நேர்நிகராக நிற்கும் பொழுது, அதுவே நமக்குத் துணைபுரியும். -சா

* * * *

வெளியேற வேண்டியதற்குக் கதவைத் திறந்துவை. ஏனெனில் தடைகளைச் சந்திக்க நேரிடும்போது, அது ஒன்றும் பெரிதாகத் தெரிவதில்லை. -மின்

* * * *

வேனிற்கால மலர்களைப்போல வாழ்க்கை அழகாக இருக்கட்டும், இறப்பு இலையுதிர் நாள் இலைகளாக இருக்கட்டும், -ப.ப

முழுமை பெறும் வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன துன்பத்தில் மகிழ்ச்சி என்றுமே விரிவடைவதும் அதில்தான் உள்ளது. -சா

* * * *

எனது உறக்கமாகிற இருட்டில், உனது அன்பு விண்மீன்களாக ஒளிவீசட்டும். -எ

* * * *

முதன் முதல் பூத்த மலர் இன்று காலை எனக்கு அன்பளிப்பாக வந்து சேர்ந்தது. -எ

* * * *

உரிமையுடன் இருக்கிற மாந்தனுடைய மனவுறுதி விடுதலையாகவுள்ள மற்ற மாந்த உறுதிகளுடன் இணக்கம் காண முயல வேண்டும். உள்ளுயிர் வாழ்வின் பொருளே இதில் தான் அடங்கியுள்ளது. -ஆ

* * * *

உனது விரலின் தொடுகை என் வாழ்க்கையின் நரம்புகளைக் கிளர்த்திடச் செய்யட்டும்; வெளிப்படும் இன்னிசை உன்னுடையதாகவும் என்னுடையதாகவும் இருக்கட்டும். -மின்

* * * *

நமது உண்மையான இயல்பை நாம் அடையும் போது, நாம் விடுதலை பெறுகிறோம். -சா

* * * *

எனது வாழ்க்கையில் கனிபோல் வட்ட வடிவமைக்கப் பட்ட உன் உலகம் மகிழ்ச்சியாலும், துயரத்தாலும் பக்குவ மடைந்துள்ளது. மூல நிலத்தின் இருட்டில் விழுந்து மற்றொரு படைப்புக்காகக் காத்திருக்கிறது. -மின்

* * * *

விடுதலையில் நமது மன உறுதி அடங்கியுள்ள

காரணத்தினால் நமது உள்ளத்தின் மகிழ்ச்சியும் விடுதலையில் தான் அடங்கியிருக்கிறது. -ஆ

* * * *

மருட்கையான உலகிலிருந்து ஒரு செய்தியுடன் அது வந்தது. துயரம் பெருமூச்சுடன் படிஞாயிற்றின் மேல் விளிம்பில் அமர்ந்து கொள்கிறது. - க.வே

* * * *

புடவியின் முழுச் சுமையும் கூட எனது தனித் தன்மையை நசுக்கி விட முடியாது. -சா

* * * *

முறைமைகளால் கட்டுப்பட்டபொருள் தன்னுடன் காணும் இணக்கமே அழகு. உரிமையுடன் செயல்படும் மனங்களின் இணக்கமே அன்பு. -ஆ

* * * *

பகலில் தென்படாது ஆனால் உணரப்படுபவனுக்காகவே இந்தத் தேடுதல். -ப.ப

* * * *

மகிழ்ச்சியாக வாழவேண்டுமானால், உலகின் மனப்போக்கின் ஆளுமைக்குத் தனிப்பட்ட நமது தன்மை தலை வணங்கவேண்டும். -சா

* * * *

அமைதியின் குரல் என் சொற்களைத் தொடும் போது, நான் அவனைத் தெரிந்து கொள்கிறேன்; அப்படியே என்னையும் அறிந்து கொள்கிறேன். -மின்

*　*　*　*

நமது இயல்பை அழித்து விடுவதன்று சமயத்தின் நோக்கம்; மாறாக அதை வளர்ப்பதே அதன் நோக்கம். -சா

*　*　*　*

எனது குறைகளை நன்கு தெரிந்திருந்தும் என்னை விரும்புபவர்களுக்கே எனது கடைசி வணக்கங்கள். -மின்

*　*　*　*

மற்றவர்களின் கைகளிலிருந்து நான் ஏதொன் றையும் ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஆனால் இறைவனிட மிருந்து அனைத்தையும் ஏற்று கொள்வேன். -கோ

*　*　*　*

புல்லின் துணைகொண்டு யாவற்றையும் உவந்தேற்க இந்த மாநிலம் தன்னை அணியமாகக் கொள்கிறது. -ப.ப

*　*　*　*

மனிதனிடம் நேய உணர்வு இருக்கும்போது, எவ்வாறு பழுத்த பழத்தை மற்றவர்களுக்கு அளிக்கும் போது மரம் மகிழ்ச்சியுறுகிறதோ, அதே போன்று கொடுப்பது என்பது மனிதனுக்கு மகிழ்ச்சியளிக்கும் செயலாகிறது. -சா

*　*　*　*

நேயத்தின் பரிசு கொடுத்து விடக் கூடிய ஒன்றன்று. ஏற்றுக் கொள்ளப்படும் வரை அது காத்துக் கிடக்க வேண்டும். -மின்

* * * *

செயல்படாமலிருப்பதற்கான உரிமையன்று நமது உண்மையான உரிமை செயல்படுவதற்கான உரிமையை அது குறிப்பிடுகிறது. -சா

* * * *

நேயத்தில்தான் நான் வாழ்ந்துள்ளேன், வெறும் காலத்திலன்று. -மின்

* * * *

வாய்மையற்றவை யாவற்றினின்றும் என்னைக் காப்பாற்றிவிடு. வாய்மை மட்டுமே என் வாழ்க்கையில் தன் ஒளியைச் சிந்தட்டும். -கோ

* * * *

என் வீட்டினெதிரே விரிந்து பரந்துள்ள அரச வீதி என் நெஞ்சத்தில் ஓர் உள்ளார்வத்தைத் தூண்டுகிறது. -எ

* * * *

முழுமையாக உன்னை இறைவனிடம் ஒப்படைத்து விடு. அவனை உனது ஒரே துணையாக வைத்துக் கொள். -கோ

* * * *

கடுமையான வரைமுறைகளுக்கு உட்பட்டே அழகான பாடல் உருப் பெறுகிறது. ஆயினும் அவை யாவற்றையும் மீறவே செய்கின்றது. -சா

* * * *

என்னைப் பொறுத்தவரை, இறைவன் ஒருவரே வழி பாட்டுக்குரியவர்; வேறு எவருமில்லை. -க.பா

* * * *

என் உள்ளுயிரின் துயரமே மணமகளின் முகத்திரை இரவில் அகற்றப்படுவதற்காக அது காத்திருக்கிறது. -ப.ப

* * * *

காலையில் கண்விழிப்பது போன்றும், இலைகளி லிருந்து பனித்துளி வடிவதைப் போன்றும், எனது பாடல் எளிமையாக இருக்கட்டும். -எ

* * * *

நல்லவற்றைத் தேர்ந்தெடுக்க உன் வலிமை அத்த னையையும் ஒன்று திரட்டி மகிழ்ச்சியுடன் முன்னேறு.-கோ

* * * *

பிறப்பு, வாழ்வு, இறப்பு ஆகிய நீரோடையின் மேல் மிதந்து கொண்டும் மறந்து கொண்டும் இழுக்கப்பட்டு வருபவையுமான மற்ற காலகட்டங்களை எண்ணிப் பார்க்கிறேன்; மண்ணிலிருந்து மறைந்து போகும் உரிமையை உணர்ந்திருக்கிறேன். -ப.ப

* * * *

உலகத்தின் உள்ளமான கடைப் பகுதியில் இறப்பற்று, இளமை நிமிர்ந்து நிற்கிறது. இறப்பும், வீழ்ச்சியும் அதன் (இளமை) முகத்தில் தற்காலிகமான நிழல்களைப் பரப்பிவிட்டு மேலே செல்கின்றன. -சா

* * * *

மலரைப் போன்று, தன் செழுமையிலிருந்து ஒன்றிரண்டு இதழ்களை உதிர்த்து விட்டுத் தனது இழப்புகளைப் பெரிதாக எண்ணாமலிருக்கும் மலரைப் போன்று இளமைப் பகுதியில் நான் இருந்து வந்தேன். -க.கெப

* * * *

நமது உலகின் கிழிந்து போன அதே பழைய நாளே மீண்டும் மீண்டும் ஒவ்வொரு காலைப் பொழுதிலும் பிறப்பெடுக்கிறது. -சா

* * * *

கோடை விழா புதிது புதிதாக அரும்பும் மலர்களுக்கு மட்டும் தானா; வாடி வதங்கிக் களையிழந்திருக்கும் மலர்களுக்கு இல்லையா? -க.கொ

வானில் ஏதோவொரு மூலையில் மிக அடக்கமாக நின்றிருக்கிறது முகில். காலைப் பொழுது ஒளி வழங்கி மணிமகுடம் சூட்டுகிறது. -ப.ப

* * * *

ஆளுமையின் சிறப்பை நாம் அடையவேண்டு

மென்றால் அண்டத்தின் அடி ஆழத்தில் நாம் வேர் பிடிக்க வேண்டும். -சா

* * * *

இறைவனின் அருகில் அமர்ந்திருக்கும் சீரும் சிறப்பும் பெற்ற பேறு பெற்றவர் வெகு சிலரே. ஆனால் என் போன்ற அறிவிலிகளையும் தன் கைகளினால் வாரி யெடுத்து அரவணைத்துத் தன் அடியார்களாகவே வைத் திருக்கிறான் அவன். -க.கொ

உன்னிடம் வைத்துக் கொள்வதற்காக மலர் பறிப்பதற்குக் காத்திராதே. மேலே நடந்து செல். ஏனெனில் நீ செல்லும் வழியெல்லாம் மலர்கள் மேலும் மேலும் சிறகு விரித்துச் செல்லும். -ப.ப

* * * *

பொருள் புரியாதிருந்த காலத்தில், உனது சைகையின் உட்பொருளைத் தினையளவு தும்பும் தூசியும் கூட மறைத்து விட்டிருந்தது.

இன்று நான் நுண்ணறிவினன் ஆகிவிட்டேன். ஆகவே முன்னர் மறைக்கப்பட்டிருந்ததெல்லாம் எனக்குப் புலப்படுகிறது. -க.கொ

* * * *

தூரத்திலிருக்கும் வேனிற்கால இசை தனது முந்தைய கூட்டைத் தேடிக் கொண்டு இலையுதிர் காலத்தைச் சுற்றிச் சிறகடித்துப் பறக்கிறது. -ப.ப

* * * *

துயரத்தின் இருண்மைக்குப்பின், இன்று அதி காலைப் பொழுது விடிகிறது. -கோ

* * * *

இழப்பின் மூலம் நாம் நமது என்பதைப் பெறுகிறோம். நம்மை நாம் அளிப்பதினாலேயே உயர்கிறோம். -சா

* * * *

என் நெஞ்சமே, உன் பயணத்தைத் தொடர்வாய்; இருக்க வேண்டியவை நம்முடனேயே இருக்கட்டும்.

ஏனெனில், காலை வானில் உனது பெயர் பொறிக்கப்பட்டு விட்டது. எவருக்கும் காத்திராதே. -க.கொ

ஆன்மிக உலகை உருவாக்குவதில், நாம் இறைவனின் பங்குதாரர்கள். - ஆ

* * * *

எல்லை, எல்லைக்கப்பால், சட்டம், விடுதலை யாவற்றையும் தன்னுள்ளில் இணைத்து வைத்துள்ளது அழகு. -சா

* * * *

இரவையும் பனித்துளியையும் நெருங்குவதுதான் அரும்பின் ஆசை. ஆனால் முழுமையாக மலர்ந்துள்ள மலர் அடைய விரும்புவது பகலின் விடுதலையே.

என் நெஞ்சமே, உறையிலிருந்து வெளி வந்துவிடு, மேலே முன்னேறிச் செல்! -க.கொ

* * * *

பழைய மரத்தைச் சுற்றிப் பாசி படர்வதைப் போல் பெயர் தெரியாத நாள்களின் தொடுகை என் நெஞ்சத்துடன் ஒட்டி உறவாடுகிறது. - ப.ப

* * * *

நமது வாழ்வு கரைகளோடு மோதும் ஆறு போன்றது. கரைகளுக்கெதிராகப் போரிடும் நோக்கம்தான் ஒரு கட்டுக்குள் சிறைப்பட்டுள்ளோம் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அன்று; கடலைச் சேர்ந்தடைவதற்கான பாதை என்றுமே திறந்திருக்கிறது என்பதை ஒவ்வொரு கணமும் உணர்ந்தறிவதற்காகவே. -சா

* * * *

என்றும் நிலைத்திருக்கும் இளமையைத் தேடிச் செல்கிறேன் நான் - என் வாழ்க்கையுடன் ஒத்து வராத, என் சிரிப்பைப் போன்று அத்தனை எளிதாக இல்லாத ஒவ்வொன்றையும் தூக்கியெறிந்து விடுகிறேன். -க.கொ

* * * *

நமது ஆன்மிகச் செயற்பாட்டில் பெற்ற பயன், பகிர்ந்தளித்த பக்குவம் எல்லாமே ஒன்றுதான். -ஆ

* * * *

தான் என்கிற நமது நிலை அடக்கத்திலும் அன்பிலும் தலை வணங்கி நிற்க வேண்டும். பெரியதும் சிறியதும் இடத்தில் நிலை பெற வேண்டும். -சா

* * * *

விண்ணின் ஆசை அத்தனையையும் உள்ளடக்கியது எனது சிறகுகள். -க.கொ

* * * *

நாம் இணைந்த அதிகாலை விடியல் நம் நெஞ்சங்களைத் தாண்டி அமைதியில் வழிந்தோடுகிறது. -ஈ

* * * *

என் உடன் பயணியே, நான் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் உன்னை ஒவ்வொரு கணமும் கூடுவதற்கே. -க.கொ

* * * *

தன் தாயின் பல்வேறு செயல்கள் பற்றியெல்லாம் குழந்தைக்குத் தெரியாது. அதற்குத் தெரிந்த தெல்லாம் அவள் தன் தாய் என்பது ஒன்றே. -ஆ

* * * *

உனது உள்ளத்தில், உன் அன்புக்குரியள் என்ற இடம் எனக்குண்டு; உன் உலகத்திலோ, உனது பட்டத்தரசி என்ற நிலைப்பாடு உண்டு. -ஈ

* * * *

வெளிப் பார்வைக்கு, இயற்கை அமைதியற்றதாகவும், எப்பொழுதும் துடிப்புள்ளதாகவும் தோற்றமளிக்கிறது. உள்முக நோக்கில் அது அமைதியாகவே இருக்கிறது. -ஈ

* * * *

# அன்பிற்குக் காத்திருத்தல்

மாலை நேரம் என்னை அழைக்கிறது. கொந் தளிக்கும் கடலில் இருளைக் கிழித்துக் கொண்டு செல்லும் கடைசிப் படகில் அமர்ந்திருக்கிற பயணிகளை மகிழ்ச்சியுடன் பின் தொடர்ந்து செல்வேன்.

அவர்களில் சிலர் வீடு நோக்கி திரும்புகிறவர் கள்; வேறு சிலர் நெடுந் தூரத்தில் தென்படும் கரையை நோக்கிச் செல்பவர்கள். ஆயினும் அனைவருமே கடலில் செல்லத் துணிந்து விட்டவர்கள்.

வீட்டை விட்டுக் கிளம்பிப், படகையும் தவற விட்ட நானோ தனிமையில் கரையோரம் அமர்ந்திருக்கிறேன்.

தோல்விகளை வாரியெடுத்துக் கொண்டு, பகல் விடியும் பொழுது பலனளிப்பதற்காக இருளில் கண்ணீரும் கம்பலையுமாக இருளில் ஊன்றுவதற்காகச் செல்லும் அந்த அன்பிற்காகக் காத்திருக்கிறேன்.

* * * *

எவனொருவன் தன் வாயிற் கதவை திறந்து வைத்து முன்னடி எடுத்து வைக்கிறானோ, அவன் வாழ்த்துகளைப் பெறுகிறான். -க.கொ

* * * *

மயக்கமும் துயரமும் ஆட்சி செலுத்தாத ஒரு நிலப் பகுதியுள்ளது. இறப்பின் பேரச்சம் அங்கு அறவே கிடையாது. -க.பா

* * * *

நற்பண்பும், நேயமும் எல்லையற்றவை. எல்லையற்ற பெரும் பரப்பில்தான் விடுதலையைப் பற்றிய முழு அறிவு கிட்டுகிறது. -சா

* * * *

இரவின் மடியில் கமுக்கமான ஒரு மகிழ்ச்சி உள்ளது. என் நெஞ்சத்தில் அதை நிரப்பிக் கொண்டு, நாளெல்லாம் அதைச் சுமந்து செல்லவிடு. -எ

* * * *

இறைவனைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. நீங்கள் எனது தந்தை என்பதை மட்டும் நானறிவேன். -ஆ

* * * *

நண்பனே, வேனிற் காலத்தின் முதல் தென்றலாக நீ என்னிடம் வந்துள்ளாய். -ஈ

* * * *

உலகத்தில் சிறந்தவற்றில் என் பங்கு உன் மூலமாகவே எனக்குக் கிடைக்கப் போகிறதென்பதை நான் அறிவேன். -க.கொ

* * * *

அடிவானம் அத்தனையையும் திறந்து வைக்கிறது ஓர் உண்மை. எல்லையற்ற பரப்புக்கு அது நம்மை வழிநடத்திச் செல்கிறது. -சா

* * * *

தன்னில் ஒரு பகுதியை காதலன் காதலியிடம் தேடுகிறான். -சா

* * * *

தனித்து நிற்கும் பனிப் பகுதியிலிருந்து வெளியேறும் பறவைகளைப்போல், உனது பாடல்கள் இன்பமான சித்திரை மாதத்தில் தங்களுடைய கூடுகளை என் நெஞ்சத்தில் கட்டிடத் துடிக்கின்றன. மகிழ்ச்சியான அந்த வருங்காலத்திற்காக நான் காத்துதிருக்கிறேன். -க.கொ

* * * *

ஒளியிழந்து கொண்டிருக்கும் பகல் பொழுதை இரவு முத்தமிட்டு அதன் காதுகளில் கிசுகிசுக்கிறது : "நான்தான் சாக்காடு உனது தாய், உனக்கு புதுப்பிறவி அளிக்க வேண்டியவன் நான்!" -ப.ப

* * * *

படைக்கிறவன் என்கிற முறையில், மனிதன் எப்பொழுதும் வகை வகையான உருவங்களை உருவாக்கு கிறான். அவனது துள்ளித் ததும்பும் மகிழ்ச்சியிலிருந்து அவை வெளிப்படுகின்றன. -சா

* * * *

இறைவனே, என் தந்தையே, என்னிடமிருந்து பாவ மூட்டைகளை அகற்றிவிடு. -ஆ

* * * *

நமது நெஞ்சத்தில் அன்பு சுரக்கும்போது, சிறிய தொரு பரிசு கூட நமக்கு முழு நிறைவளிக்கிறது. -சா

* * * *

எனக்கு வழிகாட்டியாக இருப்பதற்காகச் சாலை ஓரத்தில் காத்திருக்கும் உன்னை எங்கே தவறவிட்டு விடுவேனோ என்ற அச்சம் என்னை மற்றவர்களால் நடத்திச் செல்லப்படுவதிலிருந்து தடுத்து நிறுத்துகிறது. -க.கொ

* * * *

சட்டதிட்டங்களிலிருந்து அன்பு வழிக்குக் கட்டுப் பாடிலிருந்து விடுதலைக்கு, அறநெறியிலிருந்து ஆன்மிக வழியில் மாந்த உள்ளுயிர் உலவிக் கொண்டிருக்கிறது. --சா

* * * *

உணரக் கூடியதாக, தனக்குரியதாக, மாந்தத் தன்மை பொருந்தியதாக ஏதாவதொன்று எங்கெங்கெல்லாம் தென்படுகிறதோ, அங்கெங்கெல்லாம் பெண்ணின் உலகம் உள்ளது. -ஆ

* * * *

நம்மைச் சுற்றியிருக்கும் ஒவ்வொன்றிற்கும் ஒரே பொருள் அன்பு தான். -சா

* * * *

சம்மட்டி அடியன்று, தண்ணீரின் அலைப்பில்

பிறக்கும் நாட்டியம்தான் கூழாங்கற்களுக்கு முழுமை அளிக்கிறது. -ப.ப

* * * *

இரவு கலைந்திடும், இருட்டு மறைந்திடும். நம்பிக்கையுடனிரு; மனவுறுதியுடனிரு. -சா

* * * *

துயர மொழிகளையும், மகிழ்ச்சி வாக்குகளையும் கொண்டு வருபவன் என் தலைவனே. இவற்றிடையே தோன்றும் பிணக்குகளையும் அவனே தீர்த்து வைக்கிறான். -க.பா

* * * *

தனக்கென்று ஒவ்வொன்றையும் பெற்றுக் கொள்வதில் இல்லை மாந்தனின் நிலையான மகிழ்ச்சி. தன்னைக் காட்டிலும் மேம்பட்டவனிடம் தன்னையே அளித்து விடுதலில்தான் அந்த மகிழ்ச்சி கிடைக்கிறது. -சா

* * * *

முழு உண்மையையும் வெளியிட நீ தயங்குகிற பொழுது, வெளிப்படையாகயிருப்பது எளிதுதான். -ப.ப

* * * *

உறக்கத்திலிருந்து விழித்தெழு கலக்கத்திலிருந்து விடுபட்டுப் புதுவிடியலின் ஒளியைப் பாடலுடன் அடைந்திடு. -சா

* * * *

ஊதாரித்தனமான வெளிப்பாடாக உனது அன்பை ஆக்கிவிடாதே. உண்மை இருக்கட்டும் அதில். ஏனெனில் உண்மை எளிமையாக இருக்க முடியும். -ஈ

* * * *

மழைக்கால இந்த மாலைப் பொழுதில், காற்று அமைதியற்று இருக்கிறது.

அசைந்தாடும் மரக்கிளைகளைக் கவனிக்கிறேன்; அனைத்துப் பொருள்களின் உயர்வையும் எண்ணிப் பார்க்கிறேன். -ப.ப

எல்லாவற்றிற்கும் மேல் நெஞ்சத்தில் நான் எண்ணி மகிழ்வதொன்று உண்டு. இவ்வுலகில் எல்லையற்ற காலம் என்னை வாழவைக்கப் போகும் அன்பைப் பற்றிய எண்ணம் தான் அது. -க.பா

* * * *

உலகின் வளங்கள் யாவற்றையும் பயன்படுத்தி விட வேண்டும் என்பதிலேயே நம் எண்ணம் முழுவதும் ஒன்றி விடுகிற நிலையில், உண்மையான மதிப்பை அது இழந்து விடுகிறது. -சா

* * * *

மாந்தனின் அளவற்ற மதிப்பை நமது ஆன்மிக ஆசான்கள் அனைவரும் அழுத்தமாகவே அறிவித்திருக்கி றார்கள். -ஆ

* * * *

நாம் அறிந்து கொள்ள வேண்டியவற்றிலிருந்து நம்மைத் தனித்து நிறுத்துகிறது அறிவு. ஒருமித்து வாழ்வதிலிருந்து தனது குறிக்கோளை எட்டுகிறது அன்பு. -சா

* * * *

குடும்பம் சார்ந்த நிலை, வாழ்க்கையின் இதர அலுவல்கள் என்று எந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் சரி உலகம் என்பது பெண்களின் உலகம் மட்டும்தான். -ஆ

* * * *

மாலைப் பொழுதின் நிழல்கள் அழுத்தமாகவும், ஆழமாகவும் விழுகின்றன.

மேற்கு முகத்திற்கு உன் சாரளத்தைத் திறந்து அன்புக் கடலின் ஆழத்தில் ஆழ்ந்து போ. -க.பா

* * * *

கடல்ச் சுற்றி சுழல்வது இங்கே. நாம் அடைய வேண்டிய மறு கரையும் இங்கே தான் - ஆம், நின்று நிலைத்திருக்கும் நிகழ்காலம், தூரத்தில் உள்ள எதுவுமில்லை - உள்ளது. -சா

* * * *

மலரிதழின் முனையில் படிந்திருக்கும் பனித்துளி போல், உன் கண் இமைகளில் மகிழ்ச்சி தரும் நாணம் படிந்துள்ளது. -ப.

* * * *

உருவமில்லாத மகிழ்ச்சிப் படைப்பில் ஈடுபட வேண்டும்; உருவத்தை உருவாக்க வேண்டும். -சா

எண்ணற்ற விண்மீன்களில் ஏதோவொன்று முன்பின் அறியா இருளினூடே வாழ்க்கையில் வழிநடத்திச் செல்ல உள்ளது என நான் எண்ணுகிறேன். -ப.ப

* * * *

அடைய வேண்டுமென்ற எண்ணமொன்றே அடைந்து விட்ட பொருள்களைவிட நம்மை உயர்த்துகிறது என்பதை அறிந்து கொள்கிறோம். -சா

* * * *

பெண்ணே, உன் மென்மையான விரல்களினால் என் உடமைகளைத் தொட்டிட்டாய். இசை போன்று உன் கட்டளை பிறந்தது. -ப.ப

* * * *

ஆழமான நமது அன்பில், அடைதலும், அடையாமலிருத்தலும் சமச் சீரிலேயே இழையோடிச் செல்கின்றன. -சா

* * * *

நீ என் நெஞ்சத்தைக் கவர்ந்துவிட்டாய். என் நெஞ்சமும் தனது தலைசிறந்த செல்வத்தை உனக்கு வாரி வழங்க அணிமாக உள்ளது. -ஈ

* * * *

தன் வாழ்வு எப்பொழுது முழுமை பெறுகிறது என்பது பற்றி மனிதன் உணர வேண்டும். எல்லையற்ற பரப்பில் தன் நிலைமை உணர வேண்டும். -சா

* * * *

பொருளற்ற சொற்களின் தூசி உன்னிடம் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

அமைதியில் உன் உள்ளுயிரைத் தூய்மைப் படுத்திவிடு. -ப.ப

* * * *

நடப்பவை யாவற்றையும் உண்மையாக்குவது நிலைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் மெய்மை ஒன்றே. -சா

* * * *

மெல்லிதாக ஒளி சிந்தும் இலைகளுடன் என் எண்ணங்களும் மங்கிய ஒளி வீசுகின்றன; இந்த ஒளி படுவதால் என் நெஞ்சம் இசை பாடுகிறது; வான வெளியின் நீல நிறத்தினூடே காலத்தின் இருண்மைக்குள் அனைத்துப் பொருள்களுடன் மிதந்து கொண்டிருப்பதில் என் வாழ்க்கை மகிழ்ச்சியடைகிறது. -ப.ப

* * * *

அழியாவரம் பெற்ற தான், தனது ஆன்மாவைக் கண்டறிய முன்பின் தெரியாத இலக்கை நோக்கி மாந்தன் மேற் கொள்ளும் பயணத்தின் வரலாறுதான் மாந்தனின் வரலாறு. -சா

* * * *

நமது முழுமையில் நாம் மகிழ்ச்சியடையும் போது, பயன்களை மகிழ்ச்சியுடன் விட்டுக் கொடுப்பதும் இயல்பு தான். -ப.ப

* * * *

இரவு இருமையாலே சூழப்பட்டிருக்கிறது, எனது அமைதி போல் உனது உறக்கமும் ஆழமானது. ஓ, காதலின் நோக்காடே, விழித்தெழு, காரணம் வாயிலைத் திறந்துவிட எனக்குத் தெரியவில்லை. -க.கொ

* * * *

மன உறுதிக்குச் சிறந்த பயன்தான் கிடைக்கிறது. ஆனால் அது கிட்டுவது கட்டுப்பாடு நிறைந்த உலகத்தில்லை, விடுதலை தவழ்ந்திடும் உலகத்தில்தான். -ஆ

* * * *

உன் முகத்தைக் கண்டேன் என்று உணர்ந்தேன்; இருளில் எனது படகைச் செலுத்தினேன். --குறு

* * * *

காதலே துன்பமாகிற எரியும் விளக்கை நீ கையிலெடுத்து வரும்பொழுது நான் உனது முகத்தைக் காண முடிகிறது. மகிழ்ச்சியின் உருவமே நீதான் என்று உணர்கிறேன். -ப.ப

* * * *

விண்ணில் பறவைக் கூட்டங்கள்போல் என் மனத்தில் எண்ணங்கள் பறந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் சிறகடிப்பு ஓசையை நான் கேட்கிறேன். -ப.ப

* * * *

வழிப்போக்கனே, துணைப் பயணியின் வாழ்த்துகள் உனக்கு இதோ. -குறு

* * * *

சேர்த்துக் கொண்டே போவது என்பது கைகூடுதல் அன்று என்பதை மாந்தன் தெரிந்து கொள்ள வேண்டும். உள்ளொளிதான் அவனை உலகிற்கு அடையாளம் காட்டுகிறதே அல்லாமல் வெளித் தோற்றங்கள் அல்ல. -சா

* * * *

தனது நோவினால் ஏன் ஆன்மாவை முத்தமிடுகிறது உலகம். அதற்கு மாற்றாக எனது பாடல்களைக் கேட்கிறது அது. -ப.ப

* * * *

வையகத் தலைவன் தனது அரியணையின் நிழலைப் பரப்பாமல் விட்டு வைத்திருப்பது மாந்தனின் தான் என்ற நிலையைத்தான். அதற்கு உரிமை அளித்திருக்கிறான் அவன். -சா

* * * *

நெஞ்சமாகிய என் பாத்திரத்தை இந்த அமைதியான நேரத்தில் முக்கியிருக்கிறேன்; அன்பினால் அது தன்னை நிறைத்துக் கொண்டுள்ளது.
-ப.ப

*    *    *    *

தொலைவிலுள்ள குன்றுகளிடையே தங்களை மறைத்துக் கொண்டு ஆற்றின் நீரை நிரப்புகின்றன முகில்கள்.
-ப.ப

*    *    *    *

விளக்குகளைத் தனித்திருக்கும் இரவின் விளக்கு களை, என் நெஞ்சமே, அணைத்துவிடு.

உனது கதவுகளைத் திறந்து வைக்க ஆணை வருகிறது. ஏனெனில் பகலின் வெளிச்சம் எங்கேயோ இருக்கிறது.
-எ

*    *    *    *

அளவிட இயலாத உன் தனிமையினூடே உன்னை அழைத்திடும் காதலனிடம் உன் நெஞ்சத்தைத் தொலைத்து விட்டாயா?
-நா

*    *    *    *

விழித்தெழு, அன்பே, விழித்தெழு. என் வெறும் கிண்ணியை நிறைத்திடு; உன் இசையின் மூச்சுக் காற்றினால் இரவைக் கலக்கிடு.
-க.கொ

*    *    *    *

பல்வேறு உருவங்களில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் இறைவனே மகிழ்ச்சியின் எதிரொளி.

உலகம் உருவானது அவனுடைய இச்சையினால் தான்.
-ஆ

* * * *

இடர்பாடுகளிலிருந்து காப்பாற்றப் படுவதிலில்லை மனிதனின் விடுதலை. தனது நன்மைக்காக தான் எடுப்பதற்கான முயற்சியில்தான் உள்ளது அது. -சா

* * * *

என் வழியே நான் நடந்து செல்லும் பாதையில் என் தண்ணீர்ச் சாடியிலிருந்து நீரைத் தெளிக்கிறேன்.

என் வீட்டிற்கு நான் எடுத்துச் செல்லும் நீர் மிகச் சிறிதே.
-ப.ப

* * * *

நிகரற்றதில் முழுமை பெறுவதைத் தேடி அலைகிறது பொதுத்தன்மை.
-சா

* * * *

உனது வயல்களில் பூத்த மலர்கள்தான் உனது புன்னகை. உனக்கு உரிமையான மலைகளில் வளரும் பைன் மரங்களின் சலசலப்பே உனது பேச்சு. ஆனால் உனது நெஞ்சமோ நாம் யாவரும் தெரிந்து வைத்துள்ள பெண்ணே.
-ப.ப

* * * *

விண்ணின் முகத்தை இவ் உலகிற்குக் கொண்டு வந்த சிறப்புப் பெற்ற கள்ளங்கபடமற்ற இந்த வெள்ளை உள்ளத்தை, மாசு மறுவற்ற இந்தச் சின்னஞ்சிறு உயிரை, வாழ்த்துவாயாக! -வ.பி

* * * *

நம்மிடம் புதைந்துள்ள எல்லையற்றதாகிற மகிழ்ச்சியே நமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. -சா

* * * *

ஒரு புன்னகையுடன் என்னை வரவேற்கிறது செங்கதிர் வெளிச்சம்.

அதன் சேர்ந்த உடன் பிறந்தாளான மழையோ என் நெஞ்சத்தினிடம் பேசுகிறது. -ப.ப

* * * *

அவனைக் கூடுவேன் என்ற நம்பிக்கையில் வாழ்கிறேன். -க.பா

* * * *

பகலில் பூத்த எனது மலர் மறக்கப்படும் தன் எழில் இதழ்களை உதிர்க்கிறது.

மாலை நேரத்தில் அது நினைவாகிற பொன் மயமான கனியாகப் பழுக்கிறது. -ப.ப

* * * *

இரவின் மடியில் ஒரு கமுக்கமான மகிழ்ச்சி கிடைக்கிறது. அந்த மகிழ்ச்சியால் என் நெஞ்சை நிரப்பிக் கொள்கிறேன்; நான் முழுவதும் அதை எடுத்துச் செல்கிறேன்.

-எ

* * * *

நினைவுகளின் அடியோசைகளை அமைதியுடன் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருக்கும் இரவின் சாலையைப் போன்றவன் நான். -ப.ப

* * * *

ஆழங்காண முடியாத கடலின் நெஞ்சத்திலிருந்து வெளிப்படுகிறது பொன்மயமான குரலொன்று. கண்ணீர் புகை மூட்டத்தினூடே உன் முகம் காண முயல்கிறேன் நான்.

-எ

* * * *

என் தலைவனின் அரசவையில் உண்மையின் ஒளி மட்டுமே சுடர் வீசுகிறது. -க.பா

* * * *

என்னைப் பொறுத்தவரை, மாலை வானம் ஒரு சாளரம், ஏற்றிய விளக்கு, அதன் பின்னே ஒரு காத்திருப்பு. -ப.ப

* * * *

# விடுதலை செய்

எனது காதலியே! உனது, இனிமைப் பிணிப்பு களினின்று என்னை செய்வாயாக! முத்தங்களைத் திணறும்படி பொழிகின்றவெறி ஒழிய வேண்டும்!

இந்தக் கடுமையான திணறும் காதல் மணம் என் நெஞ்சத்தையே அடைக்கிறதே!

கதவைத் திறந்து, காலைக்கதிரவனின் ஒளி வெள்ளம் உள்ளே வர இடம் கொடு.

காதல்வெறியிலே உன்னைத்தழுவி நிற்கும் நான் உன்னுள்ளே மூழ்கிக்கிடக்கிறேனே!

உனது காந்தத் தழுவலினின்று என்னை விடுதலை செய்; மீண்டும் எனக்கு ஆண்மை தந்து, நான் உனக்கு முழு உரிமையான நெஞ்சத்தை வழங்கும்படி துணை செய்வாயாக!.

-கா.ப.

உனது வாக்கு இரவின் முகத்திரையைக் கிழித்து விட்டுள்ளது; காலைப் பொழுதின் அரும்புகள் திறந்திருக்கின்றன. -எ

* * * *

ஓ, இரவே, என்னை உனது பாவலனாக ஏற்றுக் கொள்.

உனது நிழலின் கீழ்க் காலம் காலமாகப் பேச்சு மூச்சற்றவர்களாகச் சிலர் இருக்கிறார்கள். அவர்களுடைய பாடல்களை நான் பாட விடு. -க.கொ

* * * *

நல்லவற்றைச் செய்து வருவதிலேயே ஈடுபட்டிருக்கும் அவனுக்கு நல்லவனாகயிருப்பதற்கு நேரம் இருப்பதில்லை. -ப.ப

* * * *

என்றாவது ஒரு நாள் என்னுள்ளே இடம் பெற்றுள்ள உயிரை என்னுள்ளே ஒளிந்திருக்கிற அந்த மகிழ்ச்சியை எதிர்கொள்ளவே செய்வேன். -க.கொ

* * * *

மழையற்றிருக்கிற இலையுதிர் கால வெண்முகில் நான். நெற்கதிர் முற்றியிருக்கிற வயலில் என் முழுமையைக் காண்பாய். -ப.ப

இறப்பின் கூறு ஒன்று; வாழ்க்கையின் கூறுகள் பல; இறைவன் இறந்தால் மதம் ஒன்றாகவே மலர்ந்துவிடும்.-ப.ப

* * * *

காற்று தண்ணீர் இவற்றின் ஓசையினிடையே சிக்கியிருக்கிற அலைகளின் மேல் பாவலனின் மனம் மிதக்கிறது கூத்தாடுகிறது. -க.கொ

* * * *

ஓர் எல்லைக்குள் அடங்குகிற அறிவை அதற்காக மட்டுமே தேடியலைபவன் உண்மையைக் காண முடிவதில்லை. -ஆ

* * * *

காலைப் பறவை பாடுகிறது.

பொழுது விடிவதற்கு முன்னமேயே பொழுது புலரப் போகிறது என்பதை எங்கிருந்து அறிந்து கொண்டது; அதே போல் இரவாகிற பறவைவிலங்கு கரும் சுருள்களில் விண்ணைத் தன் பிடியில் வைத்திருப்பதையும் எவ்வாறு அறிந்து கொள்கிறது. -க.கொ

* * * *

நல்லவற்றின் மூலமே நமது உள்ளுயிர் வளர்க்கப் படுகிறது. அதுவே அவற்றின் பிணைப்பிற்கு எடுத்துக் காட்டு. -சா

* * * *

கிழக்கு முகத்தின் தூதுவனாக வந்துள்ள, காலைப் பறவையே, விண்ணின் காரிருளினூடேயும், இலைகளி னூடேயும், ஊடுருவி எவ்வாறு அவன் உன் கனவில் புகுந்துள்ளான் என்பதைக் கூறிடுவாய். -க.கொ

*　　*　　*　　*

எல்லையற்றதும், எல்லைக்கு உட்பட்டதுமாகிய இரண்டும் ஒன்றுதான். பாடலும், பாடகனும் ஒன்றுதானே. -ஆ

*　　*　　*　　*

பேருலகின் உள்ளத்தில் நமக்கு ஓர் இடம் உண்டு என்று விளக்குவதே நமது அரும் பணி. - ஆ

*　　*　　*　　*

வெளிச்சத்தின் முதல் வாழ்த்தினைப் பெற, உன் நெற்றியைத் தாழ்த்திக் காத்திரு. காலைப் பறவையுடன் இணைந்து மகிழ்ச்சியுடன் பாடு. -க.கொ

*　　*　　*　　*

எனது உலகத்தில் தவறாகக் காலடியெடுத்து வைத்து, அதையே எனக்கு எதிராகத் திருப்பி விடாதிருப்பேனாக. -ப.ப

*　　*　　*　　*

இறைவா, உலகின் செல்வமனைத்தையும் தூசாக மதிக்கிற செல்வத்தின் சின்னஞ் சிறிய பகுதியை எனக்களித்திடு. -க.கொ

* * * *

வெளிச்சத்தை நோக்கி, இருட்டு பயணிக்கிறது.
-ப.ப

* * * *

எதுவுமே செய்ய வேண்டியது இல்லாமலிருக்கும் பொழுது நான் ஒன்றுமே செய்யாமலிருப்பது, தண்ணீர் அமைதியுடன் இருக்கும் பொழுது, மாலை நேரத்தில் கடற்கரை எவ்வாறிருக்குமோ அது போன்று அமைதியின் ஆழத்தில் தாக்கம் யாதொன்று மின்றி இருக்கிறது. -ப.ப

* * * *

என் நெஞ்சமே, உன் தலைவனின் புன்முறுவலை மீறித் தனித்திருந்து, அவனிடமிருந்து விலகி எவ்வாறு அலைந்து திரிய முடியும். -க.பா

* * * *

அறிய முடியாமையே நிலையான விடுதலை.-க.கொ

* * * *

பல யுகங்களிலிருந்து புறக்கணிக்கப்பட்ட, சிதறிக் கிடக்கும் பரிதாபகரமான சிந்தனைகள், என் இதயக்குகையில் ரீங்காரமிட்டு, என்னைப்பாடவே தூண்டுகின்றன.

* * * *

எனது துயரமான எண்ணங்கள் தங்களது பெயர் களைக் கேட்டுக் கேட்டு என்னைத் துன்புறுத்துகின்றன.

-ப.ப

* * * *

திருக்கோயிலின் உள்கதவைத் திறந்திடு, விளக்கினை ஏற்றிடு, அங்கு நம் இறைவனின் முன்னி லையில் அமைதியுடன் ஒன்று கூடுவோம். -க.கொ

* * * *

வாழ்வு என்பது முடிவில்லாதது என்பதை அறிந்து கொள்ள மீண்டும் மீண்டும் நான் இறப்பேன். -ப.ப

* * * *

தேய்ந்து வரும் இரவு என் வாயில்முன் தயங்கி நிற்கிறது. பாடல்களைப் பாடி என்னிடம் அவள் விடை பெறட்டும்.

-க.கொ

* * * *

நாள் முடிவில் உன் முன் நான் நிற்கும் போது, நீ என் உடம்பிலுள்ள தழும்புகளைக் காணலாம். நான் காயப் பட்டிருக்கிறேன் என்பதையும், அவை குணமாகி வருகிறதென்பதையும் நீ தெரிந்து கொள்வாய். -க.கொ

* * * *

என் தலைவ உன் விண்மீன்களிலிருந்து இறங்கி வருகிற பண்ணிசைப்புகளில் நெஞ்சத்தை எனது வாழ்க்கைத் தந்திகளில் பொழிந்து விடு. -க.கொ

என்றாவது ஒரு நாள் வேறொரு உலகத்தின் விடிவெள்ளியில் உனக்குப் பாடுவேன்; நிலத்தின் வெளிச் சத்தில் மனித நேயத்தில் உன்னை முன்பே நான் பார்த்திருக்கிறேன். -ப.ப

* * * *

குயிலுக்குத் தன்பாட்டுத்தான் பொருத்தமாகும். குயில் கிளியைப்போல எதிரொலிப்பது பொருந்தாது.

* * * *

நான் விடை பெற்று செல்லுமுன், திரும்பத் திரும்ப வருகிற சொல்லின் மேல் கவனம் செலுத்தி, அந்த இசையை முற்றிலுமாக நிறைவு செய்வேனாக. உன் முகத்தைக் காண விளக்கைச் சுடர்விடச் செய்வேனாக; உனக்கு முடிசூட்டிட மாலை தொடுப்பேனாக. -க.கொ

* * * *

நேற்றைய இரவின் புயல் தனது பொன்மயமான அமைதியினால் காலைப் பொழுதிற்கு முடிசூட்டுகிறது. -ப.ப

* * * *

தனக்குள்ளே யாவற்றையும் அடக்கிக் கொள்ளும் நிலையான உண்மை அங்கே இருக்கிறது. -ஆ

* * * *

எந்த அளவில் உலகம் தாலாட்டப் படுகிறதோ, அந்த இசை எது? -ப.ப

* * * *

மற்ற நாள்களிலிருந்து என் வாழ்க்கையில் மிதந்து வரும் முகில்கள் மழை பொழிவதற்காகவோ, புயல் வீசுவதற்காகவோ வரவில்லை; மறையும் படுஞாயிற்றுக்கு நிறம் கொடுக்கவே அவை வருகின்றன. -ப.ப

* * * *

தன் முடிவான தீர்மானத்தைக் கூறவே வாய்மை என்னிடம் வருவதாகத் தெரிகிறது. அந்த முடிவான தீர்மானமே மற்றொன்று தோன்ற வழி செய்கிறது . -ப.ப

* * * *

இந்த மண் பாண்டத்திகுள் நிலைப்பேறுடையது குரல் கொடுக்கிறது; வேனிற்காலம் நெருங்கத் துடிக்கிறது. -க.பா

* * * *

இந்த உலகத்தை என் கண்களாலும், இதர அங்கங்களினாலும் முத்தமிட்டிருக்கிறேன், எண்ணற்ற மடிப்புகளாக என் நெஞ்சத்திற்குள் சுருட்டி வைத்திருக்கிறேன். உலகமும் எனது வாழ்க்கையும் ஒன்றாக இணையும் வரை அதன் பகல்களையும் இரவுகளையும் வெள்ளம் போல் சூழ்ந்திருக்கிறேன். -க.கொ

* * * *

கண்ணீர்த் துளிகளில் விதைப்பதற்காகத் தோல்விகளைத் தொகுக்கிற அந்தக் காதலுக்காக நான் காத்திருக்கிறேன். -நா

*　*　*　*

வாழ்க்கையை நான் விரும்புகிறேன் ஏனெனில் என்னுடன் பிணைந்துள்ள விண்ணின் ஒளியை நான் விரும்புகிறேன். -க.கொ

*　*　*　*

எங்கு ஒளி இருளைத் தாக்கிப் பகலாக மாற்றுகிறதோ, அங்கு உன்னை நான் கண்ணுற்றிருக் கிறேன். -எ

*　*　*　*

வெறுமையாகவும் அமைதியாகவும் இருக்கிற வழிகள் என் வாழ்க்கையில் உள்ளன. எனது விரைவான நாள்கள் ஒளியும் காற்றும் கொண்டிருந்த வெட்ட வெளி இடங்கள் அவை. -ப.ப

*　*　*　*

எவரோ ஒருவர் அன்பாகிற மலரை என் நெஞ்சத்தில் கமுக்கமாக விட்டுச் சென்றிருக்கிறார். -எ

*　*　*　*

பயனற்றவை யாவற்றையும் புறந்தள்ளி விட்டு உனது பரபரப்பான அடிகள் உலகின் புழுதியை முத்தமிடுகின்றன.
-நா

* * * *

என்னுடன் இணைந்து என் நெஞ்சத்தில் வாழ்கிறான் என் இறைவன்.
-க.கொ

* * * *

அசைந்தசைந்து ஒளி சிந்தும் சிலம்புகள் கண்ணுக்குப் புலப்படாத கால்களைச் சுற்றிக் கொண்டு எழுப்பும் ஒத்திகைக் கட்டு என் எண்ணங்களுக்கு எழுச்சி யூட்டமளிக்கிறது.
-நா

* * * *

அவளிடம் நிலைத்திருத்தல் என்பது மகிழ்ச்சி கொண்டு இருபாதிகளாகப் பிரிந்துள்ளது. தன்னுள்ளே அடங்காமல் அன்பாகிற நோவாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது இந்த மகிழ்ச்சி.
-க.கொ

* * * *

ஓர் உலகிலிருந்து மற்றோரு உலகுக்கும், ஓர் அமைப்பிலிருந்து மற்றோர் அமைப்புக்கும் ஆரவாரத்துடன் இடியோசையுடன் வரும் வெள்ளத்தின் சீற்ற ஒலியை நான் கேட்கிறேன். அந்த ஓசை தன்னுடனே துயரங்களையும் -

துயரத்தின் சாயல் ஒலிக்கும் பாடல்களையும் எடுத்து வந்து என்னை நிலைகுலையச் செய்கிறது. -நா

* * * *

என்னருகில் ஒரு கண நேரம் தான் நீ நின்றிருந்தாய். படைக்கப்பட்ட பொழுதே ஆழங் காணமுடியாத ஒரு முகத்தை உள்ளடக்கிய பெண்ணாக என்னை வருடினாய். -க.கொ

* * * *

என் நெஞ்சமே, அலை உயர எழும்பி நிற்கிறது, காற்று வீசுகிறது, உன் விருப்பத்திற்கேற்ப, படகும் கூத்திடுகின்றது. -நா

* * * *

உனதோ, வழக்கமான புழுதியில் அமர்ந்திருக்கும் விண்ணகம். எனக்காக நீ அங்கே காத்திருக்கிறாய். யாவருக்காகவும்தான் நீ அங்கே காத்திருக்கிறாய். -க.கொ

* * * *

உனது சேமிப்பைக் கரையில் நிறுத்தி வைத்திடு. பின்னர் வரையறையில்லாத வெளிச்சத்தைத் தேடி ஆழங் காண முடியாத இருட்டின் மேல் பயணம் செய்வாய். -நா

* * * *

ஒளியின் வாழ்த்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்கிறது. -எ

* * * *

காற்றையும், முகிலையும் நான் தொடர்ந்து செல்வேன். குன்றுகளுக்குப் பின்புறம் எங்குப் பகல் தலை காட்டுகிறதோ, அங்கே நான் விண்மீன்களைப் பின்பற்றிச் செல்வேன், தாங்கள் நடந்து செல்கையில் தங்கள் நாள்களை ஒரு மாலையாக்கி அதில் 'நான் விரும்புகிறேன்' என்ற சொற்களைப் பாடலாக்குகிற காதலர்களைப் பின் பற்றிச் செல்வேன். -நா

* * * *

இன்னிளவேனிற் தென்றல் காற்று உன் ஆசையை ஒட்டுக் கேட்டிருக்கிறது. பிறவி எடுத்ததன் பயனை நீ அடையுமுன்னர் பகல் முடிவடைந்து விடாது. -க.கொ

* * * *

மரங்கள் கரைமேல் மங்கலாகப் படர்ந்திருக்கின்றன. தரையோ கடந்த காலத்திற்கே தான் உரித்தானது போல தோற்றமளிக்கிறது. -நா

* * * *

உன்னைப் பிணித்திருக்கும் தளைகள் இற்றுப் போகும். மொட்டு மலராக முகிழ்ந்துவிடும். நிறை வாழ்வு வாழ்ந்து வாழ்ந்து நீ இறக்கும் பொழுது கூட வேனிற் காலம் நிலைத்து நிற்கும். -க.கொ

* * * *

மழை பொழியாமல் அமைதியாக இருக்கிற கோடைக் கால முகில்கள் போல் ஒரு கமுக்கமும் புதைந்திருக்க வேண்டும் என்னுள்ளே. செல்லுமிடத்

தெல்லாம் நான் எடுத்துச் செல்லக் கூடியதாகவும், அமைதிக்குள் அடக்கப் பட்டுள்ளதாகவும் இருக்கிறது அந்தக் கழுக்கம். அதுவே என் விருப்பம். -நா

* * * *

எனது பாடல் உன் கண்களின் கருமணிகளில் கலந்து எந்த செய்தியையும் ஆழமாய் ஊடுருவிப் பார்க்கும் ஆற்றலை உனக்கு அளிக்கும். -க.பா

* * * *

நாம் வாழ வேண்டும். தன் பாடல்களைப் பொழியும் போது ஒரு பாவலன் எத்தகைய மகிழ்ச்சியை அடைகிறானோ, அந்த மாசற்ற மகிழ்ச்சியை நாம் அடைய வேண்டும். -ஆ

* * * *

மனவுறுதிப் பறவை இன்னும் இருண்ட இரவிலும் பாடுகிறது. -ப.ப

* * * *

வலியர் பேராசையை விடுக; எளியர் துணிவு கொள்க. இஃதின்றி உலக நட்புறவு வராது. -தா. சொ

* * * *

இந்த மாலைப் பொழுதில் நிலவும் அமைதி ஒரு காலடியோசையை எதிர் பார்ப்பதாகத் தோன்றுகிறது. நீயோ என் கண்ணீருக்குக் காரணம் கேட்கிறாய். -நா

* * * *

என் பண் இசையின் அலைகள் உன் அடிகளைக் கழுவுகின்றன. ஆனால் அவற்றை அடைவது எப்படி என்பது தான் எனக்குத் தெரியவில்லை. -க.கொ

*    *    *    *

நடுவில் புகுந்து அங்கிருந்து வாழ்க்கையாகிற கிளை பரப்பும் மரத்திற்குக் கண்ணுக்குத் தெரியாத ஊட்டமளித்து மலர்களும், கனிகளும் தோன்றச் செய்கிற அன்பை எனக்கு அளித்திடுவாய். -க.கொ

*    *    *    *

ஒப்புயர்வற்ற ஆவியில் எத்தனை வியப்பான அமைதி உள்ளது என்று கண்டிரு. தகுதியுள்ளவனுக்கே நுகர் வின்பம் கிடைக்கும். -க.பா

*    *    *    *

சோர்வுற்ற காலப் போக்கில் நீ ஈட்டிய செல்வத்தைக் கண்டு களித்தது போதும். எல்லாவற்றையும் கை கழுவி விட்டோம் என்ற பாழ்பட்ட வெற்றிக் களிப்பைத் தவிர எதுவுமே மிஞ்சி நிற்காதபடி அத்தனையையும் செலவிட்டு விடு. -நா

நமது வாழ்க்கை இறைவனின் திருவருள் கொடை யால் நிறைக்கப்பட்டிருக்கிறது. -ஆ

*    *    *    *

என் வாழ்க்கையின் பெருமகிழ்ச்சியான நாள்களில் நீ எனக்கு பாட்டிசைத்தாய் நான் உனக்கு அவ்வாறு பாட மறந்து விட்டேன். -க.கொ

* * * *

காதல் என்னும் மணிக் கயிற்றால் பிணைக்கப்பட்டு மகிழ்ச்சி என்னும் பெருங்கடலில் இங்கும் அங்குமாய் அசைக்கப்படுகிறேன்.

வல்லமை மிக்க ஓசையொன்று இசையாக வெளிப்படுகிறது. -க.பா

* * * *

என் இளமைப் பருவத்தில் ஆழ்ந்த மகிழ்ச்சியாக என் உள்ளத்தில் உறைந்திருந்தாய். அந்த நிலையில் நான் திளைத்திருந்த பொழுது, அந்த மகிழ்ச்சி திடீரென மறைந்து போனது. -க.கொ

* * * *

உலகம் தன் கடமைகளைச் செய்து கொண்டுதான் இருக்கிறது; தவறுகளும் புரிந்து கொண்டிருக்கின்றது.

ஆனால் தங்கள் காதலிகளை அறிந்து கொள்ளும் காதலர்கள் சிலரே இருக்கிறார்கள். -க.பா

* * * *

ஆழம் காண முடியாத கடலின் நெஞ்சத்திலிருந்து பொன்மயமான குரலொன்று பிறக்கிறது. -எ

* * * *

என் இருண்ட உள்ளக் குகைகளில் எதிரொலித்துக் கொண்டிருக்கும் உன்றன் பாடல்கள் அவைதாமா? -க.கொ

* * * *

என் முன்னே தூசியில் தூக்கி எறிவதற்காக இரண்டு கைகளிலும் நீ என்ன பரிசு கொண்டு வந்திருக்கிறாய். -நா

* * * *

நீ என்னைக் கொண்டு சேர்த்திருக்கிற உலகத்தை நான் விரும்புகிறேன் என்பதைக் கண்டறிய நீ விரும்புகிறாய்.
-க.கொ

* * * *

விருந்தாளி எவருக்கும் வரவேற்பளிக்க எனது வீட்டில் இடமில்லையே என்று நினைத்தபடி ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தேன். ஆனால் இனந் தெரியாத மகிழ்ச்சி யினால் உந்தப் பட்டுக் கதவு திறக்கப்பட்ட பொழுது உனக்கு மட்டுமன்று, உலகனைத்திற்கும் அதில் இடமுள்ளது என உணர்கிறேன். -க.கொ

* * * *

மாரிக் காலத்தில் ஆற்றில் வெள்ளம் முழுமையாகப் பெருகிப் பொங்குவதைப் போல, என் உள்ளமும் சுழித்தோடு கிறது. அது போன்றதுதான் அவளிடம் எனக்குள்ள காதல்.
-கா.ப

* * * *

# அளவிலா ஆசை

இலைகள் சலசலக்கும் உன் கிளைகளில் புகுந்து விளையாடும் காற்றாகிவிட வேண்டுமென்றும், பொழுது சாயச் சாய நீண்டு வந்து நீரில் படிய உனது நிழலாகிவிட வேண்டுமென்றும், உன்னுடைய உச்சாணிக் கிளையிலே வீற்றிருக்க ஒரு புள்ளினமாகிவிட வேண்டுமென்றும் நிழல்களுக்கிடையிலும் காணல்களுக்கிடையேயும் அந்த வாத்துகளைப் போல மிதந்து வர வேண்டுமென்றும் அவன் ஆசைப்பட்டதை யாராலும் அளவிட முடியாதுதான்!

உன்னைப் படைத்த பேரொளியின் துன்புறுத்தும் பெருக்கத்தை யாரால் கற்பனை செய்ய முடியும்? -நா

* * * *

ஒவ்வொரு நாளும் என் நெஞ்சத்திலிருந்து பருதி ஒளியை வாங்கி விடுகிறாய். என் வாழ்வாகிற உருவத்தில் உன் காதல் பொறிக்கப் பட்டிருப்பதைக் காண்கிறாய்.

-க.கொ

* * * *

பொருளை நம்ப இயலாவிட்டாலும் கூட இசையில் உண்மை இருந்து விட்டால் மனநிறைவு பெற்றிடுவாய்.

- நா

* * * *

பறவைகளுக்கு நீ பாடல்களை அளித்தாய்; பறவை களும் பாடல்களை உனக்குத் திரும்ப அளித்தன. -க.கொ

* * * *

வாழ்வு என்பது இடைவிடாத படைப்பு. எல்லை இல்லாததில் அது தன்னை மீறி வளர்ச்சியடையும் போது அதில் உண்மை தெரிகிறது. -ஆ

* * * *

என் அன்பே, உன்னை என் கண்களில் மறைத்து வைத்திருப்பேன். -நா

* * * *

நிறைவு பெறுதல் என்கிற ஞாயிறு உதயமாகி விட்டான். விண்மீன்கள் அதன் ஒளியில் தங்கள் ஒளி மங்கி நிற்கின்றன - உயிரளிக்கும் அறிவை நான் முற்றிலுமாக அடைந்து விட்டேன். -நா

* * * *

காற்றை நீ மெல் இயக்கமாகச் செய்து விட்டாய். உன் பணியில் ஒரு கூட்டம், நானே என் கைகளைச் சுமையற்ற தாக்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காகவே, நீ என் கைகளில் சுமை ஏற்றிவிட்டாய். -க.கொ

* * * *

உனது பணியாளனாகிய நான் துணிவும் செருக்கும் கொண்டு தலையை நிமிர்த்தி நடக்க வேண்டும். -க.கொ

* * * *

என் அரசியே, எனது பழத் தோட்டத்திற்குள் பெருமையுடன் புகுந்து, நிழலில் அமர்ந்து, கம்பிலிருந்து பழுத்த பழங்களைப் பறித்துக் கொள். -கா.ப

* * * *

வெளிச்சத் திவலைகளினால் நிழல்களை நிரப்பி நீயே நிலத்தைப் படைத்தாய்.

அங்குச் சற்று நின்று கொண்டாய், உனக்கான விண்ணைப் படைத்தளிப்பதற்காக என்னை வெறுங்கை யனாக நிறுத்திச் சென்று விட்டாய். -க.கொ

* * * *

மாந்தனின் உண்மை உலகைப் படைத்தல் - உண்மை, அழகு இவற்றினாலான, வாழும் உலகம் அது - கலையின் பணி.
-ஆ

* * * *

நண்பா, நீ இப்பொழுது தப்பிச் செல்ல முடியாது, ஏனெனில் உனது கழுக்கம் எனதும் தான்.
-நா

* * * *

நான் வந்தேன். உன் நெஞ்சம் விம்மியது. வலியும், மகிழ்ச்சியும் ஒருசேர உன்னிடம் வந்தேன்.

நீ என்னைத் தொட்டாய்; காதலில் உள்ளதிர் வுற்றாய்.
-க.கொ

* * * *

அதோ கடலையைக் கொறிக்கும் அணிலாக இருந்தால் உரிமையாக உலாவுவேன். அந்தோ, அந்தக் குன்றைத் தாண்டிச் செல்ல என் மனம் துடிக்கிறதே! அந்தக் குன்று கையை உயர்த்தி வானை அழைப்பது போலிருக்கின்றதே! அந்த ஆற்றைத் தாண்டி இயற்கை உலகைக் காணமாட்டேனா?
- அ.அ

* * * *

உன் கைகளை நிரப்பிப் பிரிந்து செல்லும் ஒளிக் கீற்றுதான் உன் உலகம். ஆனால் உனது துறக்கமோ எனது

கமுக்க நெஞ்சத்தில் உள்ளது. அது மெதுவாக நாணம் கொள்ளும் காதலின் அரும்புகளாக விரிகிறது. -க.கொ

* * * *

திடீரென்று என் குரல் உன் நெஞ்சத்தைத் துடிக்கச் செய்து அங்க அசைவுகளை ஏற்படுத்தும், இதை நான் ஒரு பொழுதும் கண்டதில்லையோ? -நா

* * * *

உன் விருப்பங்களை நிறைவேற்றி வைத்துக் கொள். உன் கட்டளையை ஏற்றி உன் அரசவையில் விருப்பம் போல் நான் நடமாடவேண்டும். -க.கொ

* * * *

காதல் தனது துயரமான அமைதியின் மேல் சாயும் பொழுது, இருட்டு ஆற்றங்கரையின் மேல் சாய்கிறது. இந் நிலையில் விண்மீன் கூட்டத்திலிருந்து பறித்து வந்து பாடல்களை என்னருகில் அமர்ந்து பாடச் சொன்னது எது?

-நா

* * * *

இறப்புக் காலத்தில் தனது கட்டுகளை மாந்தன் உடைத்தெறியும் அதே சமயம் கட்டுகளுக்கு அடங்காது தன்னை வெளிப்படுத்திக் கொள்ளுகிறதில்லையா. -க.கொ

* * * *

நான் குழந்தையாயிருந்த காலம் தொட்டு நீ என் நெஞ்சத்தில் வாழ்ந்து வருகிறாய். -வ.ப

* * * *

இரவினூடே உன் கையை நீட்டு, அதை நான் பற்றிக் கொள்ள, நிரப்ப, வைத்துக் கொள்ள ஒப்புவாய், நீண்டு கொண்டேபோகும் என் தனிமையில் அதன் தொடுகையை நான் உணரவேண்டும். -க.கொ

* * * *

இறப்பது உறுதி என்ற நிலையிலும் தான் இறப்பற்றவன் என்ற எண்ணத்தை மாந்தனுள் எழுப்புவது எது? -ஆ

* * * *

புரிதல் என்ற தொடர்பு நிலை அரை குறையானது, ஆனால் காதல் என்கிற தொடர்பு முழுமையானது. -சா

* * * *

எல்லோருடனும் நீ பேசி முடித்த பின்னர் தான் எனது முறை வருகிறது. உனது கடைசி பணியாளன் செய்ய வேண்டியது என்ன உள்ளது என்று அறிந்து கொள்ளவே உன்னிடம் நான் வருகிறேன். -தோ

* * * *

நம் உள்ளுயிர்களை நாம் மாய்த்துவிடக் கூடாது. நம்மிடம் நிலைத்து நிற்பது எதுவோ அதை வெளிப்

படுத்தவே நமக்கு வாழ்வு இருக்கிறது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. -ஆ

*　　*　　*　　*

உங்களுடைய இளைய அலைபாயும் உள்ளங்கள் ஒன்றுசேர்கின்றனவா என்று நான் கண்காணித்து வருகிறேன். ஆர்வம் பொங்கும் இரண்டு இணை விழிகள் தங்கள் அமைதியை உடைக்கவும் தங்களுக்காகப் பேசவும் இசையை இரந்து கொண்டு நிற்கின்றன. -தோ

*　　*　　*　　*

இந்த உலகம் முழுவதும், எல்லையில்லாத வெட்ட வெளியும் குழந்தைக்காக, புதிய வாழ்வுக்காகவே படைக்கப்பட்டவை. -நா

*　　*　　*　　*

உலக இசை மேடைக்குத் தன் குரலையும் பங்களிப்பாய்த் தரும் போதுதான் படைப்பாளி என்ற அளவில் நமது கட்டற்ற உரிமையும் உயர் மகிழ்ச்சி காண்கிறது. -ஆ

உனது ஆடி ஓசைகளின் தாள இசையை நானறிவேன், எனது நெஞ்சத்துள் அவை துடித்துக் கொண்டிருக்கின்றன. -தோ

*　　*　　*　　*

தாயின் கைகளில் சிரித்துக் கொண்டிருந்த குழந்தை வெட்ட வெளிச்சத்திற்கு ஓடி வந்து, கொண்டிருக்கிறது.

இதற்காகத்தான் வருகை நாள் என்று அவர்கள் சொன்னார்களோ?

ஆமாம் இதனால்தான் காற்றில் இசை இருந்ததென்றும், வானத்தில் வெளிச்சம் இருந்ததென்றும் அவர்கள் கூறினார்கள். -நா

* * * *

முதல் அன்பில் நான் திளைத்துக் கொண்டிருந்த பொழுது, புதிய வியப்புடன் ஒருநாள் நீ என் வாழ்வில் வந்தாய். -கா.ப

* * * *

எதன்மேல் என் காதலி நடக்கிறாளோ, அந்த மண்ணுக்குள் என் உடல் மறைந்து விடுவதாக நான் உணர்கிறேன். -நா

* * * *

அவனுக்காகக் காத்திருந்து அவனுடைய: காலடி ஓசை யை நான் கேட்கும் பொழுது, மரங்களில் இலைகள் சலசலப்ப தில்லை. ஆறுகளில் தண்ணீர் அமைதியுற்று நிற்கிறது. என் நெஞ்சம் மட்டுமே கடுமையாகத் துடிக்கிறது. அதை அமைதிப் படுத்த எனக்குத் தெரியவில்லை. -தோ

* * * *

என் நெஞ்சம் வெளிச்சத்தில் உருகி கண்ணாடியில் ஒன்றிவிடுகிறது. அதில் அவன் தன் முகம் பார்க்கிறான்.-நா

* * * *

விடியலின் அமைதியில் கோயிலுக்கு இட்டுச் செல்லும் தனித்த சாலை அருகில் தலை தாழ்த்தி மர நிழலில் கீழ் ஓரமாக நான் நிற்கிறேன். -கா.ப

* * * *

என்னருமைக் காதலியே, உன்னை என் கண்களுக்குள் மறைத்திருப்பேன், என் மகிழ்ச்சியில் வைரம் போன்று உன்னை இழையிட்டிருப்பேன், என் மார்பின் மேல் அதைத் தவழ விட்டிருப்பேன். -நா

* * * *

என் காதலி வருகையில், என்னருகில் அமர்கையில் இருட்டு மேலும் கறுத்து விடுகிறது, காற்று விளக்கை அணைத்துவிடுகிறது, விண்மீன்கள் மேல் கொண்டல்கள் திரையிடுகின்றன. என் மார்பின் மேல் தவழும் மதாணி ஒளி வீசுகிறது, வெளிச்சம் அளிக்கிறது, அதை எவ்வாறு மறைத்து வைப்பது என்பது எனக்குத் தெரியவில்லை. -தோ

* * * *

என்னிடம் நீ குறைகள் காணும் பொழுது நான் ஒரு பெண் என்பதை நினைவில் வைத்துக் கொள். நினைந்து நினைந்து பார்க்கும் பொழுது ஒன்று தெளிவாய் தெரிகிறது. இந்த உலகில் எனக்கென்று எஞ்சி நிற்பது உனது அன்பு ஒன்றே, உன்னை விட்டு நான் ஒரு கணம் பிரிந்து விட்டால், நான் இறந்து விடுவேன். -நா

* * * *

பறவைகள் தங்கள் கூட்டை விட்டுக் கிளம்பி விடுவதைப் போல, உன் எண்ணங்கள் உன் கண்களி லிருந்து புறப்பட்டு விடுகின்றன. -தோ

* * * *

பொழுது விடியப் போகிறது என்று இரவு உணர்வதைப் போல், நீ வரப்போகிறாய் என்பதை என் நெஞ்சம் உணர்கிறது. -நா

* * * *

கனவுகள் தோன்றாத உறக்கம் போன்று என் ஏரி இருண்டிருக்கிறது. அடி ஆழத்தில் இரவும் பகலும் ஒன்றே; அமைதியே பாடல்களாகின்றன. -தோ

குழந்தைகளைஅடைத்துப் போடாமல், மகிழ்ச்சியாக ஓடியாட விட்டாலே கட்டில்லாமல் உடலும் உள்ளமும் செழித்து வளரும். -நினை

* * * *

அன்பே உலகம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். காரணம் அன்பு தான் உலகைத் தோற்று விக்கிறது, காக்கிறது, அதை அதன் மார்பகத்திற்கே இட்டுச் செல்கிறது. -சா

* * * *

கடல் கொந்தளிக்கும் போது அலைகள் எழுவதைப் போல், என் எண்ணங்கள் கிளர்க்கும் பொழுது, நீ

எழும்புகிறாய். பாடல்கள் பீறிட்டு எழும்போது என் நெஞ்சம் அவற்றினடியில் முழுகிப்போய் விடுகிறது. -நா

* * * *

நம் உள்ளத்திற்கு உவகை ஊட்டும் பொழுதுதான் எந்தவொரு பொருளும் நமக்கு முழுதும் உரித்தாகிறது. -சா

* * * *

தான் முளைத்தெழும் பரந்த உலகிற்குத் தகுதி யாகிறது புல்லின் இதழ். -ப.ப

* * * *

அந்த ஒருவனைக் கண்டு பிடிப்பது என்பது எல்லாவற்றையும் அடைந்திருப்பதேயாகும். அதில் தான் நமது அறிதியும், உயர்ந்ததுமான உரிமை உள்ளது. -சா

* * * *

என் பாடல்கள் தேனீக்களைப் போன்றவை. உன் நினைவை ஏதோவொரு நினைவு - நறுமணம் வீசும் காற்றினூடே, உனது வெட்கத்தைச் சுற்றி, மறைந்திருக்கும் ஒரு புதிர்ச் செல்வத்தைக் காணத் தொடர்கிறது. -நா

* * * *

உனது மறைந்த மெய்தொடு உணர்வு பொங்கி வழியும் என் நெஞ்சத்தை எனது உடலின் ஆழத்திற்குக் கொண்டு செல்லட்டும். -நா

* * * *

உனக்கும் எனக்குமிடையே உள்ள காதல் ஒரு பாடல் போல் எளிமையானது. -தோ

* * * *

அலையில் அலைக்கழிக்கப்படும் பலரில் ஒருவனாக நான் இருந்த போதிலும் உனது அன்பினால் என்னை உயர்ந்தவனாக்கிவிட்டாய் நீ. -நா

* * * *

எனக்காக நீ கட்டிய மல்லிகை மாலை புகழுரை போன்று என்னைச் சிலிர்க்க வைக்கிறது. -தோ

* * * *

நம்மிடம் தன்னைக் கொடுப்பதோடு அவன் நிறைவடைந்து விடுவதில்லை. நமக்கு நாமே அளித்துக் கொள்ளும் ஆற்றலைப் போன்று, தானும் நமக்கு ஆற்றலை அளிக்கிறான். -சா

* * * *

எல்லையற்ற தன் நுழைவாயிலைத் தட்டுவதற்கான உரமளிக்கும் வேண்டுதலை துன்பம் மாந்தனுக்கு அளித்திருக்கிறது. -ஆ

* * * *

நாளை இசைக்கப்பட வேண்டிய பாடல்கள் இன்று, அரும்புகளாக உள்ளன. அவற்றின் வழி நீ நடந்து செல்வது

தெரிந்தால் பக்குவப்படாத அவற்றின் நெஞ்சங்கள் இன்றே நொறுங்கிவிடும். -நா

* * * *

தன்னையே அளித்திடும் இறைவனின் உயிரோட்டம் கட்டற்றுச் செல்ல முனைந்திடும் மாந்தனின் வாழ்க்கையைத் தொட்டுச் செல்கிறது. -ஆ

* * * *

என் நெஞ்சம் உன் நெஞ்சத்தைத் தொடட்டும்; உன் அமைதியிலிருந்து நோக்காட்டை முத்தமிடட்டும். -நா

* * * *

நெஞ்சமாகிய முன்பின் அறிமுகமில்லாத திட்டிலிருந்து திடுமென வேனிலாகிய கதகதப்பான மூச்சு வெளிப்பட்டது.

அவள் உடலின் ஒரு பெருமூச்சாகவும், அவள் நெஞ்சத்தின் கிசுகிசுப்பாகவும் அது என் நெஞ்சத்தை வருடியது. -தோ

* * * *

புதைந்துள்ள தனி அடியாழத்திலிருந்து ஒரு நொடி நேரப் பொழுதை விடுதலை செய்கிறது. தனித்தொரு விளக்கினால் ஒளியேற்றப்பட வேண்டிய மூடப்பட்டுள்ள இந்தக் கதவுகளுக்குள் புதிய தோர் உலகை அது எழுப்பட்டும். -நா

* * * *

என் தோழனே, உன் நெஞ்சின் கமுக்கத்தை உனக்குள்ளேயே மூடி மறைத்திடாதே. என்னிடம், என்னிடம் மட்டுமே கமுக்கமாக அதைக் கூறிவிடு. -தோ

* * * *

போற்றுதலுக்குரியது என்பது ஒரு பிறந்த குழந்தையே. -ப.ப

* * * *

பொதுவான பொருண்மைகளையும், நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கியதே இந்த உலகம். அந்த உலகில் அன்பைப் பொழிந்திடவே இறைவன் பெண்ணை அனுப்பியுள்ளான். -ஆ

* * * *

மென்மையாகப் புன்னகை சிந்துகிறாய் நீ, மென்மையாகக் கிசுகிசுக்கிறாய் நீ. என் நெஞ்சம் அதைக் கேட்கிறது, என் காதுகளல்ல. -தோ

* * * *

என் காதலியிடம் நான் நிலையாக அளிக்கப் பட்டுள்ளேன் என்பது மட்டும் போதுமானதன்று. அதிலிருந்து நாள்தோறும் புதிது புதிதான பரிசுகளை உருவாக்க வேண்டும். -நா

* * * *

தன்னை அளித்துக் கொள்வதிலேயே அவன் மகிழ்ச்சி காண்கிறான். இறைவனுடைய படைப்பே அந்த அளிப்பாகிறது. -சா

* * * *

எல்லோரிலும் உயர்ந்த இறைவனை அறிவதே மாந்தனின் ஒரே தேடுதல். -ஆ

* * * *

'குழந்தை எதை எடுத்து வருகிறது உன்னிடம்?' 'உலக முழுவதற்குமான நம்பிக்கையையும், அதிலிருந்து பிறக்கும் மகிழ்ச்சியையும்.' -நா

* * * *

அனைவருக்கும் அன்பின் மூலம் தன்னையே அளித்துக் கொண்டிருக்கிறான் இறைவன். -ஆ

* * * *

என் அருமைக் காதலியே, என் குரலைப் பற்றிய எண்ணமே இல்லாமல் உன்னிடம் நான் பேசிக் கொண்டிருந்தேனே. அதற்கு நீ ஏதாவது வகை வைத்தாயா? (அதில் நீ ஏதாவது பொருள் கண்டாயா?) சொல்லிவிடு, வாழ்க்கையின் வரம்புகளையெல்லாம் தாண்டி எங்கிருந்தோ ஓர் அறிவுரை கொணர்ந்தது. -நா

* * * *

என் அன்பே, பேசிடு. நீ என்ன பாடினாய் என்பதை வாய்திறந்து சொல்லிடுவாய்.

இருட்டிவிட்டது. விண்மீன்கள் முகில்களில் மறைந்து விட்டன. இலைகளினூடே காற்றுப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறது. -தோ

* * * *

என்னைக் கவர்ந்திழுத்த குரல்களை நான் தேடியலைந்தேன். எனினும் தேடுதல் பயனளிக்கவில்லை.

இனி என் அமைதியின் ஆன்மாவில் உனது மொழிகளை அமர்ந்து கேட்கவிடு. -எ

* * * *

நாம் இருவரும் முதன் முறையாகச் சந்தித்தபோது, என் நெஞ்சம் இசையில் ஒலித்துக் கொண்டிருந்தது. என்றும் தொலைவிலேயே இருக்கும் அவள் இனி என்றும் உன்னருகிலேயே தங்கியிருப்பாள். -நா

* * * *

என் கனவுகளாகிற விண்ணில் மிதந்து கொண்டிருக்கும் பொன்மாலை முகில் நீ. -தோ

* * * *

அன்பின் நேயக் கைகள் போல, என் குழந்தாய்! இந்த என் பாடலானது தன் இசை அலைகளால் உன்னைத் தழுவிக் கொள்ளும். - வ.பி

* * * *

# இறுதிப்பாட்டு

எனது இறுதிப்பாட்டில் இன்பத்தின் அனைத்து இசைகளும் கலந்து இயங்கட்டும் - எந்த இன்பம் நாநிலத்தில் பார்க்கும் இடமெல்லாம் நிறைந்து பசும்புல் அளவுக்கு மிஞ்சி வளர்ந்து மண்டி விடும்படி செய்கிறதோ, எந்த இன்பம் பிறப்பு இறப்பு என்னும் இரட்டையர்களை வையகம் எங்கும் ஆடிப்பாடித் திரியும்படி செய்கிறதோ, எந்த இன்பம் சூறைக்காற்றோடு சுழன்று திரிந்து அனைத்துயிர்களையும் மகிழ்ச்சி வெறியுடன் எழும்படி செய்கிறதோ, எந்த இன்பம் இன்னல் என்னும் செந்தாமரை மீது கண்ணீர் சிந்திக்கொண்டு அமர்ந்திருக்கிறதோ, எந்த இன்பம் தன் உடைமைகள் அனைத்தை யும் குப்பையில் கொட்டி விடுகிறதோ, எந்த இன்பம் சொல்லற்ற பேசா நிலையில் இருக்கிறதோ,-அந்த இன்பத்தின் இசைகள் என் பாட்டோசையில் கலந்து ஒலிக்கட்டும். -கீ

என் அரிய பாடலே, சோர்விலிருந்து எழுந்திடு, பழக்கமான திரையைக் கிழித்திடு, முதன்முதலில் நாம் கூடிய பொழுது அடைந்த மகிழ்ச்சியில் திளைத்தவாறே என் காதலியிடம் பறந்து சென்றிடு! -நா

* * * *

இசையாகிற என் வலையில் என் அன்பே, நான் உன்னை இழுத்துவிட்டேன், சுற்றி இழுத்து வளைத்து விட்டேன். -தோ

* * * *

என்னை கிண்ணமாக்கிவிடு; என் முழுமையை உனக்கே உரித்தாக்கிக் கொண்டு விடு. -ப.ப

* * * *

உனது ஆசைகளெல்லாம் கடந்தகாலத் தேன் கூட்டிலிருந்து கிளம்பி என் நெஞ்சத்தைக் கிறக்கிவிடவே வருகின்றன. அவற்றின் சிறகுகள் கூறுவதைக் கேட்டிட நான் சிலையாக அமர்ந்து கொண்டேன். -நா

* * * *

உண்மையையே நான் பேசுகிறேன். வாழ்க்கையில் அதுவே நிலை என்று நான் கண்டு கொண்டேன். வேறு மலிவான பகட்டுகளை ஒதுக்கி விட்டேன். -கா.ப

* * * *

பெரிய தலைவன் இசைக்கிறான். மூச்சுக் காற்று அவனதுதான். ஆனால் அந்த இசைக் கருவி நமது மனம்தான். அதன் மூலமே படைப்பாகிற பாடல்களை வெளிக் கொணர்கிறான். -ஆ

* * * *

என் உலகில் ஒளி இருந்த நாள்களில் என் கண்களுக்கு வெளியே நீ இருந்தாய். இப்பொழுதோ என் உலகில் ஏதுமில்லை ஆனால் நீயோ என் உள்ளத்துள் புகுந்து விட்டாய். -எ.சு

* * * *

எவனோ என் உள்ளத்தைத் திருடிவிட்டான். அதை விண்ணில் சிதறிவிட்டான். -எ

* * * *

வேனில் நாள்கள் மாறிமாறி வருகின்றன. முழு வெண்ணிலா விடை பெறுகிறது. மறுபடியும் தோன்றுகிறது. ஆண்டுதோறும் மலர்கள் மலர்கின்றன, கிளைகளில் மயங்கி நிற்கின்றன. இப்பொழுது நான் உன்னிடம் பெறுவதும் மறுபடியும் ஒருவேளை உன்னிடம் வருவதற்காகவே என்றே தோன்றுகிறது. -தோ

* * * *

என் பாடல் உனது கனவுகளுக்கு இரட்டைச் சிறகுகளாக அமைந்து, யாரும் கண்டறியாத புதிய பொன் உலகுக்கு உன் உள்ளத்தை இழுத்துச் செல்லும்.

உன் வாழ்க்கைப் பாதையிலே இருள் கவிந்திருக்கும் போது, உனது தலைக்கு மேல், வழிகாட்டும் ஒளி சுடராகவே மின்னிக் கொண்டு வரும், எனது பாடல். -வ.பி

இனிமை உடையது இவ்உலகு; நான் பெண்ணாய்ப் பிறந்ததும் இனிமை உடையதே. -நூ. பா

* * * *

புரட்சி மனங்கொண்ட வீர இளைஞன் முதியவர் ஆட்சியினை அழித்திடவே இனி அடிக்கடி தோன்றுவான். -நூ.பா

* * * *

பொன் வேண்டேன் புகழ்வேண்டேன், வாழ்வதற்குத் துளி இடமே நான் வேண்டுவது. -நூ.பா

* * * *

சாரளக் கோப்பில் நறுமணமல்லிகை, ஆற்றின் அக்கரையில் தோன்றிடும் இளங்காலை ஒலி - ஒளிக் கூத்து இவையே வேண்டுவன. -நூ.பா

* * * *

பொன் இல்லை, பெற்றி இல்லை, புகழில்லை நான் வேண்டுவது துளி அன்பே. -நூ.பா

* * * *

காதலுக்குரிய மதிப்பினை இரு கைகளாலும் நீ அள்ளியே எனக்குத் தந்திடத் தந்திட என் உள்ளத்தில் பதுங்கி இருந்த ஓர் ஏமாற்றம் தானே வெளியே தோன்றிடும்.

-நூ.பா.

வாழ்வுடன் ஒட்டியிராது போனால் பாட்டின் செல்வம் யாவும் பயனற்றே போகும். -நூ.பா

* * * *

உண்மை விலை கொடுக்காமல் பெற்றிடும் இலக்கியப் புகழ், வெறும் கள்ளத்தனமே; இது நல்லதே அன்று. -நூ.பா.

* * * *

அன்பிரக்க மழைதனைப் பொழிந்திடுவேன்; கற்சிறைகளைத் தகர்த்திடுவேன், உலகிடை திசைகெட்டுத் திரிந்திடுவேன்; பித்தன் போலப் பாட்டிசைத்திடுவேன்.-நூ.பா

* * * *

அம் மெல்லிய சிரிப்பும், சுவைதரு கனிமொழியும் மையல் நோக்கும் காதலைக் காட்டுவனவே. -நூ.பா.

* * * *

இன்னலுக்கு இளகியும், காதலைத் தந்தும் இன்பக் கூட்டினை மறைவில் எழுப்பியும் எந்நாளும் அது நிலைக்கும் என்றே நம்பியும் வீண் செய்தேன் இவ் வாழ்வினை.

-நூ.பா

* * * *

மாந்தர் வீடுகளில் இரவு படர்கையில், மண் மகள் அயர்ந்தே தன் உடலைக் கிடத்துவாள்; துன்பங்களை மறந்தே எண்ணிலா உயிர்களும் உறங்கும்; வானகம் ஒன்றே விழித்திருக்கும். -நூ.பா

* * * *

இவ் உலகின் மூலை எங்கும் மண்ணில் எழும் பண்ணினைக் காலப் பெண் வேய்ங்குழலில் இசைக்கிறாள். -நூ.பா

* * * *

ஓ, காற்றே, கடலே, வானே நீங்கள் சேர்ந்தே இன்று இக் கோலாகலம் என்னே! ஆடுக ஊசல், ஆடுகவே. -நூ.பா

* * * *

அழகிய மாநிலமே, எனது உள்ளம் உன்னைக் கண்டு எத்தனை முறைதான் களிப்புடன் பாடிப் பொங்கிற்று. -நூ.பா

* * * *

பாவலன் மனத்துள் திகழும் காட்சியே பாவியமாக எழுந்திடும். -நூ.பா

* * * *

தன்னலம் கொண்ட கொடுமை பிறர்படும் இன்னலைப் பார்த்து நகைக்கிறது. -நூ.பா

* * * *

நீங்காத வறுமை, இருள், அடைப்பு; சோறு வேண்டும்; உயிர்வேண்டும், உடல்நலம் வேண்டும், வலிமை மிக்க தோள்வேண்டும். -நூ.பா

* * * *

அறிய வேண்டாதொன்றை அறிந்து கொள்ளாதே; கிட்டாததைத் தேடிச் செல்லாதே; நிரம்பாத ஒன்றை நிரப்பத்தான் கூடுமோ? -நூ.பா.

* * * *

காளிதாஸ் என்ற பெயரில் எவனோ ஒருத்தன் இருந்தான்; ஆனால் நான் இருக்கிறேனே, உயிர்த் துடிப்புடன் ஓர் ஆள். -நூ.பா

* * * *

எனது அன்பார்வம் விடுதலை உருவில் ஒளிரும்; எனது காதலோ பத்தியின் வடிவாய்ப் பயன் தருமே. -நூ.பா

* * * *

இந்தப் புல், இப்புழுதி, அந்த விண்மீன்கள், ஞாயிறு, திங்கள் இவற்றின் மறைவில் நிற்கும் நீ ஓவியமா? வெறும் ஓவியமா? -நூ.பா

* * * *

வாழ்வு, இளமை, செல்வம் , புகழ் யாவும் காலப் பெருக்கில் மறைவன. -நூ.பா

* * * *

# வேண்டுதல்

நலங்கெட்ட இந்நாட்டினின்று இழிவு தரும் அச்சம் யாவுமே அகற்றிடுவாய், மங்கலம் நிரம்பியவனே! மாந்தரால் வரும் துன்பம், அரசினால் வரும் அழிவு, தீம்பு, மறலியால் மூளும் அச்சம் யாவையும் எளிய உயிரினை ஒடுக்கிடும், இப்பாறையின் சுமையை, நொறுங்கிக் குழைந்து மண்மிசை உழன்றிடும் தொல்லையை; நீடித்த இந்தத் தாழ்வினை; கணமும் உயிரை வாட்டும் மானக்கேட்டை; அகத்தையும் புறத்தையும் இறுக்கிடும் இவ் அடிமைத் தளையை; நடுங்கித் தலைதாழ்ந்து பலர் காலடியில் மாந்தன்மையை இழந்திடும் இக் கொடுமையை; மாபெரும் இழிவின் இவையை, உன் காலால் மிதித்துத் துகளாக்கிடு. மங்கலம் தரும் வைகறையில் எல்லை இல்லா வானிடையே பரவிய ஒளியினலே காற்றின் திறந்த மச்சிடையே தலை நிமிர்ந்து நின்றிடுவேன்.

-நைவேத்தியம்

விண்ணில் திரியும் வெண்முகிலாய் மாற ஏங்கியது மாமலை . மண்ணின் சிறையிலிருந்து மீண்டும் வெளியேற சிறகடித்தது மரமும். -நூ.பா

*    *    *    *

ஆடுகின்ற நிழல்களிலும் பாடுகின்ற பாடல்களிலும் ஏன் எளிதாக என்னைப் பறிகொடுத்துவிட்டேன். -கீ

*    *    *    *

ஆ, என் அன்பே, எனது வாழ்வின் இடையில் ஒளி தாண்டவம் ஆடுகின்றது. அந்த ஒளி எனது வீணையின் கம்பிகளை மீட்டுகிறது, விசும்பு தெரிகிறது, காற்று அலறி ஓடுகிறது, உலகம் உவப்புடன் களி நடம் புரிகிறது. -கீ

*    *    *    *

என் உள்ளத்தில் உலகம் சொற்களை மாலையாக நெய்கிறது. உனது பெருமகிழ்ச்சி அச்சொற்களுக்கு இசை ஊட்டுகிறது. காதலினால் நீ உன்னையே எனக்கு அளித்துவிடுகிறாய், பின்னர் என்னகத்தே உன் இனிமை முழுவதையும் நிறைந்திருக்கக் காண்கிறாய். -கீ

*    *    *    *

அல்லும் பகலும் என் நாடி நரம்புகளில் ஓடும் உயிர் ஆறே இந்த உலகின் ஊடும் ஓடிச் பெருகி இசையோடு நடம்புரிகின்றது. -கீ

*    *    *    *

எல்லாப் பொருள்களும் ஓடிக் கொண்டே இருக்கின்றன, நிற்கவே இல்லை. பின்புறம் திரும்பிப் பார்க்கவில்லை. எந்த ஓர் ஆற்றலும் அவற்றை நிறுத்தவே முடியாது. அவை ஓடிக் கொண்டே இருக்கின்றன. கீ

* * * *

நீயும் நானும் இணைந்த காட்சி வானகம் முழுதும் நிறைந்திருக்கிறது . நீயும் நானும் கலந்து பாடும் இன்னிசை காற்றில் குமுறிக் கொண்டு வருகிறது. நாம் ஒருவரை ஒருவர் தேடிப் பிடித்துக்கொண்டு அலைவதில் பல ஊழிகள் கழிந்து ஒழிகின்றன. -கீ

* * * *

பிரிவின் துயரமே வையத்தில் பரவிப் பாய்கிறது. இதுவே எல்லையற்ற வானவெளியில் எண்ணற்ற உருவங்களைத் தோற்றுவிக்கிறது. -கீ

* * * *

எனது உயிரின் உயிரே, எனது உடல் முழுதும் நினது உயிருணர்ச்சி பரவி இருப்பதை அறிந்து எனது உடலை எக்காலமும் தூய்மையாய் வைத்துக் கொள்ளமுயல்வேன்.-கீ

* * * *

நினது முகம் மறைந்தால் எனது நெஞ்சம் ஓய்வற்றும் துடிக்கின்றது. வேலைக் கடலில் எனது வேலையும் முடிவுறாமல் திகைக்கிறது. இன்று என் பலகணியின் முன்,

கோடை பெருமூச்சிடுகிறது, குழம்பி ஒலிக்கின்றது, வண்டுகள் பூந்தோட்டத்தில் தேனிசை பொழிகின்றன. -கீ

* * * *

எனது வாழ்வை நாணற்குழல் போல் நேராக வைத்து அதில் ஏழிசை ஒலியை பெய்தருள்வாயாக. -கீ

* * * *

ஆடையில் அழகுறப்புனையப்பட்ட குழந்தை கழுத்தில் தொங்கும் அணிமணி ஆரத்தால் கட்டுண்டு, விளையாட்டின் உரிமை இன்பத்தை இழக்கிறது. அதன் ஆடையே படிக்குப் படி பெருந்தடையாக வளர்கிறது. -கீ

* * * *

சுமையின் பொறுப்பை ஏற்றுக் கொள்பவனிடம் உனது கவலையை விட்டுவிடு. வருந்தித் திரும்பிப் பார்க்காதே. -கீ

* * * *

நான் பாடவந்த பாட்டை இன்றுவரைப் பாடவில்லை. எனது யாழினை இசை கூடிப் பண் அமைப்பதிலேயே என் காலமெல்லாம் கழிந்துவிட்டது. -கீ

* * * *

மலர் இன்னும் இதழ் விரியவில்லை, தென்றல் மட்டும் ஆர்வத்துடன் அருகே வீசிக்கொண்டிருக்கிறது. -கீ

* * * *

காலை மென்காற்றில் தங்கயாழ் இசைமிழற்றும் போது நின் முன் தோன்றும்படி என்னை நீ கட்டளை இடுவாய் - அதுவே என் அரும்பெரும் பேறு. -கீ

* * * *

காலைக் கதிர் உதிப்பது திண்ணம், காரிருள் கழிவதும் திண்ணம், வானத்தின் வழியாக நினது வண்ண இசைக் குரல் ஒளிமயமான பொன்னோடைகளாகப் பெருக்கெடுத்துப் பாய்வதும் திண்ணம். கீ

* * * *

ஒளி, ஒளி எங்கே இருக்கிறது? ஆசையின் ஆர்வ நெருப்பால் அதைத்தூண்டு, காதல் விளக்கை உன் உயிர்ச்சுடரால் ஏற்றிவை. -கீ

* * * *

என்னை மூடியிருக்கும் போர்வை, புழுதியும் இறப்பும் கலந்த போர்வை; நான் வெறுத்தாலும், இன்னும் அதை அன்போடு பற்றி இருக்கிறேன். -கீ

* * * *

தந்தையின் சீற்றத்தில் அழும் தாயின் கண்ணீர் முகம்போல, நின் அருள்முகில் கீழே கவிந்து கிடக்கட்டும்.-கீ

* * * *

ஒளியை நிழல் துரத்திச் செல்லும், கோடையைத் தொடர்ந்து மாரிவருவதுமான இந்தச் சாலை வழியே காத்திருப்பதே எனக்கு இன்பம். -கீ

*   *   *   *

இன்று எனது உயிர் ஏன் கிளர்ந்து துடிக்கிறது? எனது நெஞ்சத்தில் ஒரு பெருங்களிப்பின் மயக்கம் ஏன் பரவிக் கிடக்கிறது? என்று எனக்குத் தெரியவில்லையே! கீ

*   *   *   *

காலை அமைதி இன்னிசைப் புட்களின் பண்ணோசை வெள்ளமெனப் பெருகுகின்றது. வண்ண மலர்கள் வழியில் பேருவகையாய்க் காட்சி அளிக்கின்றன. முகில் மண்டலத்தின் இடைவெளியில் தங்கம் செல்வமாகச் சிதறிக் கிடக்கின்றது; நாங்கள் வீதியில் செல்கிறோம், ஒன்றையும் காணவில்லை. -கீ

*   *   *   *

குழந்தைக்குப் பால்கொடுக்கும் தாய், அதை வலது கொங்கையிலிருந்து எடுத்தவுடன் குழந்தை வீரிட்டு அழுகிறது; மறு கணத்தில் இடது கொங்கையில் ஆருயிர்க்கு அமிழ்தம் கிடைக்கும் என்பதை அது உணர்வதில்லை. -கீ


*   *   *   *

தாமரையின் நூறு இதழ்களும் எப்போதும் மூடிய நிலையில் இராதென்றும் , அதனுள் கலந்துரையும் தேன் வெளியாகி விடுமென்றும் நான் நன்கு உணர்வேன். -கீ

* * * *

காற்றில் கவிழ்ந்த என் படகைக் கொண்டு இனிமேல் துறைமுகம்தோறும் அலைய முடியாது. அவைகளில் அலைபடும் நாள்கள் மலையேறி விட்டன. -கீ

* * * *



# பிரியா விடை

அமைதி, என் நெஞ்சமே நாம் பிரிந்து செல்வது இனிமையாக இருக்கட்டும்.

அது இறப்பாக இருக்கக் கூடாது. ஆனால் முழுமையாக இருக்கட்டும்.

நேயம் நினைவில் உருகப்படும்; நோக்காடு பாடல்களில் உருகட்டும்.

விண்ணில் பறத்தல் கூடுகளின் மேல் சிறகுகள் குவிவது போன்று இருக்கட்டும்.

இரவில் தென்படும் மலர் போன்று உனது கைகளின் கடைசி தொடுகை கனிவாக இருக்கட்டும்.

எழிலார்ந்த முடிவே, ஒரு கணம் நிலைத்து நில். உன் இறுதிச் சொற்களை அமைதியில் கூறு

உனக்கு நான் வணக்கம் செலுத்துகிறேன். உனக்கு வழி காட்ட விளக்கை வைத்திருக்கிறேன்.

–க.கொ

# காதலன் பரிசு

என் அன்பே ! நினது வாழ்வு ஆரம்பமாகு முன்பே இன்பக் கனவுகளென்னும் நீர் வீழ்ச்சியின் அடியில் நீ நின்றுகொண்டு, அதன் கொந்தளிப்பால் நீ வெறி கொண்டு நிற்கின்றாய், என்று நான் நினைக்கிறேன். அன்றி ஒருகால் மல்லிகை முல்லை அல்லி முதலிய மலர்கள் உனது கரத்தில் வந்து குவியவும், உனது நெஞ்சத்தில் நுழைந்து ஆரவாரிக்கவும், தேவர்கள் பூங்காவின் வழியாகத்தான் நீ சென்றனையோ?

உனது சிரிப்பே, ஒரு பாட்டு; அப்பாட்டின் செஞ் சொற்கள், கீதத்தின் ஆரவாரத்திலே மூழ்கிவிடுகின்றன. காண்டற்கரிய பூக்களின் நறுமணம். அம் முறுவல், சந்திரன் நினது நெஞ்சில் ஒளிந்திருக்க, அவனது பிரகாசம் நினது அதரம் என்னும் வாயிலைக் கடந்து ஒளி வீசுவதுபோல, அது காட்சியளிக்கிறது நான் காரணம் கேட்கவில்லை. காரணத்தையே மறந்துவிடுகிறேன், நினது சிரிப்பே புரட்சி வாழ்க்கையின் கொந்தளிப்பே என்பதை நான் அறிவேன்.

-கா.ப